உதயன்

பக்கங்கள் 24
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 214 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 14, சனி 28.06.2014

stay connected with: uthayan.print uthayanprint

Uthayan - A lively National Tamil Daily

வட்டுக்கோட்டை காந்திஜி, மோரிஸ் அணிகள் ஆட்டங்களில் அசத்தல்
பக்கம் 23

32°C

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 31km/h
ஈரப்பதம்: 45%
காற்றமுக்கம்: 1009 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:2[illegible]
சூரியஸ்தமனம்: 18:04

# அடுத்த மாதத்தின் ஆரம்பத்தில் இலங்கை வருகின்றார் ரமபோஷ

## அரசுக்கும், கூட்டமைப்புக்கும் அது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் நம்பகமான தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 28
தென்னாபிரிக்காவால் இலங்கை தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள விசேட தூதுவர் சிறில் ரமபோஷ அடுத்த மாதத்தின் முதல் வார இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளார் என்றும், அது தொடர்பில் இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் நம்பகமாகத் தெரியவருகின்றது.
ரமபோஷவின் இலங்கைக்கான பயணம் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. ஆயினும் அவர் அடுத்த மாதம் முதலாம் வார இறுதியில் இங்கு வருகை தரவுள்ளமை தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.
இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சில் அனுசரணையாளராகச் செயற்படுவதற்கு தென்னாபிரிக்கா சம்மதித்திருந்தது. அதற்கமைய இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, தென்னாபிரிக்காவுக்கு அழைத்த விசேட தூதுவர் அவர்களை அங்கு சந்தித்திருந்தார். இதன் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்ட பின்னர் பேச்

20 ஆம் பக்கம் பார்க்க

## முதியவரின் கத்தி வீச்சில் அவரது மனைவி படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
75 வயதான தனது மனைவியை உலக்கையால் அடித்து வீழ்த்திய 80 வயது முதியவர், மனைவியைக் கத்தியாலும் தாக்கினார். இந்தச் சம்பவம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று மதியம் நடந்துள்ளது. அதேஇடத்தைச் சேர்ந்த பரமசிவம் ராசு என்பவரே காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
முதியவர் மனைவியை உலக்கையால் அடித்து வீழ்த்தியுள்ளார். மனைவியின் தலையிலும் கத்தியால் தாக்கியுள்ளார். அதனால் அவரது மனைவி மயங்கி வீழ்ந்துவிட்டார். தற்போது அவருக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்படுகின்றது. தாக்குதல் நடத்திய முதியவர் அதன்பின்னர் வீட்டிலிருந்துவெளியேறிவிட்டார்

20 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணை விவரங்களை வெளியிட முடியாது

ஐ.நா. பேச்சாளர்

விரிவான தகவல் 2 ஆம் பக்கத்தில்

## சர்வதேசத்தின் பங்களிப்புடன் தமிழருக்குத் தீர்வு

### கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை



"இலங்கை அரசு பிடிவாதமாக இருக்காமல் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஐ.நாவுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்"

கொழும்பு, ஜூன் 28
"தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான கதவு ஏதோவொரு வகையில் விரைவில் திறக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளோம். ஐ.நா. மற்றும் அமெரிக்கா, இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் இலங்கைத் தமிழருக்கு விமோசனம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கின்றோம்." -

20 ஆம் பக்கம் பார்க்க

## 18 ஆவது திருத்தம் நீதித்துறைக்கு பங்கம்

### சுட்டிக்காட்டுகின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 28
அரசுக்கும், ஜனாதிபதிக்கும் சார்பான வகையில் வழக்குகளில் தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன; வழக்கு விசாரணைகள் தாமதப்படுகின்றன. இவை நாட்டின் நீதித்துறை மீது மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன. 18ஆவது அரசியல் திருத்தம் நீதித்துறைக்குப் பங்கமாகவே அமைந்துள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் நீதியரசரும், வடக்கு மாகாணத்தின் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன்.



கிளிநொச்சி - வட்டக்கச்சி மாயவனூர் விவசாய மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு புழுதி ஆற்று ஏற்றுநீர் பாசனத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நேற்று வடக்கு மாகாண முதலமைச்சரால் நடப்பட்டது. அந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
"18 ஆவது திருத்தத்தின் ஊடாக பிரதம நீதியரசரை அரசியல்வாதியான ஜனாதிபதியே நியமிக்கின்றார். அதனால் அரசியல் காரணங்களுக்காக, தனது செல்வாக்கை மேம்படுத்துவதற்காக - அதற்கு ஏதுவாக

20 ஆம் பக்கம் பார்க்க



கிளிநொச்சி - வட்டக்கச்சி மாயவனூர் விவசாய மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு புழுதி ஆற்று ஏற்றுநீர் பாசனத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 32 மில்லியன் ரூபா மதிப்பீட்டைக் கொண்ட இந்தத் திட்டத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அடிக்கல் நட்டார்.

## குருநகரில் வீடுகள் தீக்கிரை

யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று 3 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.
அவற்றில் இருவீடுகள் முற்றாகவும், ஏனைய வீட்டின் அரைவாசிக்கும் அதிகமான பகுதியும் தீயால் நாசமாகியுள்ளன.
அயலவர்கள் மற்றும் அந்தப் பகுதி இளைஞர்கள், மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
தீ விபத்துக் குறித்து யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டபோதும், அவர்கள் உரிய நேரத்துக்கு அந்தப் பகுதிக்கு வரவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

விரிவான தகவல் 4 ஆம் பக்கத்தில்

## வலி. வடக்கு மக்களுக்காக நலன்புரி நிலைய காணிகள்

### சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
வலி.வடக்கு மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளைச் சுவீகரித்து, அவற்றில் அவர்களைக் குடிய

20 ஆம் பக்கம் பார்க்க

## புலம்பெயர்ந்த தமிழர்களை இணைக்க சர்வதேச மாநாடு

### ஜூலை 23 முதல் 27 வரை மொரீசியஸில் நடக்கும்

போர்ட் லூயிஸ், ஜூன் 28
வெளிநாடுகளில்புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும்முதலாவது அனைத்துலக மாநாடு, மொரீசியஸில் ஜூலை 23ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.
மொரீசியஸ் பிரதமர் நவின் ராம்கூலம் மாநாட்டை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
இதுகுறித்துப் புலம் பெயர்ந்த

20 ஆம் பக்கம் பார்க்க

## ஜெயக்குமாரியின் வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

### அரச சட்டத்தரணி வராததால்



யாழ்ப்பாணம், ஜூன் 28
விபூசிகா மற்றும் ஜெயக்குமாரி சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான வழக்கு

20 ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலா பயணிகள் வருகை வீழ்ச்சி

கொழும்பு, ஜுன் 28

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று, சுற்றுலா அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளது. அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளை அடுத்தே இந்த வீழ்ச்சி ஏற்பட்டள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றுலாப் பயணிகள் மூலமே இலங்கைக்குப் பெரும் அன்னியச் செலாவணி கிடைக்கின்றது. (ற)

# ரூ. 50 மில்லியனை இதுவரை செலவு செய்யாத ஈ.பி.டி.பி. வசமுள்ள நெடுந்தீவுப் பிரதேச சபை

## டிசெம்பருக்குள் செலவிடாவிட்டால் அது திரும்பிச் செல்லும் நிலை

யாழ்ப்பாணம், ஜுன் 28

நெல்சிப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 50 மில்லியன் ரூபா நிதி இன்னமும் ஈ.பி.டி.பியின் ஆளுகைக்குட்பட்ட நெடுந்தீவுப் பிரதேச சபையினால் செலவு செய்யப்படாமலேயே உள்ளது. எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் அந்த நிதி செலவு செய்யப்படாவிட்டால் திரும்பிச் செல்லும்நிலைகாணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கியினால் கடந்த 2010 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாகவே பயன்படுத்தப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச சபைக்கு நெல்சிப் திட்டத்தில் நூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 50 மில்லியன் ரூபாவுக்கு, மக்கள் போக்குவரத்துக்குப் படகு கொள்வனவு செய்வதென்று நெடுந்தீவு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

கடந்த 2011 ஆம் ஆண்டு படகு கொள்வனவு செய்வதென்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனாலும் இதுவரை பிரதேச சபைக்குரிய படகு கொள்வனவு செய்யப்படவில்லை என்பதுடன் அதற்கு ஒதுக்கிய 50 மில்லியன் ரூபா நிதி இன்னமும் பயன்படுத்தப்படாமலேயே உள்ளது.

நெல்சிப் திட்டம் கடந்த வருடத்துடன் முடிவடைவதாகத் தெரிவிக்கப்பட்ட போதும், பின்னர் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டது. அதனடிப்படையில் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் நீடிக்கப்பட்ட காலமும் முடிவடைகின்றது. இவ்வாறானதொரு நிலையில் ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் உள்ளமையால், அந்த நிதி திரும்பிச் செல்லும் நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# விசாரணைகள் ஆரம்பித்துவிட்டன ஆயினும் விவரங்கள் கூறமுடியாது

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக பேச்சாளர் ருபேர்ட் கொல்வில் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெற்ற போரின்போது இடம்பெற்ற மீறல்கள் குறித்த விசாரணைகள் நடந்து வருகின்றன என்றும், எனினும் அது தொடர்பான மேலதிக துல்லியமான விவரங்களை வெளியிட முடியாது என்றும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் பேச்சாளர் ருபேர்ட் கொல்வில், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில்,

"விசாரணைக்கு உதவுவதற்கான மூன்று நிபுணர்கள் நியமிக்கப்பட்டதையடுத்து, தீவிரமான தொழில்முறை விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விசாரணைகள் குறித்த மேலதிகமான துல்லியமான விவரங்களையோ, எதிர்கால செயற்பாடுகள் குறித்தோ விவரிக்க முடியாது.

எவ்வாறாயினும், விசாரணைகள் காத்திரமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றன" என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## ஜப்பானின் பிரதமர் இலங்கை வருகிறார்?

ஜப்பானின் பிரதமர் சின்ஸோ அபே இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானிய அரச தரப்புத் தகவல்களே இவ்வாறு கூறுகின்றன.

இலங்கையில் ஜப்பானிய பிரதமர் மேற்கொள்ளும் சந்திப்புக்கள் குறித்து தகவல்கள் ஏவையும் வெளியாகவில்லை. பங்களாதேஷின் பிரதமர் ஏற்கெனவே கடந்த மே மாதம் ஜப்பானில் வைத்து உறுதியளித்தப்படி, ஜப்பானுக்காக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் நிரந்தரமற்ற உறுப்பு நாட்டுக்கான போட்டியில் இருந்து விலகும் அறிவிப்பை வெளியிடுவார் அபேயின் பயணத்தின் போது வெளியிடுவார் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா, ஜப்பானுக்கு சென்றிருந்தபோது அபே தமது நாட்டுக்கு பயணம் செய்யும் போது இதற்கான அறிவிப்பை வெளியிடவுள்ளார் என்று தெரிவித்திருந்தார். (ற)

# மங்கள சமரவீரவை உடன் கைது செய்க

## ஐ.தே.க. எம்.பி. கோரிக்கை

மங்கள சமரவீர தவறு செய்து விட்டார் என்று சொல்லிக் கொண்டிருக்காமல் அவரை உடனடியாகக் கைது செய்யுங்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் மங்கள சமரவீர புலனாய்வாளர்கள் மூவரின் பெயர்களை வெளிப்படுத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; மங்கள சமரவீர தவறு செய்து விட்டார் என வாயால் சொல்வதை விட்டு அவரைக் கைது செய்யவேண்டும். அரச இரகசியங்களை வெளிப்படுத்தித் தவறு செய்திருப்பின் மங்கள சமரவீரவை கைது செய்ய வேண்டும். நாடாளுமன்றத்துக்கு வெளியால் மங்கள சமரவீர தெரிவித்த கருத்து நாடாளுமன்ற விதிகளுக்கு உட்படாதது. அவ்வாறே மங்கள சமரவீரவால் தெரிவிக்கப்பட்ட தகவல்தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்க முடியும் - என்றார்.

> “ மங்கள சமரவீர தவறு செய்து விட்டார் என வாயால் சொல்வதை விட்டு அவரைக் கைது செய்யவேண்டும்.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களுடன் மூன்று புலனாய்வாளர்களுக்கும் தொடர்புள்ளதாக மங்கள சமரவீர தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-10)

# உண்ணா விரதமிருந்த இலங்கை தமிழர் கைது

## சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டார்



சென்னை, ஜுன் 28

தன்னையும் தனது குடும்பத்தினரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு பதிலாக ஐக்கிய நாடுகளில் ஒப்படைக்க வேண்டுமென்று இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்து சாகும் வரையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவந்த இலங்கை அகதியான செந்தூரன் என்பவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் தற்போது சென்னையிலுள்ள புழல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

இவர் கடந்த செவ்வாய்க் கிழமையிலிருந்து உண்ணா விரதத்தை மேற்கொண்டுவந்திருந்தார். நலன்புரி நிலையத்துக்கு வெளியிலான இவரது நடமாட்டம் மற்றும் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காக இவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இவர் செங்கல்பட்டிலுள்ள சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். பின்னர் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சிறப்பு முகாமுக்கு ஏனைய 30 கைதிகளுடன் இவர் மாற்றப்பட்டிருந்தார்.

செந்தூரனை திருப்பி இலங்கைக்கு திருப்பியனுப்புவது தொடர்பான அனுமதியை மத்திய அரசின் உட்துறைதிணைக்களத்தின் அனுமதிக்காக எழுத்து மூலம் கடந்த வருடம் மாநில அரசு கோரியிருந்தது. இந்த திருப்பி அனுப்பும் உத்தரவுக்கு எதிராக இவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தன்னையும் தனது குடும்பத்தினரையும் ஐ.நாவில் ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து செந்தூரன் அடையாள உண்ணா விரதத்தை மேற்கொண்டுள்ளார் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ற-10)

# வெள்ளவத்தை கடற்பரப்பில் படகு விபத்து; ஒருவர் மாயம்

கொழும்பு, ஜுன் 28

வெள்ளவத்தை கடற்பரப்பில் மீன்பிடிப் படகொன்று கவிழ்ந்ததில் ஒருவர் காணாமற்போயுள்ளார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு 10.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தை கரையோரப் பகுதியிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் இந்தப் படகு கவிழ்ந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த 40 வயதான ஒருவரே சம்பவத்தில் காணாமற்போயுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. படகிலிருந்து மற்றைய இருவரும் காப்பாற்றப்பட்டுள்ளனர். காணாமற்போனவரை தேடும் பணிகளில் பொலிஸ் மற்றும் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை- காலி - ருமஸ்சலாவில் மீன்பிடி படகு ஒன்று கவிழ்ந்ததில் காணாமற்போன ஒருவரை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நபர் நேற்றுமுன்தினம் காலை கடற் றொழிலுக்காக சென்றிருந்தபோதே இந்த இடர் ஏற்பட்டுள்ளது. படகில் அன்று 9 பேர் பயணித்துள்ளதுடன், ஏனைய 8 பேரும் காப்பாற்றப்பட்டுள்ளனர். (ற-10)

# அளுத்கம வன்முறை குறித்து மன்னிப்பு கோரினார் ராஜித

கொழும்பு, ஜுன் 28

அளுத்கம மற்றும் தர்காநகர் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் மன்னிப்புக் கோருவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அளுத்கம தர்காநகர் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மையினால் சேதமடைந்த வீடுகளை புனரமைக்கும் பணிகள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று களுத்துறையில்நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உங்களுக்குஏற்பட்ட நிலைமை குறித்து நாங்கள் கருத்து தெரிவிக்கின்றோம். எமது இதயப் பூர்வமாக குரல் எழுப்புகின்றோம். அதிகளவான கவலை எனக்கே உள்ளது. ஏனெனில் இந்த தொகுதியை மிகவும் அழகாக நான் வைத்திருந்தேன். கண்ணாடிப் பாத்திரமொன்றை நான் செய்திருந்தேன். அந்த கண்ணாடி பாத்திரத்தை, சில குண்டர்கள் வந்து உடைத்து சேதப்படுத்தினார்கள். மீண்டும் முதலிருந்து நான் அதனை செய்ய வேண்டும். உங்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் இந்த மாகாணத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியிலும், உங்களின் சேவகன் என்ற ரீதியிலும், நான் மன்னிப்பு கோருகின்றேன்."- என்று தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன, பாதுகாப்பு சேவை தலைமையகத்தின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் யூ.ஏ.பி. மெதவல உள்ளிட்ட முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர். (ற)

கனடா படிக்க - 8 இலட்சம் உழைக்க
3 வருட விசா -
30 நாள்களில் பறக்கலாம்

செங்கேன் விசா
இத்தாலி, சுவிஸ், பிரான்ஸ், நோர்வே
2 வருட விசா - 3 வருட விசா
வெறும் 15 இலட்சங்கள்

நேர்முகத் தேர்வு 02.07.2014
யாழ். அலுவலகத்தில்

ஐரோப்பிய நாடான சைப்பிரஸில்
படிக்க கைநிறைய உழைக்க
2 வருட விசா

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016,
021 568 9090 (49412)(10)

# கலாசார மண்டப பூர்வாங்கப் பணி இன்னும் 3 வாரங்களில் ஆரம்பம்

## இந்திய அரசால் மாநகர சபைக்கு அமைத்துக் கொடுக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 28
இந்திய அரசால் 1,200 மில்லியன் ரூபா செலவில் அமைத்துத் தரவுள்ள கலாசார மண்டபத்துக்கான பூர்வாங்கப் பணிகள் மூன்று வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

கலாசார நிலைய கட்டடம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

புல்லுக்குளத்துக்குத் தெற்குப் பகுதியில் முன்னைய யாழ். மாநகர சபை திறந்தவெளிய ரங்கில் தமிழர்களின் வடபகுதியின் கலாசாரத்தை முழுமையாக எடுத்துக்காட்டும் வகையில் மண்டபம் அமைய வேண்டும் என்பதால் வரை படப் போட்டிகள் இடம்பெற்றன. இந்திய தூதரகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற போட்டிக்கான குழுவில் தானும் அங்கம் வகித்ததாகவும் தெரிவித்த முதல்வர் போட்டிக்கு கிடைக்கப் பெற்ற 75 வரைபடங்களில் இருந்து சிறந்தவையாக 5 வரைபடம் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் மிகச் சிறந்த வரைபடம் ஏற் றுக்கொள்ளப் பட்டதாகவும் இந்த வரை படத்தில் திராவிட கலாசாரத் தைப் பிரதிபலிக்கும் சகல அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதுவே தெரிவுக்குழுவால் முடிவுசெய்து அங்கீகரிக்கப்பட்டது.

ஜனாதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் புதுடில்லியுடன் தொடர்புகொண்டு இந்திய வீட்டுத்திட்டம் உட்பட பல விடயங்கள் தொடர்பாக கேட்டறிந்தபோது; அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது போன்ற ஒரு சிறந்த கலாசார மண்டபத்தை யாழ்ப்பாணத்தில் அமைத்துத் தரக்கோரியிருந்தார். யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது குறித்து கலந்துரையாடப் பட்டு சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக இந்தக் கலாசார மண்டபத்தை அமைக்க வேண்டும்என்று முடிவு செய்யப்பட்டது.

முதல்வர் மேலும் குறிப்பிடுகையில்; நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த வரைபடம் தொடர்பாக மாநகர சபை உறுப்பினர் மற்றும் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டதை அடுத்து சட்ட விதிகளுக்கு அமைய மாநகரசபையால் வரைபடம் என்னிடம்சமர்ப்பிக்கப் பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபை அதனை ஆராய்ந்து உரிய அங்கீகாரத்தை வழங் கும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரி தெரிவித்தார்.

உடனடியாகவே மாநகரசபை குறித்த வரைபடத்தை நகர சபை அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்பிவைக்கும். அடுத்து 3 வாரங்களில் கலாசார மண்டபத்துக்கான பூர்வாங்க பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# மாநகரசபை ஊழியர்கள் நால்வருக்கு பதவிநீக்கம்

**தங்கள் இஷ்டத்துக்கு எவரது அனுமதியும் இன்றி குறித்த வாகனம் எடுத்துச் செல்லப்பட்டது.**

யாழ்ப்பாணம், ஜூன் 28
சில தினங்களுக்கு முன்னர் அராலியில் மின் கம்பத்துடன் மோதுண்ட யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனத்தைச் செலுத்திய சாரதி உட்பட நால்வர் அவர்களது பதவிகளில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.


யாழ்.மாநகர சபையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வரிடம் குறித்த வாக்ன விபத்து தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறும்போது;

தாங்கள் இஷ்டத்துக்கு எவரது அனுமதியும் இன்றி குறித்த வாகனம் எடுத்துச் செல்லப் பட்டது. அவர்கள் மதுபோதையில் வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளதாகவும் அராலிப் பகுதியில் வாகனம் விபத்துக் குள்ளானதாகவும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக இரண்டு சாரதிகள் இரண்டு உத்தியோகத்தர்களுமாக நால்வர் தற்காலிக பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (வ-7)

# போதையில் ரகளை செய்த தந்தையை கண்டித்த மகளுக்கு வாள்வெட்டு



தென்மராட்சி, ஜூன் 28
மதுபோதையில் வீட்டில் ரகளை புரிந்த தந்தையைக் கண்டித்த மகள் வாள் வெட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மீசாலை மேற்கில் இடம்பெற்றது.

தலை, கை, கால் ஆகிய இடங்களில் காயமடைந்த 22 வயது இந்த இளம்பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

மதுபோதையில் தாயாரைத் தாக்கியபோது தடுத்தபோதே தந்தை வாளால் வெட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வடமாகாண சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட 7 பிரேரணைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 28
நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில் 7 பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் எதிர்க்கட்சி உறுப்பினரின் பிரேரணையொன்று அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் ஆளுங்கட்சி உறுப்பினர் அ.அஸ்மினால் அண்மையில் பேருவளை, அளுத்கம, தர்காநகர், வெலிப்பன்ன ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைக் கண்டிப்பதோடு, நாட்டில் பரவலாக நடைபெறுகின்ற இனவாத அடிப்படையிலான தாக்குதல்களுக்கு கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, இத்தகைய இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தீவிர அமைப்புக்கள், செயற் பாட்டாளர்கள் மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரையும், சட்டமா அதிபரையும் இந்தச் சபை கோருவதாக முன்மொழியப்பட்ட பிரேரணையை இ.இந்திரராசா வழி மொழிந்தார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரனால், முல்லைத்தீவு மாத்தளன் சாலை பேப்பாரப்பிட்டி பகுதியில் மேற்கொள்ளப்படும் தடைசெய்யப்பட்ட கடல் அட்டை பிடிப்பு நிறுத்தப்படவும், ஏனைய பகுதிகளில் நடைபெறும் தடைசெய்யப் பட்ட சுருக்கு வலை பயன்படுத்துதல், வெளிச்சம் போட்டு மீன் பிடித்தல் போன்றவற்றை நிறுத்தவும், பெரும்பாலும் இவற்றுக்கு காரணமான நாயாற்றுக் கடற்கரையோரத்தில் வந்து அத்துமீறிக் குடியேறியுள்ள தென்னிலங்கை மீனவர்கள் திருப்பி அனுப்பப்படவும் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்தச் சபை கோருகின்றது என்று முன்மொழியப்பட்ட பிரேரணையை ம.அன்ரனி ஜெகநாதன் வழிமொழிந்தார்.

விளையாட்டுத்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள எமது மாகாணத்தை முதன்மையான இடத்துக்குக் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் இளைஞர் - யுவதிகள் பயிற்றுவிக்கப்பட வேண்டுமெனவும் மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு இவ் விடயத்தில் அர்ப்பணிப்புடனும், மாவட்டங்களுக்கு கிடையில் பாரபட்சமின்றியும் செயற்பட வேண்டும் என்றும் முன் மொழியப்பட்ட பிரேரணையை, ம.அன்ரனி ஜெகநாதன் வழி மொழிந்தார்.

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்குக் கடந்த 2006 ஆம் ஆண்டு இலங்கை ஆசிரியர் தரம் 3 -II இற்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இதே காலப் பகுதியில் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படாமல் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ஆசிரிய உதவியாளர் என்ற நியமனமே வழங்கப்பட்டது. எனவே ஒரே காலப் பகுதியைக் கொண்ட வன்னித் தொண்டர் ஆசிரியர்களையும் இலங்கை ஆசிரியர் சேவைத் தரம் 3 - II இற்கு உள்ளீர்ப்புச் செய்ய வேண்டுமென்று கல்வி அமைச்சைக் கோருவதாக முன்மொழியப்பட்ட பிரேரணையை ம.அன்ரனி ஜெகநாதன் வழிமொழிந்தார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் பா.கஜதீபனால், கடந்த 2009, 2013 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்ட ஆசிரிய உதவியாளர்களை, அவர்கள் உதவியாளர்களாக உள்வாங்கப்பட்ட காலப் பகுதியிலிருந்தே ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்டதாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக மத்திய கல்வி அமைச்சைக் கேட்டுக் கொள்வதாக முன்மொழியப் பட்ட பிரேரணையை ப.அரியரட்ணம் வழிமொழிந்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் இ.அங்கஜனால், வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கணித, விஞ்ஞான, நுண்கலைப் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாகாண கல்வி அமைச்சை இந்தச் சபை கோருவதாக முன்மொழியப் பட்ட பிரேரணையை க.சர்வேஸ்வரன் வழிமொழிந்தார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து மீளப் பெறப் பட்ட பாதுகாப்பை மீளவும் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா முன் மொழிந்த பிரேரணையை, எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா வழி மொழிந்தார். (ற-5)



மன்னார் திருக்கேதீஸ்வரம் பாலாவி நீர் ஏரியில் தற்போது தண்ணீர் அதிகரித்துக் காணப்படுகின்றது. ஏரியில் தண்ணீர் அதிகரித்துள்ளதால் பாலாவிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதில் மகிழ்வோடு நீராடிச் செலகின்றனர். (வ-17)

# சாகும்வரை பட்டினிப்போர்; நிரந்தர நியமனம் கோரி

## வவுனியா நகரசபை தற்காலிக பெண் ஊழியர் இருவர்



வவுனியா, ஜூன் 28
வவுனியா நகர சபையில் தற்காலிகமாக கடமையாற்றிய இரண்டு பெண் ஊழியர்கள் நிரந்தர நியமனம் கோரி நேற்று நகரசபையின் முன் உள்ள பொங்குதமிழ் நினைவு தூபி முன்பாக சாகும்வரை பட்டினிப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதேவேளை - கடந்த 24ஆம் திகதி குறித்த ஊழியர்கள் இருவரும் கூரைமேல் ஏறியும் வீதியின் முன்பாக இருந்தும் போராட்டம் மேற்கொண்டனர். தொடர்ந்து 25, 26 ஆகிய திகதிகளிலும் பொங்கு தமிழ் நினைவுத் தூபி முன் அமைதியான முறையில் பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தை மேற்கொண்டனர்.

எனினும் வடமாகாண சபையினரிடமிருந்து இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. இதனையடுத்து நேற்று குறித்த பொங்குதமிழ் நினைவுத் தூபிக்கு முன் சாகும் வரை பட்டினிப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபடும் பெண்களை நகரசபை எல்லைக்குள்ளே நுழைவதற்கு நகர சபையினர் தடைவிதித்துள்ளனர்.

இதுகுறித்து சாகும்வரை பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களிடம் கேட்டபோது அவர்கள் "நாங்கள் நகரசபையில்2012 ஆம்ஆண்டு முதல் நிரந்தர நியமனத்துக்காக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஆனால் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் சாதகமான பதிலை அரசியல்வாதிகளோ அரசோ எமக்கு வழங்கவில்லை. எமது குடும்பம் வறுமையில் வாடுகிறது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் தற்காலிக நியமனத்தில் கடமையாற்றிய எம்மை நகர சபை கடமையாற்றாது நிறுத்தியுள்ளது.

இந்நிலையில் எமது குடும்ப பொருளாதாரத்தைக் கவனத்தில் எடுத்து நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை சாகும்வரை உண்ணாவிரதத்தை முன்னெடுக்கவுள்ளோம். இனியாவது கருணை கூர்ந்து வட மாகாண சபை சாதகமான பதிலைத் தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் தெரிவித்தனர். (வ-402)

### சாரதிக்கு விளக்கமறியல்



யாழ்ப்பாணம், ஜூன் 28
பாடசாலை மாணவனை மோதிக் கொன்ற குற்றச்சாட்டில் கைதான வாகனச் சாரதியை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக மாணவன் ஒருவன் மினிபஸ்ஸில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பயனின்றி உயிரிழந்தான். குறித்த பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

சாரதி நேற்று யாழ்.நீதிமன்றில் பொலிஸரால் முற்படுத்தப்பட்டபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ற-4)

# தனஞ்செயனுடன் எதுவித முற்பகையும் எனக்கில்லை

## கதிரிப்பாயில் கொலையுண்ட மதுசாவின் கணவர் நீதிமன்றில் நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
"தனஞ்செயனுக்கும் எனக்கும் தனிப்பட்ட பகையில்லை"- என்று நேற்று நீதிமன்றில் தெரிவித்தார் தனஞ்செயனின் வாள்வெட்டிற்கு இலக்காகிச் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய தங்கவேல் யசோதரன்.

யாழ். அச்சுவேலி கதிரிப்பாயில் கடந்த மே மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற முக்கொலை தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது கொலையுண்ட மதுசாவின் கணவரான யசோதரன், மன்றில் சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியமளிக்கையில்,
"கொலைகள் நடைபெற்ற அன்று நான் பிறிதொரு அறையில் படுத்திருந்தேன், 'எங்களை வெட்டுகின்றான் காப்பாற்றுங்கள்' என்ற அலறல் சத்தம் கேட்டு வெளியில் வந்தபோது எனக்கும் வெட்டு வீழ்ந்தது. அதனால் நான் சுயநினைவிழந்தேன். அதன் பின்னர் நடந்தவை தெரியவில்லை"- என்று தெரிவித்தார்.

அத்துடன் அவர், தனக்கும் தனஞ்செயனுக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எதுவும் இல்லாத போதும், எனது மனைவி குடும்பத்திற்கும் அவருக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்ததைத் தான் அறிந்திருந்ததாகவும் சாட்சியத்தின் போது தெரிவித்தார்.

அதையடுத்து தனஞ்செயனை எதிர்வரும் ஜூலை மாதம் 11ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜோய் மகிழ் மகாதேவா உத்தரவிட்டார்.

யாழ். அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியில் மே மாதம் 4 ஆம் திகதி அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மகள் மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இருவர் படுகாயமடைந்த னர்.

இந்தக் கொலை தொடர்பில் படுகாயமடைந்த தர்மிகாவின் கணவரான பொ.தனஞ்செயன் ஊரெழு பகுதியில் வைத்து கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். தர்மிகாவின் சகோதரியும் இந்த வாள் வெட்டில் உயிரிழந்தவருமான மதுசாவை இரண்டாவதாகத் திருமணம் செய்ய முடியாத நிலையிலே குறித்த நபர் (தர்மிகாவின் கணவர்) மேற்படி படுகொலைகளைச் செய்தார் என்று கூறப்படுகின்றது. (ற)



அளுத்கம தர்கா நகரில் அண்மையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளில் சேதமடைந்த வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளை மீள் நிர்மாணம் செய்யும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சுமார் 700 இராணுவத்தினர் இந்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது தற்காலிக பாதுகாப்பாம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு தற்காலிகமானது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களான, திருமதி அனந்தி சசிதரன், ச.சுகிர்தன், பா.கஜதீபன் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மாகாணசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு வழங்கப்பட்ட அமைச்சரவைப் பாதுகாப்பும் திடீரென்று விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வவுனியா மாவட்ட பெரும்பான்மை உறுப்பினருக்குவழங்கப்பட்டபொலிஸ் பாதுகாப்பு இன்னமும் நீக்கப்படவில்லை.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர், குறித்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு மீண்டும் பொலிஸ் பாதுகாப்பு தேவைப்படுமாயின் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளரிடம் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். குறித்த மாகாண சபை உறுப்பினர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்தது தற்காலிக பாதுகாப்புத்தான் என்றும் தெரிவித்துள்ளார். (ற-5)


# பயங்கரவாதக் குற்றச்சாட்டில் கைதானவர் விடுவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 28
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பெண் மீதான குற்றப் பத்திரத்தை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப்பெற்றமையால் அவர் யாழ்.மேல்நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. குறித்த பெண் வவுனியா நீதிமன்றில் ஏற்கனவே ஒரு பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வழக்கொன்றில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அதனாலேயே அவர் மீதான குற்றச்சாட்டை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப் பெற்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கொண்டு 1993 ஆம் ஆண்டு காலத்தில் பூநகரியில் இராணுவத்தினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியதாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. அவர் மீதான குற்றச்சாட்டுப் பத்திரத்தை சட்டமா அதிபர் திணைக்களம் மீளப்பெறுவதாக அறிவித்ததையடுத்து அவர் குற்றச்சாட்டிலிருந்தே விடுதலை செய்யப்பட்டார். எனினும் அவர் தற்போது அனுபவித்து வரும் புனர்வாழ்வு நிறைவடைந்த பின்னரே அவர் விடுதலையாக முடியும். (ற-4)











யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் யாழ்.நீதிமன்றை அண்மித்து கடற்கரைக்குச் செல்லும் வீதியோரமாக அமைந்துள்ள வீடொன்றில் பற்றியெரிந்த தீ, அடுத்துள்ள இரு வீடுகளுக்கும் பரவியது. அதனால் இரு வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகியதுடன், ஒரு வீட்டின் அரைவாசிக்கும் அதிகமான பகுதி தீயால் நாசமாகியுள்ளது. வீட்டில் இருந்த அடுப்பில் இருந்தே தீ பரவியிருக்கக் கூடும் என்று கூறப் படுகின்றது. தீ விபத்தை அடுத்து யாழ்.மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் உடனடியாக அங்கு வரவில்லை. அவர்கள் வந்துசேர்ந்தபோது வீடுகளின் பெரும்பகுதி தீயால் நாசமாகியிருந்தன. அயலவர்கள், அந்தப் பகுதி இளைஞர்கள் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ற-4.21)

# ஐ.நாவுடன் ஒத்துழைத்துச் செயற்படாவிட்டால் நாட்டுக்கு எதிராக கடும் நடவடிக்கை வரலாம்

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 28
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் அரசு ஒத்துழைத்துச் செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் கடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படலாம் என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை உறுப்பினரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல.

ஐ.நா. விசாரணைக்குழு விவகாரம் குறித்து நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

"உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்துமாறு அரசிடம் பல தடவைகள் நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். எனினும், இதற்கு சாதகமான பதில்களை வழங்காது அரசு மெளனம் காத்ததாலேயே இன்று



விடயம் கடல் தாண்டி ஐ.நா. வரை சென்றுள்ளது. இதற்கு அரசு தான் முழுப் பொறுப்பு.

எனவே, ஐ.நாவுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதற்கு அரசு முன்வரவேண்டும்.

இல்லையேல், எதிர்காலத்தில் நாட்டுக்கு எதிராக சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலை உருவாகலாம். அத்துடன், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த ஆலோசனைகளை அரசு கருத்திற்கொண்டிருக்குமானால் இன்று அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கமாட்டாது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டினார். (ஓ)

### முல்லைத்தீவை அடுத்து ஆணைக்குழுவின் அமர்வு மன்னாரில்

கொழும்பு,ஜூன் 28
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அடுத்த அமர்வை மன்னாரில் நடத்துவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை குறித்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் உறுதியாகத் தெரிவித்தார்.

காணாமற் போனோர் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது. இதன் போது 224 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு 1983 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை தெரிந்ததே.

ஜனவரி மாதம் கிளிநொச்சியிலும், பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்திலும் மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் ஏற்கனவே அமர்வுகள் இடம்பெற்றிருந்தன. (ஓ)

# நடவடிக்கையை நியாயப்படுத்தவே பலமான குழுவை நியமித்தார் நவி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்க பொதுச்செயலர் கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 28
இலங்கைக்கு எதிரான தனது நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காகவே சிறப்புத் தேர்ச்சி மிக்க மூவர் அடங்கிய ஆலோசனைக்குழு ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமித்துள்ளார் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக்குழு குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ள குழுவுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்காக நவநீதம்பிள்ளை நியமித்துள்ள குழுவில் இடம்பெற்றுள்ள மூவரும் உலகளவில் பிரசித்தி பெற்ற நபர்கள். அவர்களை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே, இவ்வாறானவர்களை நியமிப்பதன்மூலம், தனது பொய்யான அறிக்கையை நியாயப்படுத்துவதே நவநீதம்பிள்ளையின் நோக்கமாகும். இந்தக் குழுவின் நியமனத்தின் பின்னணியில் உள்நோக்கம் இருக்கின்றது.



அதேவேளை, மேற்படி குழுவின் முன்னிலையில் சாட்சியம் வழங்குவதற்கு சட்டரீதியாக எவருக்கும் சிக்கல் இல்லை- என்றார். (ஓ)

# நூடில்ஸ் தயாரிப்பு நிலையம் முற்றுகையிடப்பட்டுச் சோதனை

## 25 ஆயிரம் கிலோகிராம் பறிமுதல்

கொழும்பு,ஜூன் 28
கொழும்பு, பாலத்துறை, சேதவத்தை பகுதியில் நூடில்ஸ் தயாரிப்பு நிலையம் ஒன்றை நுகர்வோர் விவகார அதிகார சபையினர் சுற்றிவளைத்து சோதனை நடத்தினர்.

அந்த நிலையத்திலிருந்து நுகர்வுக்கு உதவாத சுமார் 25,000 கிலோகிராம் நூடில்ஸ் பறிமுதல் செய்யப்பட்டதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்த நூடில்ஸ் தொகை நேற்றுமுன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான நூடில்ஸ் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

காலாவதியான மா மற்றும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி நூடில்ஸ் தயாரிக்கப்பட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நூடில்ஸ், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு விற்பனைசெய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு கூறியுள்ளது.

நுகர்வுக்கு உதவாத நூடில்ஸ் தயாரித்த சம்பந்தப்பட்ட நிலையத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. (ஓ)

# இலங்கையும் மாலைதீவும் புதனன்று 3 உடன்படிக்கைகளில் கைச்சாத்து

கொழும்பு,ஜூன் 28
இலங்கை அரசுக்கும் மாலைதீவு அரசுக்கும் இடையில் மூன்று இருதரப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் கடந்த புதன்கிழமை மாலைதீவு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் அப்துல் கயூம் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

முதலாவது, சுகாதாரத்துறையின் அபிவிருத்திக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையாகும். இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், மாலை தீவு சுகாதார மற்றும் ஆண், பெண் சமூகநிலை தொடர்பான அமைச்சர் திருமதி மரியம் ஷகீலாவும் அதில் கைச்சாத்திட்டனர்.

சுகாதாரத்துறையில் சிறப்பறிஞர்களையும் பயிற்சிபெற்ற பணியாளர்களையும் பரிமாறிக் கொள்ளுதல், தாதிமார் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் என்பவை இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவது, இலங்கை முதலீட்டுச் சபைக்கும் மாலைதீவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையிலான உடன்படிக்கையாகும். இரு நாடுகளுக்குமிடையிலான முதலீட்டை ஊக்குவிப்பது அதன் அடிப்படை நோக்கமாகும். அதில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், மாலைதீவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மொஹமட் சயீடும் கைச்சாத்திட்டனர்.

தேடல் மற்றும் காப்பாற்றல் சேவைகளின் இணைப்பாக்கத்துக்கான மூன்றாவது உடன்படிக்கையில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும், மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் திருமதி துன்யா மௌமூனும் கைச்சாத்திட்டனர். கடலில் விபத்துக்குள்ளாகின்றவர்களைத் தேடல் மற்றும் அவர்களைக் காப்பாற்றும் பணிகளை இணைப்பாக்கம் செய்தல் என்பன இதில் உள்ளடங்குகின்றன.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் த வாஸ் குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.அஸ்வர், உதித்த லொக்குபண்டார, லொஹான் ரத்வத்தே, ரஞ்சித் த சொய்சா, தேனுக்க விதானகமகே, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி ஷெனுக்கா செனவிரத்ன ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஓ)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர்
சுப்பிரமணியம் சிவானந்தன்
(முன்னாள் எழுதுவினைஞர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)

தோற்றம் 09.06.1959
மறைவு 20.06.2012
திதி: 28.06.2014
ஆண்டுகள் இரண்டான போதும் ஆறவில்லை எங்கள் துயரம் கள்ளம் கபடம் அற்ற உங்கள் சிரித்த முகம் எங்கள் இதயம் இருக்கும் வரை எங்கள் இதயங்களை விட்டு அகலாது
"ஆனந்தபவனம்"
கயிந்தப்பை, தெல்லிப்பழை.
மனைவி, அண்ணா, அண்ணி, தம்பி, மச்சாள், பெறாமக்கள், சித்தப்பா, சித்தி.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு
11.02.1940
விண்ணில் ஒளிர்வு
28.06.2012
அமரர் செல்லப்பா திருஞானயோகநாதன்
ஈராண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம் அன்பும் பாசமும்
நிறைந்த பொக்கிஷம் எங்கள் தந்தை
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
இராசவீதி, தோப்பு,
அச்சுவேலி.
உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
(49360)(4.6.3)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10.05.1930
மறைவு
08.07.2013
திதி: பூர்வபக்க பிரதமை
(28.06.2014)
அமரர் செல்லப்பா நடராஜா
(சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற சிரேஷ்ர நாடாளுமன்ற அறிக்கையாளரும், மூத்த பத்திரிகையாளரும்)
அன்பு தந்து பண்பு ஊட்டி ஆலமரமாக நிழல் தந்து
எங்களை வாழ வைத்த அன்பு அப்பாவே!
உங்களது கம்பீரமான தோற்றமும் வசீகரமும் சிரித்த முகமும்
கலகலப்பான பேச்சும் என்றும் எங்கள் மனதை விட்டு நீங்காது
அப்பா! ஒளிவிளக்காக இருந்து எங்களை வழிநடத்தவேண்டும்
ஓராண்டு என்ன! ஓராயிரம் ஆண்டு சென்றாலும் - எங்கள்
நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்திடையப் பிரார்திக்கின்றோம்
இந்துக் கல்லூரி வீதி,
கோண்டாவில் மேற்கு.
(49375)
(45.6.3)
என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# பட்டிப்பளையில் நேற்று நடைபெற்ற இரும்புச்சத்து விழிப்புணர்வு பேரணி



பதாகைகளை தாங்கியவாறு பேரணியாக சென்ற மக்கள்

களுவாஞ்சிக்குடி, ஜூன் 28
சுகாதார அமைச்சின் போசாக்கு ஒருங்கிணைப்புப் பிரிவின் தகவலுக்கு அமைய பட்டிப்பளைப் வேள்ட்விஸன் நிறுவனத்தின் அனுசரணையுடன் பட்டிப்பளைப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து நடத்திய இரும்புச் சத்து தொடர்பான பேரணி நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முனைக்காடு பிரதான சந்தியில் இருந்தும் பட்டிப்பளைப் பிரதான சந்தியில் இருந்தும் இரு பேரணிகள் இரும்புச் சத்து தொடர்பான பதாகைகளுடனும் துண்டுப் பிரசுரங்களுடனும் நடைபவனியாக மக்களுக்கு விழிப்பூட்டி மகிழடித் தீவு சுகாதார வைத்திய அதி காரி அலுவலகத்தைச் சென்றடைந்தன. இதன் போது கலந்து கொண்ட அனைவருக்கும் இலைக் கஞ்சி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மண்முனை தென்மேற்குப் பிரதேசசபை செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, அலுவலக உத்தியோகத்தர்கள், பட்டிப்பளை வேள்ட்விஸன் நிறுவன முகாமையாளர், இணைப்பாளர்கள், பட்டிப்பளைப் பொலிஸ் பொறுப்பதிகாரி, உக்டா நிறுவன உத்தியோகத்தர்கள், செடோ நிறுவன உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (வ)

## தொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஜூன் 28
மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று, வவுணதீவு, காத்தான்குடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர நுண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் மண்முனைப் பற்று பிரதேசத்திலுள்ள நந்தகோபன் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, 100 பேருக்கு அலங்காரப்பொருள்கள், மின்குமிழ்கள், கைகழுவும் திரவம், பசை ஆகியவை தயாரிக்கும் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஆரையம்பதி பிரதேச செயலர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.கிறிதரன், வவுணதீவு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எல். பிரசாந்தன், காத்தான்குடி உதவிப் பிரதேச செயலாளர் ஏ.எசி. அகமட் அப்கர் உள் ளீட்ட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அனுசரணையுடன் விதாதாவள நிலையங்கள் நடத்தி வருகின்றன. (வ)

## இடர்களால் பாதிப்புற்றோருக்கு மட்டக்களப்பில் 1,700 வீடுகள்

### நிர்மாணிக்க இடர் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜூன 28
மட்டக்களப்பு மாவட்டத்தில் 2012 ஆம் ஆண்டு இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென இடர் முகாமைத்துவ அமைச்சால் 1700 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கென 170 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் கே.இன்பராஜா தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் இடர் முகாமைத்துவ அமைச்சு இதனை நடைமுறைப்படுத்துகிறது.

**இன்னும் ஒரு வாரத்தில் இவ் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

இதுதொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையப் பணிப்பாளர் நாயகம் பிரசன்ன சன்டித் இதில் கலந்துகொண்டார்.

மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் கடமையாற்றும் இடர் முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இன்னமும் ஒரு வாரத்தில் இவ் வீடமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் எதிர் வரும் ஒக்ரோபர் மாதத்தினுள் இவைபூர்த்தியடையவுள்ளன.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப்பிரிவுகளிலும் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் 1700 வீடுகள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## வல்லப்பட்டையுடன் இருவர் கைது

மட்டக்களப்பு, ஜூன் 28
வல்லப்பட்டை எடுத்துச் சென்ற இருவர் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட் டுள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 6 கிலோ 533 கிராம் வல்லப்பட்டை கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (வ)


# ஆறாத் துயரில் ஆண்டுகள் ஏழு

## திருமதி கணேஸ்வரி தம்பிராஜா

அன்னை மடியில் 04★11★1956
ஆண்டவன் அடியில் 16★06★2007



**திதி: வளர்பிறை பிரதமை (28.06.2014)**

அன்னை துர்க்காதேவியின் அன்புத் தொண்டராய்
நெருக்கடியான காலங்களில் எல்லாம்
சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் சமயப் பணிகளிலும் சமூகப்பணிகளிலும்
அர்ப்பணிப்புடன் செயற்பட்டீர்!
அன்பின் ஆழத்தைக் காட்டி வலம் வந்தீர்!
எதையும் செய்திடும் உறுதியுடனும்
அகத்தில் அன்புடனும் புறத்தில் பண்புடனும்
பிரமிக்கும் திறமையுடனும் பிரகாசித்தீர்!
தாய்க்கு பாசமுள்ள மகளாய்
சகோதரர்களுக்கு ஆலோசனை வழங்கும் மந்திரியாய்
மருமக்கள் பெறாமக்களுக்கு பாசத்தின் உறைவிடமாய்
துணைவருக்கு வள்ளுவர் வழியமைந்த துணைவியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
நல்ல நண்பியாய் வாழ்ந்தீர்!
காலம் நிலையற்ற வாழ்க்கையின் தத்துவமே
நிலையானது என்பதை உணர்த்தியது
நயினை அன்னையின் கொடியேற்ற
நாளில் அன்னையின் பாதங்களை அடைந்தீர்!
ஆண்டுகள் ஏழு கடந்தாலும் உமது நினைவுகள்
எமது மனங்களில் பசுமையானதே
உமது பாதையில் பயணிக்க அன்னையின்
பாதங்களில் இருந்து வழிகாட்டுவீர்!

துர்க்கா இல்லம்
26/5, பிரம்படி வீதி, கொக்குவில்.

கணவர், தாய், சகோதரர்கள்.

(49339)(4.3.6)

# தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புண்டா?

## மேல் மாகாண சபை உறுப்பினரிடம் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணை

கொழும்பு, ஜூன் 28

**கடந்த வியாழக்கிழமை முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் அழைப்பின் பேரில் நாடளாவிய ரீதியில் பூரண ஹர்த்தால் கடைப் பிடிக்கப்பட்டது.**

அல் - குவைதா, ஜிஹாத் மற்றும் தலிபான் போன்ற அமைப்புக்கள் இலங்கையில் உள்ளனவா? அவற்றுடன் தொடர்புகளை பேணுகிறீர்களா என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தன்னிடம் 5 மணி நேரமாக விசாரணை நடத்தினர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட போதே தன்னிடம் இவ்வாறு வினவப்பட்டதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பின் அழைப்பின் பேரில் நாடளாவிய ரீதியில் பூரண ஹர்த்தால் கடைப் பிடிக்கப்பட்டது.

இது குறித்து விசாரிக்கவே அவர் குற்றத்தடுப்பு பிரிவுக்கு அழைக்கப்பட்டார்.

அங்கு, ஹர்த்தால் ஏன் கடைப் பிடிக்கப்பட்டது எனவும் அதற்கு யார் உத்தரவு கொடுத்தனர் என்றும் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்துள்ளனர்.

அத்துடன் வெள்ளவத்தைப் பகுதியில் தனியார் ஆடையகம் ஒன்றை ஹர்த்தாலுக்காக மூடுமாறு வற்புறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள ஐவரையும் தெரியுமா எனவும் விசாரித்தனர் என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (ஐ-10)

# சுகாதார அமைச்சை சாடுகிறது முன்னிலை சோஷலிசக் கட்சி

கொழும்பு, ஜூன் 28

தேசிய ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் குறித்து கடந்த 23 ஆம் திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட நகல் வரைபானது நிறைய குறைபாடுகளைக் கொண்டுள்ளதாகவே அமைந்துள்ளது எனத் தெரிவித்த முன்னணி சோஷலிசக் கட்சி, இந் நகலானது மக்கள் அபிப்பிராயத்துக்கு வருமானால் நிச்சயமாக நிராகரிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இராஜகிரியவில் அமைந்துள்ள எம்.டி.டி.ஆர். மண்டபத்தில் நடைபெற்ற அந்தக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கட்சியின் பரப்புரைச் செயலாளர் புபுது ஜயகொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த 23 ஆம் திகதி சுகாதார அமைச்சினால் தேசிய ஔடதங்கள், மருந்து உபகரணங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் குறித்து வெளியிடப்பட்ட நகல் வரையில் பல குறைபாடுகளும், முரணான விடயங்களும் அடங்கியுள்ளன.

தமிழர் சிங்களவர் வாழும் இந்த நாட்டில், தேசிய மொழிகளாக சிங்களம்- தமிழ் காணப்படும் இந்த நாட்டில் ஆங்கிலத்தில் இந்த நகல் வரைவு வெளி வந்துள்ளமை முதலாவது குறைபாடாகும்.

அத்தோடு, மக்கள் அபிப்பிராயத்துக்கு விடப்பட்டுள்ள இந்த நகல் வரைபானது சுகாதார அமைச்சின் இணையத்தில் மட்டுமே காணப்படுகின்றது.

இந்த நாட்டில் எத்தனை பேருக்கு ஆங்கிலம், இணையத்தளங்கள் குறித்து தெரியும்? அவ்வாறிருக்கும்போது இதுகுறித்து மக்களுக்கு எப்படி முழுமையாகத் தெரியவரும்?

மேலும், இலங்கையில் முதன் முதலாக சுகாதார நகலை அறிமுகப்படுத்திய சேனக்க பிபலவின் கொள்கைக்கமையவே இந்தத் திட்டம் அமைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால், இது முற்றிலும் பொய்யானதொரு தகவலாகும். இது மருந்துக் கம்பனிகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவே அமைந்துள்ளது. ஏனெனில், இலங்கைக்கு 'எமொக்ஸிலின்' மருந்து வகைகளை 118 நிறுவனங்கள் இறக்குமதி செய்கின்றன.

ஒரேவகையான எமொக்ஸிலின் ஒன்று 90 சதம்.முதல் ரூபா 30வரை விற்பனையாகின்றது. இந்த வித்தியாசத்துக்கு விலைக்கட்டுப்பாடின்மையே முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

இதுகுறித்து எந்தத் தகவல்களும் அந்த நகல் வரையில் குறிப்பிடப்படவில்லை. அத்தோடு, மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் குறித்து இதில் ஒரே வகையான கருத்துக்களே முன்வைக்கப்பட்டுள்ளன. இதுவும் மிகப் பெரிய பிழையாகும்.

இவை மூன்றுக்கும் பெரியளவிலான வித்தியாசங்கள் இருக்கின்றபோது இவை குறித்து எப்படி ஒரேவகையான தகவல்கள் காணப்படும்?

இவ்வாறு நிறைய குறைபாடுகள் கொண்டுள்ள இந்த நகல் மக்கள் அபிப்பிராயத்துக்கு வருமானால் நிச்சயமாக நிராகரிக்க வேண்டும். இதனால், நோயாளிகளுக்கு மட்டுமன்றி இலங்கை வாழ் அனைவருக்குமே ஆபத்தாகும்- என்றார். (ஒ)

# மன்னார் வாசிக்கு மறியல்

தென்மராட்சி, ஜூன் 28

வாங்கிய பணத்தை திருப்பிக்கொடுக்காமல் டிமிக்கி விட்ட மன்னார் வாசியொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

குறித்த நபர் சாவகச்சேரியைச் சேர்ந்த ஒருவரிடம் இரண்டரை லட்சம் ரூபாவை கைமாற்றாக வாங்கியிருந்தார்.

இது தொடர்பாக பல தடவைகள் பணத்தைத் திருப்பித் தருமாறு கோரியபோது காலங்கடத்தி வந்துள்ளார்.

இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்தை அடுத்து குறித்த நபர் நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 8 ஆம் திகதிவரை விளக் கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் சமூகப் பணிகள் திட்டத்தின் கீழ் மாணவர்களின் அபிவிருத்தியை மேம்படச் செய்யவும் மாணவர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் ஒரு தொகுதி வெற்றிக் கிண்ணங்கள் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபர் ந.சபாரெட்ணசிங்கியிடம் நேற்று வழங்கப்பட்டுள்ளன. பாடசாலையின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு பாடசாலையின் மாணவத் தலைவர்கள் முன்னிலையில் இவை கையளிக்கப்பட்டன. (ஒ-86)

# பொது நூலகத்தில் வள்ளல் செல்லமுத்துவின் திருவுருவப் படம்

வலி.தென்மேற்கு, ஜூன் 28

மானிப்பாயைச் சேர்ந்த கொடை வள்ளல் அமரர் அதிகாரி செல்லமுத்துவின் கடந்த கால சேவையைக் கௌரவிக்க முன்வந்துள்ள வலி.தென்மேற்குப் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தின் மேல் மாடியில் இயங்கும் பொது நூலகத்தில் அவரது உருவப் படத்தை வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட் டுள்ளது.

மானிப்பாய் பட்டின சபை இயங்கிய காலப்பகுதியில் இந்தப் பிரதேச மக்களின் குறிப்பாக மாணவர்களின் நலன்கருதி பட்டினசபை வளாகத்தில் அமரர் அதிகாரி செல்லமுத்துவின் ஞாபகார்த்தமாக உறவினர்களால் பொது நூலகம் அமைக்கப்பட்டு இயங்கி வந்தது.

பட்டின சபை பிரதேச சபையாக மாற்றமடைந்த போதிலும் நூல் நிலையம் அதே இடத்தில் இயங்கி வந்தது.

பட்டின சபை அலுவலகத்தில் சிறிய இடத்தில் இயங்கிவந்த பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம் பல வசதிகளுடன் நவீன கால முறையில் மாடிக்கட்டடமாக அமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் அதிகாரி செல்லமுத்துவின் ஞாபகார்த்த பட்டின சபை வளாகத்தில் கட்டப்பட்டிருந்த பொதுநூலகமும் முற்றாக இடிக்கப்பட்டது.

தற்பொழுது தலைமைச் செயலகத்தின் மேல் மாடியின் ஒரு பகுதியில் பொது நூலகம் இயங்கி வருகிறது. (ஒ-115)

# பண்ணாகம் மெய்கண்டானுக்கு முதலிடம்

2013 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றை வலிகாமம் கல்வி வலயத் திட்டமிடல் பிரிவு பகுப்பாய்வு செய்து வெளியிட்டபோது வலிகாமம் வலயப் பாடசாலைகளுள் முதலிடத்தைப் பெற்று யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் முன்னணியில் திகழ்கின்றது.

பாடசாலை இந்தப் பெருமையைத் தனதாக்கிக் கொள்ள அர்ப்பணிப்புடன் பாடுபட்ட அனைவரையும் மெய்கண்டான் கல்விச் சமூகத்தினர் பாராட்டியுள்ளனர். (ஒ)


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை ஆனந்தநடராஜா

(ஓய்வுபெற்ற பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆனந்தநடராஜா 25.06.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- சிவக் கொழுந்து தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுதாகர் (கனடா), மயூறினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜித்தா (கனடா), சஞ்சுதன்(கனடா), இரதீஸ்கண்ணா, கீர்திகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஆனந்த லக்சுமி மற்றும் தியாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹேனுஷாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குருபாலசிங்கம் மற்றும் கந்தையா இராசரத்தினம், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் கனகரட்ணம், தயாபரன், கேசவன், தில்லைநாதன், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் மற்றும் பானுமதி(கனடா), காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், நாகமுத்து இராசரத்தினம், நித்தியானந்தன் ஆகியோரின் சகலனும், சுகந்தினி (கொழும்பு), குருபரன்(கனடா), குணபரன்(கனடா) ஆகியோரின் சிறியதந்தையும், கேமதிவ்யம்(கனடா), கோபிசன் (கனடா), லோகிசன்(கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/22, ஆலடி வீதி,
தோணிக்கல், வவுனியா.
T.P:024 222 5809, 0015142907842

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.
(43357)
(4.6.3)


# பொறியியல் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா கற்கை நிலையத்தில் நடத்தப்படும் பொறியியல் பட்டப்படிப்புக்குரிய அடிப்படை கற்கை நெறிக்கும் பொறியியல் பட்டப்படிப்புக்கும் விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தகுதியுடையவர்கள் விண்ணப்பங்களை நாளை மறுதினம் 30 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா கற்கை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என வவுனியா கற்கை நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)


## 14ஆம் ஆண்டின் நினைவலைகள்

மலர்வு
01.06.1933

மறைவு
03.07.2000



அமரர் கந்தையா மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)
(பொலிஸ் பப்பா)

திதி: பிரதமை 28.06.2014

பந்த பாசம் மறந்து
பரமன் அடி சேர்ந்து - ஈரேழு
ஆண்டுகள் ஆனது
என் அன்புத் தெய்வமே!

நித்தம் கலங்குகிறேன் உங்கள் அன்பை நினைத்து
பாசத்துடனும் பரிவுடனும் என்னை ஆதரித்து
இடைநடுவில் என்னைத் தவிக்கவிட்டது ஏன்?
தெய்வத்தின் தெய்வமாய் நின்று
என்னை வழிநடத்தும் எனது துணையே!
எனது தனிமையிலும் வாழ வழிகாட்டிய என் அன்புத் தெய்வமே!
என் உயிர் இருக்கும்வரை உங்கள் நினைவோடு வாழ்கின்றேன்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற சந்நிதி முருகனை வேண்டுகிறேன்.

பழைய பாலத்தடி,
தொண்டமானாறு.

திருமதி ம.பரமேஸ்வரி
(மனைவி)

(49367)(12.3.6)

## விளையாட்டு விழா

பருத்தித்துறை கற்கோவளம் ஆதவன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளது.
கற்கோவளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆ. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். ஆனந்தராஜா கலந்து கொள்வார். (ஓ-78)

♦ ♦ ♦

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் பாலர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் வ.நந்தீஸ்வரனும் கலந்து கொள்வர். (ஓ)

## பொதுக்கூட்டம்

மாவிட்டபுரம் - வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தொழில் முயற்சியாளருக்கான முழுநாள் கருத்தரங்கு



தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி பிரதேச சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகரசபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.
இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கை சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.
கிளை முகாமையாளர் கே.சேதுகாவலர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்தி செயற்பாட்டுப் பிரிவு பணிப்பாளர் சிறிபத்மநாதன் நிதிசார் நிபுணத்துவம், நாணயத்தாள்கள் பற்றி கருத்துகளை வழங்கினார்.
பிரதேசத்தைச் சேர்ந்த சுய தொழில் முயற்சியாளர்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், நடுத்தர சிறிய தொழில் முயற்சியாளர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (வ-9)

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான விண்ணப்பம்

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கல்வி வலயங்களில் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை 1,2-I ஆகிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மேற்படி தரங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவை 2-II ஐச் சேர்ந்தவர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களையும், அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளலாம். எனவும் இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை மறுதினம் 30 ஆம் திகதியெனவும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (க)

## கருத்துரை

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் கருத்துரையில் ஆறாவது நிகழ்வு இன்று ஞாயிறு முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை நல்லூர், கோவில் வீதியிலுள்ள சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான நல்லூர், கோயில் வீதியிலுள்ள இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. (க)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் இவ்வாண்டுக்கான கதிர்காம உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். (க)

♦ ♦ ♦

இருபாலை கிழக்கு அருள்மிகு லிங்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த சங்காபிஷேக நிகழ்வு நாளை மறுதினம் திங்கட் கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.
இதேவேளை- இருபாலை கிழக்கு அருள்மிகு லிங்கப்பிள்ளையார் ஆலய அர்ச்சகர் பா.கேசவன் ஐயரின் ஆச்சார்யாபிஷேக (குருப்பட்டம்) நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.45 மணி முதல் 7.15 மணி வரை ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் இடம்பெறும். (ஓ)

## மின்தடை பற்றிய அறிவிப்பு

உயர் அழுத்த, தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, தெல்லிப்பழை சந்தை வீதி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்-
நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை நவிண்டில், பொலிகண்டி, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, இமையாணன், உடுப்பிட்டி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, கம்பர்மலை, உடுப்பிட்டி சனசமூக நிலையத்தடி, பொக்கணை, கெருடாவில், தொண்டமானாறு, மயிலியதனை, சிதம்பராக் கல்லூரியடி, நவிண்டில், வல்லை, கொன்வென்ட், குருநகர், பாஷையூர் - ஹோலிகுறோஸ் பண்ணை, முத்தமிழ் வீதி, பண்ணை ஆஸ்பத்திரி, வில்லூன்றி, பழைய பூங்கா வீதியின் ஒரு பகுதி, மடம் வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 28
பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்கிறார். (ஓ-78)

## மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடம்



கலை, கலாசார அமைச்சு நடத்திய கடந்த ஆண்டுக்கான கலை இலக்கியப் போட்டியின் சிறுகதைப் பிரிவில் (வாழ்க்கை ஒரு வட்டம்) பிரதேச செயலர் பிரிவில் முதலாம் இடத்தையும், மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தையும், அளவெட்டி மத்தியைச் சேர்ந்த நடராசா சிறீஸ்கந்தராசா பெற்றுக் கொண்டார். இவர் ஏற்கெனவே சிறுகதை, பாடலாக்கம் ஆகியவற்றில் தேசிய மட்டத்தில் பரிசுகள் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)





புனராவர்த்தன அஷ்டபந்தன உத்தமோ உத்தம (33 குண்டம்)
மகா கும்பாபிஷேகப் பெருவிழா

காலம்: ஆனித்திங்கள் 20 ஆம் நாள் (04.07.2014) வெள்ளிக்கிழமை
சுபமுகூர்த்தம் முற்பகல் 8.40 முதல் 10.27 வரை
கிரியைகள் ஆரம்பம்: இன்று (28.06.2014) சனிக்கிழமை அதிகாலை 5.41 மணி
எண்ணெய்க்காப்பு: 01.07.2014 செவ்வாய்க்கிழமை காலை 8.30 தொடக்கம்
02.07.2014 புதன்கிழமை மாலை 4.00 மணிவரை.

அடியார்கள் அனைவரும் இப்பெருவிழாவில் பங்குகொண்டு எம்பெருமானுடைய இஷ்ட சித்திகளை பெற்றுய்யும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அனுசரணை:

S.கிருபா
K.K.S.வீதி, இணுவில் சந்தி.

சுந்தர்சன்
காரைநகர் வீதி,
மானிப்பாய்.

[சி/13848][4.6.3]



# தென்மராட்சி வலய அழகியல் கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி கல்வி வலய அழகியற் பிரிவின் விஷன் 1 கல்விக் கண்காட்சி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரா முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார்.
கல்வி வலயத்தைச் சேர்ந்த 7 பாடசாலைகளில் தரம் 8,9 வகுப்புகளைச் சேர்ந்த 27 மாணவர்களால் 27 மணி நேரத்தில் உருவாக்கப்பட்ட ஓவியங்கள், வெட்டுச் சித்திரங்கள், ஸ்ரென்சில் பதிப்புகள் போன்ற 100க்கு மேற்பட்ட ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.
இந்த நிகழ்வில் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியை ஏ.எஸ்.கிருஷ்ணவேணி, வேள்ட்விஷன் நிறுவன திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொசைறோ உட்படப் பலர் கலந்து கொண்டனர்.
'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தக் கல்விக் கண்காட்சியில் தென்மராட்சிக் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலாசநாதன் உட்பட ஐந்து சித்திர பாட ஆசிரியர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
இதேவேளை கண்காட்சியை இன்றும் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# வேகமாகப் பரவுகிறது கால்வாய் நோய் உடன் போடுங்கள் மாடுகளுக்கு தடுப்பூசி

## சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அறிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி பிரதேசத்தில் மாடுகளுக்கு கால்வாய் நோய் வேகமாகப் பரவி வருவதால் வளர்ப்பு மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.
பிரதேசத்தில் ஆரம்பத்தில் மிருசுவில் வடக்கில் மாடுகளில் காணப்பட்ட கால்வாய் நோய், தற்போது வரணி இடைக் குறிச்சி தொடக்கம் எழுதுமட்டுவாழ் வரையான பகுதிகளிலும் கொடிகாமத்திலிருந்து கச்சாய், பாலாவி, உசன், கெற்பேலி, விடத்தற்பளை, மிருசுவில் தெற்கு ஆகிய பிரதேசங்களுக்கும் பரவி வருகிறது.
இந்த நோய் ஏனைய பகுதிகளுக்கும் பரவாமல் இருப்பதற்காக கச்சாயிலிருந்து வரணி வடக்கு வரையான பகுதிகளில் மாடுகளுக்கு கால்வாய் நோய்த் தடுப்பூசிமருந்து ஏற்றப்பட்டுவருகிறது. கால்நடை வளர்ப்போர் உடனடியாகக் கால்நடை வைத்தியர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது வளர்ப்பு மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.



கோப்புப்படம்

குறித்த பிரதேசங்களிலிருந்து பெருமளவு மாடுகள் விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடு கிடைப்பதால் இந்த நோய் ஏனைய பிரதேசங்களுக்குப் பரவாமல் தடுப்பதற்குமாடுகளை எவரும் விற்க வேண்டாம் என்றும், கால்நடைகளை ஏனைய பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதும் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.
இதேவேளை - இந்த நோயால் பீடிக்கப்படும் மாடுகள் ஒரு வாரத்தின் பின்னர் குணமாகி பழைய நிலைக்குத் திரும்பிய பின்னர் மீண்டும் நோய் ஏற்பட்டால் மாடுகள் இறந்து விடும் என்ற தப்பபிப்பிராயத்தால் மாடுகளை அவசரப்பட்டு விற்க வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (வ-9)

# மாநகர சபைக்குட்பட்ட வீதிகளுக்கு அடுத்தவாரம் காப்பெற் இடும் பணி

யாழ்ப்பாணம். ஜூன் 28
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளைக் காப்பெற் வீதிகளாக மாற்றும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும். உரிய திணைக்களத்துக்கு இன்னும் நிதி கிடைக்கப் பெறாததாலேயே பணிகள் தாமதமாகின்றன என்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.
யாழ்.மாநகர சபையின் நகர அபிவிருத்தி திட்டத்தில் காப்பெற் வீதிகள் அமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படாதது தொடர்பில் சபையில் நேற்றுமுன்தினம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த முதல்வர் தொடர்ந்து தெரிவிக்கும் போது:-
வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு நிதி கைமாற்றம் செய்யப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. நிதி கிடைக்காத காரணத்தால் அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்று வீதி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பணிகளை ஆரம்பிப்பதாக தெரிவித்துள்ளனர்.
சகல திணைக்களங்களுக்குள்ளும் குறைபாடுகள் உள்ளன. நகரில் சில குறைபாடுகள் தொடர்பில் வர்த்தக சங்கத்தால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொண்டாலும் குற்றஞ்சாட்டுவதை விட இணைந்து செயற்பட முன்வர வேண்டும். மாநகர சபையின் சட்ட வரைபுகளுக்கு ஏற்பவே நிதி பங்கீடு செய்யப்படுகிறது. அதற்கான காலதாமதங்களால் தான் பணிகள் தாமதமடைகின்றன.
வீதி அபிவிருத்திப் பணிகளும் அவ்வாறான நிலையிலேயே உள்ளன. எனினும் அடுத்த வாரம் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (வ-14)

# வேதாள வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்



யாழ்ப்பாணம், ஜூன் 28
யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் உண்மை விதை வேதாள வெங்காயச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கோப்பாய், ஊரெழு, உரும்பிராய், புன்னாலைக்கட்டுவன், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் போன்ற பகுதிகளில் பயிரிட்ட வெங்காயப் பயிர்கள் நல்ல நிலையில் காணப்படுகின்றன. (வ-17)

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் இதுவரை கிடைக்கவில்லை

## நடமாடும் சேவையில் விண்ணப்பித்தோருக்கு

தென்மராட்சி, ஜூன் 28
தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கடந்த வருடம் நடத்தப்பட்ட ஆள்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுக்கு விண்ணப்பித்த பலருக்கு ஒரு வருடத்துக்கு மேலாகியும் அவை கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த நிலையில் வாக்காளராகப் பதிவு செய்வதற்குத் தேசிய அடையாள அட்டை அவசியம் என்பதால் நடமாடும் சேவையில் விண்ணப்பித்து இதுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்காதவர்கள் வாக்காளராகப் பதிவு செய்ய முடியாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.
நடமாடும் சேவையில் புதிய, மற்றும் தொலைந்த, பழுதடைந்த தேசிய அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு விரைவில் கிடைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 28
4 லீற்றர் கசிப்புடன் அச்சுவேலியில் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த கசிப்புப் போத்தல்களை சந்தேக நபர் விற்பனைக்காகக் கொண்டு சென்றுகொண்டிருந்தார் என்றும் அது குறித்து தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு சென்று சந்தேக நபரை கைதுசெய்தனர் என்றும் தெரிவித்தனர்.
கைதான வரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-4)

## கல்விக் கண்காட்சி

தென்மராட்சி, ஜூன் 28
கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை மாணவர்களின் கல்விக் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.
பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலயக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர், திருமதி சி.சிவநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (சித்திரம்) கோ.கைலாசநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ-9)

# வடக்கு மாகாண சபைக்கு மக்கள் மீது அக்கறையில்லை

## சுய இலாபத்துக்காகவே செயற்படுகின்றது என்று குற்றஞ்சாட்டுகிறார் மாநகர சபை முதல்வர்

யாழ்ப்பாணம். ஜூன் 28
மக்களால் பல எதிர்பார்ப்புக்களுடன் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண சபை தனக்கு கீழ் உள்ள சபைகளின் நலன்களில் அக்கறை கொள்ளவில்லை. மாகாண சபை உறுப்பினர்களின் சுயலாபங்களுக்காகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா.
யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது சபை உறுப்பினர்களின் போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டது. அது குறித்துப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் உடனடியாக முடிவு எடுப்பதற்கான அதிகாரம் எமக்கு இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைக்கு இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாநகர சபையின் கணக்காளர், உள்ளூராட்சி ஆணையாளர், மாகாண சபை முதல்வரின் அனுமதி கிடைக்கும் பட்சத்திலேயே நடவடிக்கை எடுக்க முடியும்.
மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள மாகாண சபையில் நியதிச் சட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்தால் இவ்வாறான கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.
தென்பகுதி, மேல் மாகாண சபைகளில் இவ்வாறான நியதிச் சட்டங்கள் அமைக்கப்பட்டு அதன் கீழுள்ள சபைகளுக்கு உரிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறான தொரு நியதிச்சட்டம் வடமாகாண சபைக்கும் கொண்டு வரப்பட வேண்டும்.
ஆனால் வடக்கு மாகாண சபைக்கு மக்களின் நலன்களிலோ அல்லது அதன் கீழுள்ள சபைகளின் நலன்களிலோ அக்கறையில்லை. தனிப்பட்ட ரீதியில் மாகாண சபையின் உறுப்பினர்களின் நலன்களிலேயே கவனம் செலுத்தி வருகிறது.
நியாயமான முறையில் உறுப்பினர்களுக்கான சலுகைகள், கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பில் 4 பேர் கொண்ட குழுவை நியமித்து அந்தக் குழுவின் ஆலோசனைக்கு அமைவாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை மாகாண சபைக்கு அனுப்பி வைப்போம்- என்று அவர் தெரிவித்தார்.
அதே வேளை, அங்கு கருத்துத் தெரிவித்த பிரதி மேயர் ரமீஸ், தென்னிலங்கையிலுள்ள சிறிய சபைகளுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள், சலுகைகள் இங்குள்ள சபைகளுக்கு வழங்கப்படுவதில்லை. அவ்வாறானதொரு சட்டத்தை கொண்டு வந்தால் இனிவரும் சபைகள் கூட அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆகவே இதற்குரிய நடவடிக்கைகளை இந்தச் சபை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.
உறுப்பினர்களும் இந்த பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக் கொண்டதற்கு இணங்க, இது தொடர்பாகக் கோரிக்கையை மாகாண சபைக்கு அனுப்பி வைப்பதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ற-14)

# பயன்படுத்தப்படாத காணிகள் புதியவர்களுக்கு வழங்கப்படும்

## துணுக்காய் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

துணுக்காய், ஜூன் 28
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் காணிகளின் அனுமதியை இரத்துச் செய்து அவற்றை புதிய பயனாளிகளுக்கு வழங்குவதென அங்கு இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் துணுக்காய் பிரதேச செயலக மண்டபத்தில் நாடாளு மன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமாகிய ஹுனைஸ் பாரூக் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் 1966 ஆம் ஆண்டு தொடக்கம் 1968 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட காணிகளில் தற்போது பயன்படுத்தப்படாமல் இருக்கும். காணிகளுக்கான அனுமதியை இரத்துச் செய்து புதிய பயனாளிகளுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பாக தென்னியங்குளத்தில் 287 ஏக்கர், கோட்டைகட்டிய குளத்தில் 200 ஏக்கர், அம்பலப்பெருமாள் குளத்தில் 200 ஏக்கர் வரையான காணிகளுக்கான அனுமதிகளை இரத்துச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் 50 மில்லியன் ரூபா செலவில் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது. பாடசாலைகளுக்கான பாண்ட் இசைக்கருவிகள் வழங்கல், பொதுக் கிணறுகள் அமைத்தல், முன்பள்ளிகள் அமைத்தல், பாடசாலைகளுக்கான விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

சுமார் 20 வரையான வேலைத்திட்டங்களுக்கு இந்தக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பொதுமக்களில் சுமார் 50 சதவீதம் வரையானவர்கள் மின்சார வசதியை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சகலருக்கும் மின்சார வசதியை மூன்று மாதங்களுக்குள் ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் போக்குவரத்து, சுகாதார நிலைமைகள், கல்வி, விவசாயம் உட்பட துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கூட்டத்தின் தொடக்கவுரையை துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் நிகழ்த்தினார். துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் துறைசார்ந்த அதிகாரிகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் சங்கப் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ச-18)



ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் ஹுனைஸ் பாருக், பிரதேச செயலர் சி.குணபாலன் மற்றும் அதிகாரிகள்



கூட்டத்தில் கலந்துகொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்

## அச்சத்தை ஏற்படுத்தும் காட்டு யானைகள்



கோப்புப்படம்

முல்லைத்தீவு, ஜூன் 28
முல்லைத்தீவு மாவட்டம் மூன்று முறிப்பு இளமருதங்குளம் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் தாங்கள் ஒவ் வொரு இரவையும் அச்சத்துடன் கழிக்க வேண்டியிருப்பதாக இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மூன்று முறிப்பு, இளமருதன் குளம் ஆகிய கிராமங்களில் தற்போது நிலவும் கடும் வறட்சியை அடுத்து காட்டு யானைகள் குடிமனைக்குள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. (க-55)

## தேவிபுரம் கசிப்பின் பிடிக்குள்

முல்லைத்தீவு, ஜூன் 28
முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரம் பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் அதிகரித்து வருவதாகவும் அதனை உரிய அதிகாரிகள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கசிப்பு பயன்பாடு காரணமாக இந்தப் பகுதிகளில் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் வேறு இடங்களைச் சேர்ந்த பலர் இந்தப் பகுதியில் நடமாடி வருவதுடன் குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன என்றும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-55)



வடமாகாணத்தில் பாதீனியக் களையை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு கட்டமாக வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மக்களுக்கு அந்தக் களையின் பாதிப்பை விளக்கும் வகையிலான துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் நிகழ்வு வைபவ ரீதியாக வவுனியா வைரவப் புளியங்குளம் கரப்பன்காடு வரசித்தி விநாயகர் ஆலயத்தில் அந்தணர் ஒன்றியத்தின் உபதலைவர் கிருஷ்ணகுமார் குருக்கள் தலைமையில் இடம்பெற்றபோது அந்தணர் ஒன்றியத்தின் செயலாளர் நா.பிரபாகரக்குருக்கள் பாதீனியத்தின் பாதிப்புப்பற்றி விளக்கமளிக்கிறார். (ச-421)

## அக்கராயன் பிரதேசத்தில் குடிதண்ணீர்த் திட்டம்

கிளிநொச்சி, ஜூன் 28
கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்குரிய குடிதண்ணீர் விநியோகத் திட்டம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற் கட்டமாகக் குடிதண்ணீர் பெறுவதற்கான கிணற்றை அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளதுடன் 30 கன மீற்றர் அளவு நீர் கொள்ளக்கூடிய நீர்த்தாங்கியை அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கும் பொருட்டு 90 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள தாகவும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-55)

## வீதி புனரமைக்கப்படாததால் போக்குவரத்துச் சிரமங்கள்



கோப்புப்படம்

முல்லைத்தீவு, ஜூன் 28
முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் சந்தியில் இருந்து புதுமாத்தளன் வீதி வரைக்குமான 12 கிலோ மீற்றர் நீளமான வீதி இதுவரை புனரமைக்கப்படாமையினால் இந்த வீதியைப் பயன்படுத்தும் 1100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

முல்லைத்தீவு- முள்ளிவாய்க்கால் ஏ-35 வீதியின் இரட்டை வாய்க்கால் சந்தியில் இருந்து அம்பலவன்பொக்கணை, இடைக்காடு, புதுமாத்தளன், வலைஞர்மடம் உள்ளிட்ட கிராமங்களூடாக கடற்கரைக்குச் செல்லும் சுமார் 12 கிலோ மீற்றர் நீளமான வீதியே புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

குறித்த வீதி கடந்த இறுதிப் போரின்போது சேதமடைந்துள்ளதுடன் வீதியின் இருபுறமும் மண் அணைகள், காவலரண்கள் அமைக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

## மின்சாரம் வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தம்

### மக்கள் கவலை

முல்லைத்தீவு, ஜூன் 28
முல்லைத்தீவு மாவட்டத்தில் மின்சாரம் வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தப்போக்கில் செயற்படுவதாக அந்த மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

பல இடங்களில் மின்சாரம் வழங்கக்கூடிய வகையில் மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் மின்சார சபை அதிகாரிகள் தாமதப்போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

முல்லைத்தீவு மாவட்டம் காடுகள் சூழ்ந்த கிராமங்களைக் கொண்டது.

இந்தக் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று கருதப்படுகிறது.

எனவே, மின்சாரம் வழங்க நடவடிக்கையை அதிகாரிகள் துரிதப்படுத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)

## பற்றைக் காணிகளில் சமூகச் சீர்கேடுகள்

### குருசு கோயிலுக்கு அருகில்

மன்னார், ஜூன் 28
மன்னார் மாவட்டம், குருசு கோயிலுக்கு அருகியில் நிறைந்து காணப்படும் பற்றைக் காணிகளில் சமூக சீர்கேட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மதுபானச் சாலையிலிருந்து மதுபானங்களை வாங்கி வரும் இளைஞர்கள் பற்றைப் பகுதிகளில் மறைந்திருந்து அவற்றை அருந்துவதால் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பற்றைகளை அகற்றித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை அதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே பற்றைகளை அழித்து சமூகச் சீர்கேடுகளைத் தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-415)

# ஆரோக்கியம் தரும் நாவல் பழம்

ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகளுக்கு நாவல் பழம் நல்ல தீர்வாக அமைகிறது.
நாவல் மரத்தின் பட்டை, நாவல் பழம், விதை, இலை, வேர் ஆகிய அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டவையாகும்.
நாவல் பழம் சாப்பிட்டால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருக்கும். கல்லீரல் கோளாறுகள், குடற்புண் போன்றவற்றைப் போக்க வல்லது.

நாவல் பழத்தில் கல்சியம் அதிக அளவில் இருக்கிறது. இந்தப் பழத்தை அடுத்து சீதாப் பழத்தில்தான் கல்சியம் இருக்கிறது.

நாவல் பழச்சாற்றை தினமும் மூன்று வேளை தவறாமல் உட்கொண்டு வந்தால் நீரிழிவு நோயாளியின் குளுக்கோஸின் அளவை 15 நாள்களில் பத்து சதவீதம் குறைத்து விடலாம். மூன்று மாதத்துக்குள் முற்றிலும் கட்டுப்படுத்தி விடலாம்.

தூக்கமின்றி அவதிப்படுபவர்கள், நாவல் பழத்தை மதிய உணவுக்குப்பின் சாப்பிட்டு வந்தால், தூக்கமின்மை நீங்கும்.



நாவல் பழத்தில் கல்சியம் அதிக அளவில் இருக்கிறது. இந்தப் பழத்தை அடுத்து சீதாப் பழத்தில் தான் கல்சியம் இருக்கிறது.



# அதிகம் சாப்பிடுவதற்கு தூண்டும் விடயங்கள்



சில பேருக்கு எப்போதும் எந்த உணவைக் கொடுத்தாலும் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவார்கள்.
அதுவும் அவர்களுக்கு பிடித்த உணவுகளை பார்க்கும் போதெல்லாம் அவற்றைச் சாப்பிட வேண்டும் என்று நினைப்பார்கள். இவ்வாறு உணவை அதிகளவு சாப்பிடத் தூண்டும் விடயங்கள் அவை என்று பார்க்கலாம்.


## பசியா? களைப்பா?

களைப்படைந்து போயிருக்கும் நாம், அதனை பசியால் ஏற்பட்ட களைப்பாகவே பல சமயங்களில் தவறாகக் கருதி விடுகிறோம். தினமும் இரவில் போதுமான அளவு தூங்குவதை உறுதிப்படுத்துங்கள்.
ஆறு முதல் எட்டு மணி நேரமாவது தூங்குங்கள். அதே போல, நீங்கள் மிகவும் களைப்பாக இருக்கும் நேரத்தையும் குறித்துக் கொள்ளுங்கள்.
இந்த முறையை நீங்கள் ஒரு முறை கண்டறிந்து விட்டால், ஆரோக்கியமான நொறுக்குத் தீனிகளை சாப்பிட்டு களைப்பை நீக்கிக் கொள்ளுங்கள். மாறாகத் தேவையற்ற உணவுகளை சாப்பிட வேண்டாம்.



## பாத்திரம்

நீங்கள் அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதை ஊக்குவிக்கும் முக்கியமான காரணியாக உணவு உண்ணும் பாத்திரம் உள்ளது. பெரிய தட்டுக்கள் உணவகங்களில் வைத்து சாப்பிட ஏற்றவையாக இருக்குமேயொழிய, தினமும் வீட்டில் சாப்பிடுவதற்கு ஏற்றவையல்ல.
வீடுகளில் சிறிய அல்லது இடைநிலை அளவுடைய தட்டுக்களைப் பயன்படுத்துங்கள்.
இந்த மாற்றத்தை செயற்படுத்தி, நீங்கள் சாப்பிடும் உணவை அது எப்படி கட்டுப்படுத்துகிறது என்று கவனித்துப் பாருங்கள்.





## சலிப்பு ஏற்படுகிறதா?

எத்தனை முறைதான் நீங்களும் தொலைக்காட்சி முன் அமர்ந்து கொண்டு, பொழுதைப் போக்குவது? நீங்கள் வேலை செய்யும் இடத்திலும் கூட, மகிழ்ச்சியாக இல்லாத நேரங்களில், எதையாவது கொறித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றும். அதையும் செய்வீர்கள். இலட்சக் கணக்கானவர்கள் தங்களுக்கு சலிப்பு ஏற்படுகிறது. அல்லது ஆர்வமூட்டுவதாக எதுவும் இல்லை என்ற காரணத்துக்காகவே அதிகமாகச் சாப்பிடுகிறார்கள் என்கிறார்கள் வல்லுநர்கள்.
பணியிடமோ அல்லது வீடோ என எதுவாக இருந்தாலும், இந்தப் பிரச்சினையின் ஆழத்தை அறிந்து கொள்ள வேண்டிய நேரம் இது.

## வேகமாக சாப்பிடுதல்

10 நிமிடத்துக்கும் குறைவான நேரத்துக்குள் நீங்கள் சாப்பிட்டு முடித்து விடுகிறீர்களா? 20 நிமிடத்துக்குள் நீங்கள் சாப்பிட்டு முடித்து விடுகிறீர்கள் என்றால், அளவுக்கு அதிகமாகச் சாப்பிடும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தமாகும்.
மெதுவாகச் சாப்பிடுங்கள், மெதுவாக அரைத்து, மென்று உணவை முறையாக உண்ணுங்கள்.




## உடல் நீர் வறட்சி

உடலில் போதுமான அளவு நீர்ச்சத்து இல்லாதபோது, உங்களுக்கு அதிகமாகச் சாப்பிட வேண்டும் போலத் தோன்றும். எனவே, நாள் முழுவதும் தண்ணீர் குடிப்பதை உறுதியாக பின்பற்றுங்கள்.
ஒவ்வொரு முறை சாப்பிடுவதற்கு முன்பும், ஒரு குவளை தண் ணீர் குடிக்கும் பழக்கத்தை ஏற்ப டுத்திக் கொள்ளுங்கள்.
அதேபோல நீங்கள் தூங்கி எழுந்தவுடனும் மற்றும் உறங்கச் செல்லும் முன்னரும் ஒரு குவளை தண்ணீர் குடிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.



# ஒழுங்கான உடற்பயிற்சி நோய் ஏற்படுவதைத் தடுக்கும்



ஒழுங்கான உடற்பயிற்சி நோய் வருவதைத் தடுக்கும் என்று கனடாவில் நடந்த ஆய்வு ஒன்றின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.
கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்று உடற்பயிற்சி குறித்து ஆய்வு ஒன்றை நடத்தியிருந்தது.
உடற்பயிற்சியானது உடலையும் மனதையும் செயலிழக்காமல் வைத்திருக்க உதவி புரிகின்றது. ஒழுங்கான முறையில் உடற்பயிற்சி செய்பவர்கள் தமது உடல் முதிர்ச்சியைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள முடிகின்றது.
நாள் ஒன்றுக்கு குறைந்தது 10 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்தால் எம்மை நாம் காத்துக் கொள்ளலாம்.
ஆனால் பெரும்பாலான முதியவர்கள் உடற்பயிற்சி செய்வதில்லை என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.



நாள் ஒன்றுக்கு குறைந்தது 10 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்தால் எம்மை நாம் காத்து கொள்ளலாம்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஈராக்கிடம் இருந்து பாடம் கற்கவேண்டும் கொழும்பு

ஈராக்கில் என்ன நடக்கிறது? ஏன் அங்கு இப்படியாகியது? என்பது ஈராக்குக்கு வெளியே இருக்கும் எல்லோரதும் கேள்விகள். தீவிரவாதிகள் என்று ஒரு சாராரும் போராளிகள் என்று ஒரு சாராரும் குறிப்பிடும் ஆயுத தாரிகள் – கிளர்ச்சியாளர்கள் – ஈராக்கின் சுமார் மூன்றிலொரு பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் ஏற்கனவே கொண்டு வந்துவிட்டார்கள். தலைநகர் பக்தாத்துக்கு வெகு நெருக்கமாகச் சண்டைகள் நடக்கின்றன.

கிளர்ச்சியாளர்களுக்கு பக்தாத்தைக் கைப்பற்றும் நோக்கம் இருக்கிறதா என்பது தெளிவில்லை என்கிறார்கள் அங்கிருக்கும் சர்வதேச ஊடகவியலாளர்கள். ஆனாலும் *சிரியா மற்றும் ஈராக் முஸ்லிம் தேசங்கள்* (தி இஸ்லாமிக் ஸ்டேட்ஸ் ஒவ் ஈராக் அன்ட் சிரியா – ஐ.எஸ்.ஐ.எஸ்.)என்ற பெயர் கொண்ட கிளர்ச்சிக் குழு, சிரிய எல்லையிலிருந்து தொடங்கி ஈராக்கின் பெரும்பாலான வடக்குப்பகுதியையும் மேற்கின் ஒரு பகுதியையும் கைப்பற்றி உள்ளது.

கிளர்ச்சிக் குழுவை எதிர்கொள்ள முடியாமல் அரச படைகள் பதறி ஓடுகின்றன. சண்டை தீவிரம் பெற்றுள்ளதால், இலங்கையில் ஒரு காலத்தில் நடந்ததைப் போன்றே தற்போது ஈராக் இராணுவத்தில் உள்ளவர்களில் பலரும் தமது பணியிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுகின்றனர். இதனால் கிளர்ச்சிப் படையால் இலகுவாக, வேகமாக முன்னேற முடிகின்றது.

ஈராக்கிய சிறுபான்மை இனங்களில் ஒன்றான சுனி இனத்தினர் கிளர்ச்சிப் படைகளை ஆதரிக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது. அல்லது சுனி இனத்தவர்களின் பாதுகாப்புக்காகவே தாம் சண்டையிடுகின்றனர் என்று கிளர்ச்சிப் படையினர் சொல்கின்றனர். ஏனெனில் ஈராக்கின் ஆட்சி ஷியா பிரிவு முஸ்லிம்களின் கைகளிலேயே உள்ளது.

ஷியாக்களின் ஆட்சியில் சிறுபான்மையினரான தாங்கள் போதிய மதிப்புடனும், உண்மையான உரிமைகளுடனும் நடத்தப்படவில்லை என்ற கவலை சுனி இன முஸ்லிம்களுக்கு இருக்கின்றது. இதுவே கிளர்ச்சியாளர்களுக்கு அவர்கள் ஆதரவாக இருப்பதற்கு அல்லது அவர்களுக்காக கிளர்ச்சியாளர்கள் சண்டையிடுவதற்கான காரணம்.

ஈராக்கின் முன்னாள் ஆட்சியாளர் சதாம் ஹுசைன் சுனி சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர். ஈராக்கில் அமெரிக்கப் படைகள் நுழைந்து சதாமின் ஆட்சியை வீழ்த்தி 10 ஆண்டுகள் கடந்த நிலையில் அந்த நாட்டில் மீண்டும் சுனி சிறுபான்மை இனத்தவர்கள் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை ஆரம்பித்து சண்டையிடுவதற்கான காரணம், பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனங்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு மறுத்தமையே.

ஈராக்கின் சிறுபான்மையினரான சுனி இனத்தவருடனும் குர்டிஷ் (இவர்கள் ஷியாக்களாலும் சுனிக்களாலும் ஒடுக்கப்பட்டவர்கள்) இனத்தவருடனும் பெரும்பான்மையினரான – ஆட்சி அதிகாரத்தைத் தம் வசம் வைத்துள்ள – ஷியா முஸ்லிம்கள் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்குத் தொடர்ந்து மறுத்து வருகிறார்கள்.


ஈராக்கின் இன்றைய நிலைமைக்கு இதுவே முழு முதற் காரணம். இப்போதைய நிலைமை தொடர்ந்தால் ஈராக் மூன்று தேசங்களாகப் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாது என்பது சர்வதேச அவதானிகள் பலரின் கருத்து. ஷியா தேசம், சுனி தேசம், குர்டிஷ் தேசம் என மூன்று தனித் தனித் தேசங்களாக ஈராக் பிளவுபடும்.

சதாம் ஹுசைனைப் பதவியில் இருந்து அகற்றிய அமெரிக்கப் போரின் பின்னர் ஏற்பட்ட அமைதிக் காலத்தைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டு சிறுபான்மை இனங்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள ஈராக்கின் பெரும்பான்மையினர் தவறியதே இப்போதைய வன்முறைகளுக்கான முழுமுதற் காரணம். அவர்களின் தவறு ஈராக் மூன்று துண்டுகளாக உடையும் நிலைக்கு அதனைத் தள்ளிச் சென்றுள்ளது.

ஈராக்கைப் போன்றே ஒரு பெரும்பான்மையினத்தையும் இரு சிறுபான்மை இனங்களையும் கொண்டுள்ள – சிறுபான்மை இனங்களுடன் அதிகாரங்களைப் பகிர மறுக்கின்ற அரசையும் கொண்டுள்ள, இலங்கைக்கு இது நல்லதொரு பாடம். படிப்பினைகள் எங்கிருந்தாலும் அவற்றைக்கற்றுக்கொள்வதே கொழும்பு அரசுக்கு நல்லது.

# மஹிந்த அன்று அரங்கேற்றிய அசர வைக்கும் ராஜ'தந்திரம்'

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் : வீஎஸ்ரீ



மஹிந்த

பிரேமதாச அரசால் கொலை செய்யப்பட்ட ஜே.வி.பி இளைஞர் யுவதிகளின் புகைப்படங்களை மஹிந்த தரப்பினர் காட்டிய போது ஐயோ பாவமே எனக் கூறி மனம் வருந்தியமை போன்று இன்று மஹிந்த அரசால் கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களின் படங்களை சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டபோது மக்கள் ஐயோ பாவமே என்று கூறவில்லை.

பிரேமதாசவின் தலைமையிலான அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஜெனிவாவுக்கு நேரில் சென்று ஐ.நா.மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுக்கு ஆவண ஆதாரங்களுடன் விளக்கமளிக்கப் போவதாகக் கூறி அந்த வேளையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ ஜெனிவாவுக்குப் புறப்படத் தயாரானார். அந்த வேளையில் அவரது அரசியல் சகாக்கள், உங்களது இந்த நடவடிக்கையைக் கண்டித்து ஐ.தே.கட்சிக்காரர்கள் உங்களுக்குத் தேசத் துரோகியெனப் பட்டம் சூட்டுவார்களே என்று மஹிந்தவிடம் கூறினார்களாம். அதற்குப் பயந்து இந்த மக்கள் விரோத அரசைப் பாதுகாக்க இயலுமா? 14 ஆண்டுகளாகச் சுதந்திரக் கட்சிக்காரர்கள் எதிர்க்கட்சியாகச் செயற்பட்டு சிரமப்படுகிறார்களே ! எப்படியாவது இந்த ஐ.தே.கட்சி அரசை வீழ்த்தி சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசொன்றை உருவாக்கி வைத்து சுதந்திரக் கட்சியினருக்கு உதவ வேண்டுமல்லவா? அதனாலேயே நான் ஜெனிவாவுக்குச் செல்ல முடிவு செய்துள்ளேன் என்று மஹிந்த அவர்களுக்குப் பதிலளித்தாராம்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் விசாரணைகளுக்கு எதிராக மஹிந்தவின் தலைமையிலான இன்றைய அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணையை ஆதரிப்பதா? அல்லது எதிர்ப்பதா என்பது குறித்து ஐ.தே.கட்சியினர் கலந்தாலோசிப்பதாக சில நாள்களுக்கு முன்னர் வெளியான தகவலை அடுத்தே மேற்குறிப்பிட்ட சம்பவம் நினைவுக்கு வந்தது.



பிரேமதாச

நெஞ்சை நிமிர்த்தி, அச்சமின்றி அன்று மஹிந்த எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே துணிவுடன் செயற்பட்டமை போன்று செயற்பட இன்று எதிர்க்கட்சியில் ஒருவர்தானும் இல்லையே. அன்று மஹிந்த ஜெனிவாவுக்குச் செல்வதை ஊக்குவித்த அவரது பழைய சகபாடிகள் இன்று இவ்வாறு அங்கலாய்க்கிறார்கள்.

ஐ.தே.கட்சி அரசின் மனித உரிமை மீறல்களை உலக நாடுகளின் கவனத்துக்கு எடுத்துச் செல்வதற்காக அன்று ஜெனிவா புறப்பட்ட மஹிந்த கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடத்தப்பட்ட விதம் குறித்து அந்த வேளையில் ஊடகங்கள் பரபரப்பான செய்திகளை வெளியிட்டிருந்தன.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் பங்குபற்றப் புறப்பட்டுச் சென்ற மனித உரிமைகள் பாதுகாப்பு நாடாளுமன்றக் குழுவின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ தம்முடன் எடுத்துச் சென்ற 600 வரையிலான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் விமான நிலையத்தில் வைத்து அவரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அதற்கு முந்திய காலகட்டத்தில் நாட்டில் காணாமற்போன 600 வரையிலான நபர்கள் பற்றிய விவரங்களும், அந்தச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட புகைப்படங்களும் இந்த விதம் பொலிஸாரால் மஹிந்தவிடம் இருந்து கைப்பற்றப்பட்டன. அதன் பின்னர் அவர் ஜெனிவா செல்ல அனுமதிக்கப்பட்டார். விமான நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகத் தாம் ஜெனிவாவுக்குப் புறப்பட்டுச் செல்லும் முன்னர் எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோவுக்கு மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷவால் எடுத்துச் செல்லப்பட்ட அதற்கு முன்னரான காலகட்டத்தில் நாட்டில் காணாமற் போயிருந்த 600 வரையான நபர்களின் விவரங்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய ஆவணங்களை விமான நிலையத்தில் வைத்துப் பொலிஸார் கைப்பற்றியமை ஒரு பெரும் மனித உரிமை மீறல் சம்பவம் எனத் தெரிவித்து, அந்தச் செயற்பாட்டைக் கண்டித்து சமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது ஆட்சேபனையை ஜனாதிபதி பிரேமதாசவுக்கு தந்திமூலம் அனுப்பி வைத்தனர். அவ்விதம் காணாமற் போனோர் தொடர்பான ஆவணங்களை மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியமை, அத்தகைய கடத்திச் செல்லப்பட்டமை மற்றும் காணாமற் போன சம்பவங்களில் அரசு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதை நிரூபிப்பதாக அமைவதாக அவர்கள் தாம் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அனுப்பி வைத்த செய்தியில் குறிப்பிட்டிருந்தனர். அத்துடன், நாடாளுமன்றத்தின் சபாநாயகரின் அனுமதியின்றி ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக் கைது செய்வதோ அல்லது சோதனையிடுவதோ, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையை மீறும் ஒரு செயலாவதால் இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணையொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசவைக் கோரியிருந்தனர். அந்த வேளையில் பத்திரிகைகளில் வெளியாகியிருந்த மேற்குறிப்பிட்ட விவரங்கள் தொடர்பான செய்திகள் பொதுமக்கள் மத்தியில் மிகப் பரபரப்பாகப் பேசப்பட்டன.

அதே சமயம் தம்மையொரு தேசத் துரோகியென விமர்சித்த அவ்வேளைய ஐ.தே.கட்சி அரசுக்குப் பதிலளிக்கும் வகையில் ஜெனிவாவில் இருந்து நாடு திரும்பிய பின்னர் நாடாளுமன்றத்தில் வைத்து மஹிந்த ராஜபக்ஷ தன்னிலை விளக்கமளித்திருந்தார்.

நான் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் செயற்பட்டதாகவும், தேசத் துரோகியாக வெள்ளையர்களிடம் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவரங்களை வழங்கியதாகவும் குற்றம் சாட்டுகிறீர்களே ! இந்த நாட்டின் பொது மக்களது கூக்குரல்கள் குறித்தும், தாய்மார்களின் அழுகுரல்கள் குறித்தும் அப்பாவிகளது ஓலம் குறித்தும் வெளி நாடுகளுக்கு மட்டுமல்லாது எவருக்கும் சரி எடுத்துக்கூறும், தெரியப்படுத்தும் உரிமை எமக்குண்டு. என்று மஹிந்த ராஜபக்ஷ தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

உண்மையில் மஹிந்தவின் அன்றைய செயற்பாடுகள் தேசத் துரோக நடவடிக்கையல்ல. அன்று மஹிந்தவுக்கு மிக அவசியமாயிருந்தது. எப்பாடுபட்டாவது ஐ.தே.கட்சி அரசை வீழ்த்தி சுதந்திரக் கட்சியை அரச பீடத்தில் அமர்த்தியாக வேண்டும் என்ற குறிக்கோளே. அது மட்டுமன்றி மஹிந்த நாட்டு மக்களது அந்த வேளைய நிலைப்பாட்டை நன்றாக நாடி பிடித்துப் பார்த்துச் சரியாகக் கணக்கிட்டிருந்தார். 1988, 89 ஆண்டுகள் காலப் பகுதியில் நாட்டு மக்கள் ஜே.வி.பியினர் மீது கடும் சினமுற்றிருந்தனர். அவர்களது செயற்பாடுகள் நாட்டு மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தியிருந்தன. அந்த வேளையில் ஜே.வி.பியினருக்கு ஆதரவாக மஹிந்த வாயே திறக்கவில்லை. காலப்போக்கில் ஜே.வி.பியினரால் தாம் பட்ட கஷ்டங்களை நாட்டு மக்கள் மறந்து போய் விட்டனர். அந்தத் தருணம் பார்த்தே மஹிந்த தரப்பினர், பிரேமதாச அரசால் படுகொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. இளைஞர் யுவதிகள் குறித்துப் பேசி நாட்டு மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான ஆத்திர உணர்வை ஏற்படுத்தி வைத்தனர்.

இடம்பெற்ற இறுதிப் போருக்கும் இன்று அதே நிலைதான் ஏற்பட்டுள்ளது. இன்று சிங்கள மக்களுக்குப் போர் குறித்த நினைவுகள் அற்றுப்போக ஆரம்பித்துள்ளன. பிரபாகரன்கூட அவர்களது ஞாபகத்தில் இல்லை. அன்று பிரேமதாச அரசால் கொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. இளைஞர் யுவதிகளின் புகைப்படங்களை மஹிந்த தரப்பினர் காட்டியபோது ஐயோ பாவமே எனக் கூறி மனம் வருந்தியமை போன்று இன்று மஹிந்த அரசால் கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களின் படங்களை சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டபோது சிங்கள மக்கள் ஐயோ பாவமே என்று கூறவில்லை. ஆனால் இந்த அரசால் இவற்றையெல்லாம் மூடி மறைக்க இயலாது போய்விட்டதே. அரசால் இதற்கெல்லாம் பதில் கூற இயலாது போயுள்ளதே. இதுவே நாட்டு மக்களது இன்றைய மனவெதும்பல்கள்.

2009 ஆம் ஆண்டில் இறுதிப்போர் முடிவில் "அரசு நல்லதொரு வேலையைச் செய்து முடித்திருக்கிறது" என்று கூறி அரசைப் பாராட்டிய அதே மக்கள் இன்று அரசு சர்வதேசச் சிக்கலொன்றில் மாட்டிக் கொண்டு விட்டதே என்று புலம்ப ஆரம்பித்திருக்கின்றனர்.

உண்மையில் மஹிந்தவைப் போன்றதொரு அரசியல் நுட்பம் வாய்ந்த ஒருவர் இன்று எதிர்க்கட்சியில் இருப்பாரானால் இன்றைய நாட்டுமக்களது உணர்வுகளை நாடி பிடித்துப் பார்த்து நவநீதம்பிள்ளையால் இயலாது போகுமானால் வேறு எந்தவொரு பிள்ளையானாலும் சரி முன்வாருங்கள் என்று கூவி அழைக்காமல் இருக்கப் போவதில்லை.

லக்ஸ்மன்

# நாக வழிபாட்டின் சின்னமான நயினை நாகபூஷணி அம்மன்

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் நாக வழிபாட்டை எடுத்துக் காட்டும் சின்னமாக அமைந்துள்ளது. இந்த ஆலய மூலஸ்தானத்தின் விக்கிரக அமைப்பு ஆயிரம் வருடங்களுக்கு முந்தியது எனக் கூறுகிறார்கள்.

1788 இல் இராமச்சந்திரர் என்பவரால் இந்த ஆலயம் கட்டப்பட்டதாக கச்சேரி பதிவேட்டில் உள்ளதாகச் சொல்லப்பட்டாலும், 1620க்கும் 1624க்கும் இடைப்பட்ட காலத்தில் வீராச்சாமி செட்டியாரால் இந்த ஆலயம் அமைக்கப்பட்டதாகக் கூறுவாருமுண்டு. போர்த்துக்கேயரின் வருகையை அடுத்து அம்மன் ஆலயம் மிகவும் மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டபோது ஆலயத்தின் தேர் தானாகவே உருண்டு சென்று கடலில் மூழ்கிப் போனதாகவும் பௌர்ணமி தினங்களில் தேரின் முடி வெளியில் தெரிவதாகவும் முன்னர் சொல்லப்படுவதுண்டு.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமைகளுடன் வன்னி மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டுள்ள சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடமாக விளங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆலயம் தீவுப் பகுதியில் மட்டுமன்றி குடாநாட்டிலும் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வதியும் தமிழ் மக்கள் மத்தியிலும் முக்கியத்துவம் மிக்கதொன்றாக விளங்குகின்றது.




நயினாதீவு இறங்கு துறையை நோக்கியவாறு அமைந்துள்ள இந்த ஆலயத்தின் உற்சவ காலம் மக்களின் விழாக் காலமாகவே அமைகின்றது. நாட்டின் சூழ்நிலை இயல்புக்குத் திரும்பிய பின்னர் தென்பகுதியில் உள்ள மக்களும் பெருமளவில் நயினாதீவுக்கு வருகைதந்து அம்பாளையும் தரிசித்துச் செல்கின்றார்கள்.

ஆடி மாதத்தில் 15 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் கலந்துகொண்டு அம்பாளின் அருளைப்பெறும் பொருட்டு பல்லாயிரக் கணக்கான மக்கள் நயினாதீவுக்கு வருவதால் அவர்களின் தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உற்சவ காலங்களில் மக்களுக்கு எந்தவித கஷ்டங்களும் ஏற்படாதவாறு கவனிப்பதற்காக ஆலயச் சூழலில் வேலணை பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்றின் அலுவலகங்களும் வைத்திய சிகிச்சை நிலையமும் தற்காலிகமாக அமைக்கப்படுகின்றன. பெருமளவு தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதைத் தவிர்ப்பதுடன் எமது கலாசார விழுமியங்களைப் பேணும்



வகையில் உடைகளை அணிந்து வருவது போன்ற அறிவித்தல்களை அறங்காவல் சபை பெண்களுக்கு வழங்கியுள்ளது. எமது கலாசாரத்தின் அடையாளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஆலய அறங்காவல் சபை உறுதியான செயற்பாடுகளைப் பேணிவருவது குறிப்பிடத் தக்கது.

நீண்ட தூரங்களில் இருந்துவரும் மக்கள் தமது உணவுத் தேவைகளை உரிய முறையில் நிறைவேற்றக்கூடியதாக அமுதசுரபி அன்னதான சபை ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சிபெற்று பகலிரவாக அனைத்து அடியார்களுக்கும் சிறந்த முறையில் உணவு வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது. முதியவர்களுக்கு விசேட இருக்கை வசதிகளையும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உற்சவ காலங்கள் மட்டுமன்றி ஏனைய நாள்களிலும் வரும் அடியார்களுக்கு ஆலய அறங்காவல் சபை பூசைகளின் முடிவில் அன்னதானம் வழங்குவதும் ஆலயத்தின் விசேட அம்சங்களில் ஒன்று. எந்த வேளையிலும் பக்தி மணம் கமழும் இடமாக விளங்கும் அம்பாள் ஆலயமும் அதன் சுற்றாடலும் நயினாதீவுக்கு மட்டுமன்றி தீவுப் பகுதிக்கும்கூட ஒரு சிறப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**போர்த்துக்கேயரின் வருகையை அடுத்து அம்மன் ஆலயம் மிகவும் மோசமான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்பட்டபோது ஆலயத்தின் தேர் தானாகவே உருண்டு சென்று கடலில் மூழ்கிப் போனதாகவும் பௌர்ணமி தினங்களில் தேரின் முடி வெளியில் தெரிவதாகவும் முன்னர் சொல்லப்படுவதுண்டு.**

## மகிழ்வோடு கொடியேறி வருவாயம்மா... மனமெல்லாம் நீ ஏறி அருள்வாயம்மா....



அம்மா என் அம்மா நாகம்மா – நயினை
நகராளும் எங்கள் தாயம்மா
அலை கடல் சூழ்ந்திட அமர்ந்தாயம்மா – நீயும்
அரவாலே பூச்சூட மகிழ்ந்தாயம்மா
கடல் தாண்டி வருவோரின்
கதியென்னம்மா – அவர்
கண்ணீரின் மொழிக்குந்தன் பதிலென்னம்மா
கவலைகள் பறந்தோட வழி சொல்லம்மா – தீரா
கஷ்டங்கள் விட்டோட வழி காட்டம்மா
தமிழ்வாழ தாயே நீ
ஓடி வருவாயம்மா – என்றும்
தரணியில் அமைதியையே தருவாயம்மா
மகிழ்வோடு கொடியேறி
வருவாயம்மா – அடியார்
மனமெல்லாம் நீ ஏறி அருள்வாயம்மா.

*நயினையூர் தரும.பாலன்.*

## நீச்சல் குளத்தில் தள்ளியது யார்...?

நிறுவனத்தின் இயக்குநர் தன்னுடைய அலுவலக அதிகாரிகளை அழைத்துக்கொண்டு தன்னுடைய பண்ணை வீட்டுக்கு வந்தார். அங்கிருந்த மிகப் பெரிய நீச்சல் குளத்தைப் பார்த்ததும் எல்லோருக்கும் அதில் குளிப்பதற்கு ஆசை வந்தது.

அவர்களின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட இயக்குநர், இந்த அழகான நீச்சல் குளத்தில் ஆபத்தும் இருக்கின்றது. நிறைய முதலைகள் இதில் இருக்கின்றன. இந்த நீச்சல் குளத்தின் ஒருமுனையிலிருந்து அடுத்த முனைக்கு நீந்தி கரையேறுபவர்களுக்கு என்னுடைய வீடு, பதவி, அந்தஸ்து என எதையும் தருவதற்கு சம்மதிக்கிறேன் என்றார்.

அலுவலர்கள் ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. காரணம் நீச்சல் குளத்தில் இருக்கும் முதலைகள்தான். எல்லோரும் அந்த நீச்சல் குளத்தை விட்டுக் கிளம்பிக் கொண்டிருந்த நேரத்தில், அதிகாரிகளில் ஒருவர் நீச்சல் குளத்தில் குதித்த சப்தம் கேட்டது. குதித்த அந்த அதிகாரியைப் பிடிப்பதற்கு முதலைகள் வாயைப் பிளந்துகொண்டு பின்தொடர, அந்த அதிகாரியோ உயிரைக் கையில் பிடித்தபடி நீந்திக் கொண்டிருந்தார். நீச்சல் குளத்தின் மறுமுனையை அவர் அடைய இன்னும் சில அடிகளே இருந்தன. இதைப் பார்த்த இயக்குநர் அந்த வீரமான அதிகாரியைக் கட்டித் தழுவிப் பாராட்ட நீச்சல் குளத்தின் மறுமுனைக்குச் சென்றார்.

தப்பித்தோம் பிழைத்தோம் என மறுமுனையை அடைந்த அதிகாரியைக் கையைப் பிடித்து மேலே தூக்கிய இயக்குநர், உன்னுடைய சாகசத்தைப் பாராட்டுகிறேன். உனக்கு என்ன வேண்டும் கேள்?' என்றார்.

அதற்கு மூச்சு வாங்கியபடியே அந்த அதிகாரி, யாரய்யா என்னை நீச்சல் குளத்திலே தள்ளிவிட்டவர்? என்றார்.

வாசகர் திருமுகம்

## மன்னாரில் தொழில்நுட்பக் கல்லூரி

மன்னார் மாவட்டம் பல கிராமங்களையும், குக்கிராமங்களையும், மன்னார் நகரத்தையும் உள்ளடக்கிய பரந்த பிரதேசத்தில் அமைந்துள்ளது.

கல்வியை தமது பிள்ளைகளுக்கு வழங்குவதில் இங்குள்ள பெற்றோர் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று இங்கு அமையாதது பெரும் குறைபாடாகவுள்ளது. இதனால் பல இளைஞர்கள் க.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் கற்ற பின்னர் தமது தொழில் கல்வியைப் பெற முடியாத நிலையில் காணப்படுகின்றனர். இது இவர்களின் எதிர்காலத்தையும் பாதித்து வருகின்றது.

போர் வடுக்களால் வறுமை நிலையில் உள்ள இங்குள்ள மக்கள் மீன்பிடியையும், விவசாயத்தையும் முக்கிய தொழில்களாகக் கொண்டுள்ளனர்.

ஆனால் அத்து மீறுபவர்களின் செயல் களால் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்த நிலை யில் காணப்படுகின்றது. மழை பெய்யாத தால் விவசாயமும் இவர்களுக்குக் கைகொடுக்கவில்லை. நட்டத்தையே ஏற்படுத்தி யுள்ளது. இந்த நிலையில் தமது பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பி வைத்து தொழில் கல்வியை வழங்குவதை இங்குள்ளவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியாதுள்ளது.

இந்த நிலையில் மன்னார் பிரதான வீதியில் பச்சை நிறத்திலான கூரைகள் அமைக்கப்பட்ட பல கட்டடங்கள் எழுந்தபோது தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கப்படுவதாக இங்குள்ளவர்கள் தமக்குள் கூறிக்கொண்டனர். ஆனால் அவை பாதுகாப்புப் படையினருக்காகவே அமைக்கப்பட்டதை அறிந்த பின்னர் ஏமாற்றம் அடைந்தனர். ஆகவே இங்குள்ள மக்களின் ஏமாற்றத்தைப் போக்கும் பொருட்டு தொழில்நுட்பக் கல்லூரியொன்றை மன்னாரில் அமைப்பது காலத்தின் தேவையாகும். இதனால் ஏராளமான இளைஞர்கள் பயன் பெறுவார்கள். மன்னார் இளைஞர்களின் கல்வித் தேவை யைப் பூர்த்தி செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகள் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும் என்பதே மன்னார் மக்களின் பெருவிருப்பமாக உள்ளது.

*தொ. கிறிஸ்ரியன், பேசாலை.*

## தமிழ்மொழி அரிச்சுவடியைப் பின்பற்றுவார்களா?

22.05.2014 ஆம் திகதி வாசகர் திருமுகத்தில் வெளியான எனது கருத்துக்குச் சார்பாக விளக்கமளித்து, 14.06.2014 ஆம் திகதி வாசகர் திருமுகத்தில் தோன்றிய வவுனியா பாவரன் அவர்களே!

எனது ஆதங்கத்தை நான் பத்திரிகை மூலம் வெளிப்படுத்தியபோது அதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துவரும் அன்பர்களில் தாங்களும் ஒருவராக உள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ் அரிச் சுவடியின் 247 எழுத்துக்களுள் இல்லாத ா, ாி, ாீ போன்ற எழுத்துக்கள் பாடசாலைப் புத்தகங்களில் மாத்திரமன்றி பத்திரிகைகள், இணையத்தளங்கள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் ஏனைய புத்தகங்களிலும் தாராளமாகக் காணப்படுகின்றன. இனிமேலாவது இந்தப் பிழைகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தங்களின் ஆலோசனைக்கமைவாக கல்வி அமைச்சருக்கும் இதனைத் தெரியப்படுத்தவுள்ளேன்.

*பா. மயூரன், திருநெல்வேலி.*

# நான் 30 நாள்களில் செய்தவை இவை

## பட்டியலிடுகிறார் மோடி

புதுடில்லி, ஜூன் 28

பிரதமர் மோடி தனது தலைமையிலான புதிய அரசின் 30 நாள் பணி பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்.

மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு பதவியேற்று ஜூன் 2[illegible] ஆம் திகதியுடன் ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது இந்நிலையில், இது பற்றி இணையத்தில் கருத்து தெரிவித்துள்ள மோடி, எனது நோக்கங்களை



யும் நாட்டில் ஆக்கபூர்வ மாற்றம் கொண்டு வருவதில் எனக்கு உள்ள நேர்மையையும் சரியானவர்களுக்குச் சரியான நேரத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதுதான் டில்லியில் நான் எதிர்கொண்டு வரும் சவால். இதற்கு அமைப்பு முறையில் மாற்றம் வேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் இந்தியாவை உச்சத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதே எனது லட்சியம்.

நான் யாரையும் குறை கூறவிரும்பவில்லை. எனது நம்பிக்கையும் மன உறுதியும் பல மடங்கு அதிகரித்துள்ளது. இதற்கு முந்தைய அரசுகள் 67 ஆண்டு காலம் ஆட்சிக் கட்டிலில் இருந்துள்ளன. அத்தோடு ஒப்பிட்டால் நான் நிறைவு செய்துள்ள ஒரு மாதம் வெறும் பூஜ்ஜியம்.

ஆனால், இந்த ஒரு மாதத்தில் எமது குழு ஒவ்வொரு நொடியையும் மக்கள் நலன் மீதே செலுத்தியுள்ளது. ஒவ்வொரு புதிய அரசுக்கும் பத்திரிகை நண்பர்கள் சொல்வதுபோல் தேனிலவு காலம் என்று உள்ளது.

முந்தைய அரசுகள் இந்த தேனிலவு காலத்தை 100 நாள்களுக்கு மேலும் நீடித்து சுகத்தை அனுபவித்துள்ளன.

ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் இத்தகைய தேனிலவு என்ற சுகபோகம் எதுவும் கிடையாது. ஆட்சியில் அமர்ந்த 100 மணி நேரத்திலேயே குற்றச்சாட்டுகள் வர ஆரம்பித்தன.

நாட்டுக்குச் சேவை செய்வதை இலட்சியமாக கொண்டு பணியாற்றும் ஒருவருக்கு இந்தச் சர்ச்சைகளும் குற்றச்சாட்டுகளும் பெரிதல்ல. மக்களின் ஆதரவும் அரவணைப்பும் எனக்கு முழுமையாகக் கிடைக்கிறது. அதனால் இன்னும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் என்கிற எண்ணம்தான் மேலோங்குகிறது.

39 ஆண்டுகளுக்கு முன் இதே திகதியில் நாட்டில் நடை முறைப் படுத்தப்பட்ட நெருக்கடி நிலைப் பிரகடனம், நாடு சந்தித்த இருண்ட ஆட்சிக் காலங்களில் தனி முத்திரை பெற்று மனதை விட்டு அகலாமல் நிற்கிறது. அப்போது பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், எதிர்க்கட்சிகள் என யாவுமே நசுக்கப்பட்டன. ஆனால், இத்தகைய சுதந் திரங்களை கட்டிக்காத்திட உறுதி அளிக்கிறேன்-என்று கூறியுள்ளார். (த)

# நான்தான் தமிழகத்தின் அடுத்த முதலமைச்சர்

## விஜயகாந்த் அதிரடி அறிவிப்பு

சென்னை, ஜூன் 28

தோல்விகளைக் கண்டு துவண்டு விடமாட்டேன். நான்தான் தமிழகத்தின் அடுத்த முதல்வர் என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த், கட்சி நிர்வாகிகளிடம் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'உங்களுடன் நான்' என்ற கட்சி நிகழ்ச்சியில் கோவை மாவட்டத்தில், கட்சி வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் குறித்து, நிர்வாகிகளிடம் விஜயகாந்த் தனித் தனியாகக் கருத்து கேட்டுள்ளார்.

மேலும், கட்சியைப் பலப் படுத்துவது குறித்துத் தனது கருத்துக்களையும் அவர் எடுத்துரைத்துள்ளார்.



விஜயகாந்த்

பின்னர், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் புகைப் படம் எடுத்துக் கொண்டார்.

இது குறித்து, தே.மு.தி.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கூறுகையில்,

ஒகஸ்ட் 25ஆம் திகதி எனது பிறந்த நாளை மாவட்டந்தோறும் கொண்டாடவேண்டும். கட்சியின் ஆண்டு விழா வையும் சிறப்பாகக் கொண்டாடவேண்டும்.

நலத்திட்ட உதவிகளைப் பொதுமக்களுக்கு அதிகளவில் வழங்கவேண்டும். பொதுமக்கள் பிரச்சினைக்காக, மாவட்ட நிர்வாகிகள் அடிக்கடி போராட்டங்களை நடத்தவேண்டும். அது கட்சியை வளர்க்கும்.

மேலும், தோல்விகளை கண்டு நான் துவண்டுவிட மாட்டேன். 2016இல் நான் தான் முதல்வர் என்று விஜயகாந்த் கூறினார் - என்று தெரிவித்தனர். (த)



மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லியை நேற்று சந்தித்த ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆந்திராவுக்கு விசேட நிதி ஒதுக்கீடுசெய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (த)

# உத்தரகண்ட் கோயிலில் சோனியா வழிபாடு

புதுடில்லி, ஜூன் 28

உத்தரகண்ட் மாநிலம், பாகஸ்வர் மாவட்டம், கவுசானியில் உள்ள சிவன் கோயிலில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கடந்த வியாழக்கிழமை வழிபாடு செய்தார்.

கோடைக் காலங்களின்போது உத்தரகண்டில் உள்ள சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த கவுசானி சிவன் கோயிலுக்குச் சோனியா செல்வது வழக்கம்.

கவுசானியில் முகாமிட்டுள்ள அவர் பல்வேறு பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். கடந்த வியாழக்கிழமை அவர் சிவன் கோயிலுக்குச் சென்றார்.

மலைப் பாதையில் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று அவர் சுவாமியை வழிபட்டார். (த)



சோனியா காந்தி

# உயர் நீதிமன்ற உத்தரவுகள் இனிமேல் இணையத்தளத்தில்

சென்னை, ஜூன் 28

சென்னை உயர் நீதிமன்றம் தினந்தோறும் பிறப்பிக்கும் அனைத்து உத்தரவுகளையும் இனிமேல் இணையத் தளத்தில் பார்வையிடலாம்.

விரைவில் அறிமுகப்படுத்தப் படவுள்ள இந்த வசதியால் வழக்கறிஞர்களும், வழக்காட வரும் பொதுமக்களும் பெரிதும் பயனடைவார்கள்.

உச்ச நீதிமன்றம் ஒவ்வொரு வழக்கிலும் பிறப்பிக்கும் இறுதி உத்தரவுகள் மட்டுமின்றி, இடைக்கால உத்தரவுகள் கூட அன்றைய தினமே இணையத் தளத்தில் வெளியிடப்படு கின்றன. இதனால் தங்கள் வழக்கில் பிறப்பிக்கப் பட்டுள்ள உத்தரவை அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பொதுமக்களும், வழக்கறிஞர்களும்தெரிந்து கொண்டு அடுத்த கட்ட நட வடிக்கை குறித்து உடனடியாகத் திட்டமிட முடிகிறது.

ஆனால் சென்னை உயர் நீதி மன்றத்தைப் பொறுத்தமட்டில் இறுதி உத்தரவுகள் மட்டுமே தற்போது இணையத் தளத்தில் வெளியிடப்படுகின்றன. அதுவும் கூட எல்லா வழக்குகளின் இறுதி உத்தரவுகளும் இணையத்தளத்தில் கிடைக்காது.

குறைவான வழக்குகளின் தீர்ப்புகள் தான் இணையத்தளத்தில் வெளியிடப் பட்டு வருகின்றன. இதனால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக் காடவரும் பொதுமக்கள் தங்கள் வழக்கில் பிறப் பிக்கப்படும் உத்தரவை உடனடியாக அறிய முடியாத நிலை இருந்து வருகிறது. இந்நிலையில் உச்ச நீதிமன்றம் போலவே சென்னை உயர் நீதிமன்றத்திலும் அனைத்து உத்தரவுகளையும் இணையத்தளத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளன. (த)

# எரிவாயு குழாய் வெடித்து ஆந்திராவில் 14 பேர் சாவு



வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற வேளை



வெடிப்பினால் ஏற்பட்ட பாரிய குழி

புதுடில்லி, ஜூன் 28

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் எரிவாயுவை எடுத்துச் செல்லும் குழாய் ஒன்று வெடித்ததில் இதுவரை 14 பேர் இறந்துள்ளதாக மூத்த அமைச்சரொருவர் தெரி வித்துள்ளார்.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள 'கெயில்' என்ற இந்திய எரிவாயு ஆணையத்தின் கட்டடத்தில் உள்ள ஒரு குழாயிலிருந்து தீப்பிழம்புகள் எழுவதை தூர இடங்களில் இருந்தே பார்க்க முடிந்தது.

குறைந்தது 15 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். விபத்துக்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

'கெயில்' நிறுவனம் இந்திய அரசுக்குச் சொந்தமான மிகப் பெரிய இயற்கை எரிவாயு செயலாக்க மற்றும் விநியோக நிறுவனங்களில் ஒன்றாகும்.

நகரம் கிராமத்தில் இருக்கும் அரசுக்குச் சொந்தமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆணையத்தின் (ஓ.என்.ஜி.சி) எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்துக்கு அருகில் இருக்கும் இந்த நிறுவனத்தின் கட்டடத்தில் உள்ள 46 சென்ரி மீற்றர் அளவிலான குழாயில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் பி.சி. திரிபாதி செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விபத்துக்கான காரணங்கள் இன்னும் தெரியவரவில்லை என்றும், தற்போது மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருவதாகவும் நிறுவனத்தின் தலைவர் பி.சி. திரிபாதி தெரிவித்துள்ளார்.

இதுவரை விபத்தில் 14 பேர் இறந்துள்ளதாக ஆந்திர பிரதேசத்தின் உள்துறை அமைச்சர் சின்னப்பா ராஜப்பா தெரிவித்துள்ளார்.

இந்தத் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் ஆனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றும் அம்மாவட்டத்தின் மூத்த அதிகாரி நீது குமாரி பிரசாத் தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் முன்னதாக சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள இந்தியாவின் மிக பெரிய ஆலை ஒன்றில் நடந்த வெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட ஒரு விஷ வாயுக் கசிவில் குறைந்தது ஆறு பேர் கொல்லப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# ஈராக்கின் பல பகுதிகள் கிளர்ச்சியாளர்கள் வசம்

## கிராமங்களை விட்டு மக்கள் தப்பியோட்டம்

பக்தாத், ஜூன் 28

அரசுப் படைகளின் எதிர்ப்பை முறியடித்து ஈராக்கின் வடக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் வேகமாக முன்னேறி வருகின்றனர். இதையடுத்து அச்சமடைந்துள்ள பொதுமக்கள் தமது கிராமங்களை விட்டு வெளியேறி குர்துக்களின் தன்னாட்சிப் பிராந்தியத்தில் உள்ள சோதனைச் சாவடிப் பகுதியில் குவிந்தனர்.

பிற பகுதிகளை விட இந்தப் பிராந்தியம் பாதுகாப்பு மிக்கதாகக் கருதி பெரும் தொகையானோர் இங்கே தஞ்சம் புகுந்துள்ளனர். தஞ்சம் புகுபவர்களில் ஏராளமானோர் ஷியா பிரிவினர். இவர்கள் மொசூல் நகருக்கு வெளியே உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இந்த நகரை இந்த மாதத் தொடக்கத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த சன்னி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர்.

சிரியா - ஈராக் எல்லைகளின் இரு புறத்திலும் முழுக்க முழுக்க இஸ்லாமிய அதிகாரப் பகுதியை அமைப்பது என்ற நோக்குடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் ஈராக் அரசுப் படைகளை எதிர்த்து போரிட்டு முன்னேறி வருகின்றனர்.

வடக்கில் கிறிஸ்தவர்கள் வசிக்கும் கிராமங்களையும் இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுவதால் கிறிஸ்தவர்களும் குர்து தன்னாட்சிப் பகுதியில் தஞ்சம் கேட்டு வருகின்றனர். குர்திஷ் பிராந்தியத்தின் எல்லைப் பகுதியிலிருந்து 75 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹம் தானியா என்ற இடத்தில் உள்ள கிராமங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன.



கிராமத்தை விட்டு வெளியேறும் மக்கள்

ஷியா பிரிவினர்களை ஈவிரக்கமின்றிக் கிளர்ச்சியாளர்கள் கொல்கின்றனர். ஷியா பிரிவினரின் வீடு ஒவ்வொன்றையும் தீ வைத்து கொளுத்துகிறார்கள். குபா பகுதியில் தங்கி இருக்க அஞ்சி அனைவரும் வெளியேறி விட்டனர் என்று ஒருவர் தெரிவித்தார். பக்தாதின் வடக்கே உள்ள பலாத் பகுதியில் உள்ள விமானப்படை முகாமை தாக்குவதாக அச்சுறுத்தி இருந்த சன்னி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து அரசு ஆதரவுப் படைகள் சண்டையிட்டன என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். ஈராக்கில் அரசுப் படைகளை எதிர்த்து சண்டையிடும் சன்னி கிளர்ச்சியாளர்களை எதிர்த்து சிரியா நாட்டின் விமானப்படை தாக்குதல் நடத்தியுள்ளது. இதை ஈராக் பிரதமர் நூரி அல் ம்ாலிகி வியாழக்கிழமை உறுதி செய்தார். (த)

## நேபாளத்தில் களைகட்டும் சிறுநீரகங்களின் விற்பனை

காத்மண்டு, ஜூன் 28

நேபாள நாட்டில் சிறுநீரக விற்பனை களைகட்டி வருகின்றது. தெருவுக்கு தெரு சிறுநீரகங்களை விற்பனை செய்வதற்குப் பலர் காத்திருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்திய கணக்கெடுப்பின்படி, ஆண்டுக்கு 7 ஆயிரம் சிறுநீரகங்கள் நேபாளத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. சிறுநீரகங்களை விற்பனை செய்வது சட்ட விரோதம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், ஆண்டுக்கு ஆண்டு அதன் விற்பனை அதிகரித்து வருகிறது.

சர்வதேச நாடுகளில் இருந்து 300க்கும் அதிகமான சிறுநீரக முகவர்கள் காத்மாண்டு உள்ளிட்ட இடங்களில் முகாம் இட்டுள்ளனர் என்றும், ஒரு சிறுநீரகத்திற்கு 18 லட்சம் ரூபா வரை கிடைப்பதால், போட்டி போட்டுப் பலரும் சிறுநீரகம் கொடுக்கத் தயாராக உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (த)



## பிரேஸிலில் அழுதார் ஹரி



உதைபந்து விளையாட்டில்

ரியோடி ஜெனிரோ, ஜூன் 28

பிரிட்டன் இளவரசர் ஹரி பிரேஸிலில் ஆதரவற்ற குழந்தைகளைச் சந்தித்து கண்ணீர் விட்டு அழுத காட்சி அனைவரையும் உருக வைத்துள்ளது.

பிரேஸிலில் ராணியின் பிறந்த நாளை முன்னிட்டு இளவரசர் ஹரி அங்கு உள்ள ஏசர் என்ற கருணை இல்லத்தில் உள்ள சிறுவர்களைச் சந்தித்துள்ளார். அங்கு அவர்களின் கதையைக் கேட்ட அவர், தனது தாயை இழந்ததை விட, இந்த சிறுவர்கள் அனுபவித்த வேதனைகள் பெரிது எனக் கண்ணீர் விட்டு அழுதுள்ளார்.

மேலும் இவர்களின் முகத்தில் உள்ள சிரிப்புக்குக் காரணம் இந்த கருணை இல்லம் தான் எனப் பாராட்டியுள்ளார்.

இது குறித்து ஹரி கூறுகையில்; நான் பொது இடத்தில் இவ்வாறு அழுதது இல்லை. இச்சிறுவர்களின் கதையைக் கேட்ட பின் எனது வாழ்கையில் இவ்வாறு நடந்திருக்க கூடும் என எண்ணினேன்-என்றார்.

இதனை அடுத்து ஹரி, சிறுவர்களுடன் சேர்ந்து அந்த இல்லத்தைச் சுற்றி பார்த்து அவர்களின் திட்டங்களைப் பற்றி கேட்டறிந்தார். மேலும் அவர்களுடன் உதைபந்து விளையாடி அனைவரையும் மகிழ வைத்தார். (த)

# விமானத்தில் பறந்தவாறே போட்டியை ரசித்த ஒபாமா

வொஷிங்ரன், ஜூன் 28

ஜேர்மனி-அமெரிக்கா மோதிய உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை விமானத்தில் பயணித்தப்படியே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டு ரசித்துள்ளார்.

ஒபாமா மின்னபோலிஸ் நகருக்குச் செல்வதற்காக எயார் போர்ஸ் வன் விமானத்தில் பயணித்தார்.

இந்தப் பயணத்தின்போது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை அவர் விமானத்தில் பறந்தபடியே, தான் சென்றடையும் இடம் வரை பார்த்து ரசித்துள்ளார்.

மேலும் அமெரிக்க ஜனாதிபதிகளுக்கான இந்தப் பிரத்தியேக விமானம், பாதுகாப்பு ஏற்பாடுகள், தகவல் தொடர்பு வசதிகள் போன்ற சகல வசதிகளுடன் ஒரு குட்டி வெள்ளை மாளிகை போல் இருந்தது.



போட்டியை ரசிக்கும் ஒபாமா

இதில் பறந்த ஒபாமா மற்றும் அவரது உதவியாளர்கள் திண்பண்டங்களை சுவைத்தவாறே போட்டியை மிக ஆர்வத்துடன் கண்டு களித்துள்ளனர்.

விமானம் தரையிறங்கிய போது போட்டியும் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் ஜேர்மனி அணி, தோமஸ் முல்லர் போட்ட அபாரமான கோல் காரணமாக 1:0 என்ற கணக்கில் வென்றது.

இந்நிலையில் ஜி பிரிவில் இடம் பெற்றுள்ள அமெரிக்கா இப்போட்டியில் தோற்றாலும் கூட இன்னொரு போட்டியில் போர்த்துக்கல் அணி கானாவை 2:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்ததால் 2ஆவது இடத்தைப் பிடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. (த)

## தவறான விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானம்

ஹனோய், ஜூன் 28

வியட்நாம் நாட்டிலுள்ள வியட் ஜெட் எயார் என்ற விமான நிறுவனத்தின் விமானமொன்று தவறான விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மத்திய ஹைலேண்ட்ஸ் நகரை நோக்கிச் சென்ற வீ.ஜே 8575 என்ற விமானம், 130 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இன்ஹா ட்ரங் நகருக்கு அண்மையிலுள்ள ரன்ஹ் விமா நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. இவ்விமானத்தில் 200 பேர் பயணித்துள்ளனர்.

'இத்தவறுக்கு விமானத்தின் செயன்முறைகளை முறையாக பின்பற்றாத விமான இணைப்பாளர்கள் மற்றும் வியட் ஜெட் நிறுவன விமானப் பணியாளர்களே காரணம்' என வியட்நாம் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து சந்தேகத்துக்குரிய விமானப் பணியாளர்களின் அனுமதிகள் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன. ஆனால் தவறான தரையிறக்கத்துடன் சம்பந்தப்பட்ட விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதனால் அனுமதி ரத்துச் செய்யப்பட்ட பணியாளர்கள் குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

வியட்நாமில் கடந்த 2011ஆம் ஆண்டிலிருந்து கட்டணம் குறைந்த தனியார் விமானங்கள் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# கனடாவை அதிர வைத்த மிகக் கோரமான விபத்து

மொன்றியல், ஜூன் 28

கனடா தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் ஒரே நேரத்தில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் விட்பை என்ற பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன் தினம் ஒரே நேரத்தில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இரண்டு கார்கள், ஒரு டிராக்டர் மற்றும் ஒரு பஸ் ஆகியன இந்த விபத்தில் சிக்கின.

இந்த விபத்தில் காரில் பயணம் செய்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.



விபத்துக்குள்ளான கார்

மேலும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மூன்று பேரில் இரண்டு பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளதாக மருத்துவர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவத்தினால் சிறிது நேரம் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டு சிறிது நேரத்திற்கு பின் வாகனங்கள் சாலையில் செல்ல அனுமதிக்கப்பட்டன. (த)

## சாவகச்சேரி மருத்துவமனையில் ஒருவர் சடலமாக ஒப்படைப்பு

தென்மராட்சி,ஜூன் 28

மயக்கமுற்ற நிலையில் பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது இடைவழியில் உயிரிழந்தார். பின்னர் அவரது சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இயக்கச்சி கோவில்வயலைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான பொன்னையா நவரத்தினம் (வயது - 56) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாள்களுக்கு முன் வீட்டிலிருந்து சென்றவர் வீடு திரும்பாத நிலையில் நேற்று முன்தினம் முற்பகல் சங்கத்தார் வயல் சுடலையில் மயங்கிய நிலையில் மீட்கப்பட்டார் என்றும், வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றபோது அவரது உடல் சோர்வடைந்ததால் பளை மருத்துவமனைக்கு தாம் கொண்டு சென்றனர் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக அவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டபோது இடைவழியில் உயிரிழந்துவிட்டார் என்றும் உறவினர் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-9)



## இணுவில் கந்தசாமி கோயில் கும்பாபிஷேகம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற அருள்மிகு இணுவில் கந்தசாமி கோயில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சுபவேளையான காலை 8.30 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 5.41 மணிக்கு ஆரம்பக் கிரியைகள் நடைபெற உள்ளன. அத்துடன் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு புதன்கிழமை மாலை 4 மணி வரை நடைபெறும்.

கும்பாபிஷேக நிகழ்வையொட்டி ஏழு நாள்களும் தாக சாந்தி மற்றும் மகேஸ்வர பூசை என்பனவும் இரவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

விசேட ஏற்பாடாக சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதி, பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என கோயில் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (த)

## குப்பையால் நிறையும் உத்திரிகைக் குளம்

அளவெட்டி, ஜூன் 28

கந்தரோடை சுன்னாகம் வீதியில் கந்தரோடை உத்திரிகை வயல்கள் அமைந்துள்ள பகுதியில் உள்ள உத்திரிகைக் குளத்தில் தற்போது நீர் வற்றியுள்ளதால், குளப்பகுதியைப் குப்பைகளைப் போடுவதற்குப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர்.

பாவனைக்கு உதவாத பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள், மதுப் போத்தல்கள், பியர் ரின்கள் . இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள் என்பவை இங்கு வீசப்படுகின்றன.

இதன் காரணமாக குளத்தின் அருகில் உள்ள வீதி ஓரம் குப்பை கூளங்கள் நிறைந்து காணப்படுகின்றது.

இதனால் சூழல் மாசடைவதுடன் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதியில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவித்தனர். கடந்த வருடம் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டதாகவும், இந்தப் பகுதி மக்களில் ஒரு சிலர் இவ்வாறான விதத்தில் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதால் குளம் மாசடைவதுடன் இதனை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகளும் பாதிக்கப்படக்கூடிய நிலை காணப்படுகின்றது. (க-36)




MK



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: இன்று கல்வியில் புதிய மாற்றம் உருவாகும். அரச அனுகூலம் ஏற்படும். வாகனங்களைச் செலுத்தும்போது மிகவும் கவனம் தேவை. செய்யும் தொழிலில் இடமாற்றமோ அல்லது பணி நிரந்தரமோ ஏற்படலாம்.

**இடபம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு, மரியாதை சிறப்படையும். செல்வாக்கு ஓங்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தம்பதிகளிடையே அன்பு மேலோங்கும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும்.

**மிதுனம்**: எதிலும் சிறிதளவு ஆதாயம் ஏற்படும். முன்விரோதம் காரணமாக சில சங்கடங்கள் உருவாகலாம். இருந்தபோதும் அவற்றைச் சமாளிக்கும் வழிகள் உங்களுக்குப் புலப்படும். தெய்வப்பணி, தருமப் பணி போன்ற நற்காரியங்களில் ஈடுபடவும் வாய்ப்புகள் உண்டு.

**கடகம்**: தொழிலில் சிக்கல்கள் உருவாகாது. இருந்தபோதிலும் சிற்சில வாக்குவாதங்கள் இருக்கும். எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் தொல்லைகள் இராது. அடுத்தவர்களுடைய விவகாரங்களில் வீணாகத் தலையிட வேண்டாம்.

**சிங்கம்**: விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களுடன் மனத்தாக்கம் வரும். யாருக்கும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் வரக்கூடும்.

**கன்னி**: பொதுவாக அன்றாடப் பணிகளைக் கவனித்துக்கொண்டு மிகவும் நிதானமாக இருக்க வேண்டிய நாள். பெரியோர் சொற்படி நடந்து கொண்டால் தொல்லைகளைத் தவிர்க்கலாம். பலவிதமான சூழ்நிலைகளை உங்களுடைய சாதுரியத்தால் சமாளிப்பீர்கள்.

**துலாம்**: எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் சச்சரவுகளை நீக்கலாம். ஆசையைக் குறைத்துக்கொண்டு அன்றாடப் பணிகளைச் சரிவரச் செய்து வந்தாலே நல்லவிதமான அனுகூலங்கள் உங்களை வந்து சேரும்.

**விருச்சிகம்**: அகலக்கால் வைத்தால் அவதி நிச்சயம். எதிர்காலத்துக்குத் தேவையான உபயோகமுள்ள பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். பகைவர்கள் உங்களுக்கு பணியக்கூடிய சூழ்நிலைகள் உருவாகும்.

**தனுசு**: நீண்ட நாள்களாக எதிர்பார்த்த குறிப்பிட்ட நன்மை நடக்கும் நாள். எதிர்பாராத வகையில் பணம் வந்து சேரும். சில தொல்லைகள் தவிர்க்க முடியாமற் போகும். தெய்வப்பணி, தருமப்பணி போன்ற நற்காரியங்களில் ஈடுபட்டால் தொல்லைகள் குறையும்.

**மகரம்**: பொருளாதாரச் சங்கடங்கள் உருவாகாது. அன்றாடப் பணிகள் சரிவர நடைபெறும். உற்சாகத்துடன் இந்த நாளை கழிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் இடர் ஏற்பட இடமுண்டு என்பதால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**கும்பம்**: அனுபவம் மூலமாக நன்மைகள் கிடைக்கப் பெறுவீர்கள். உறவினரால் ஒரு தொல்லை ஏற்படலாம். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாக நேரிடலாம். கலைத்துறை சார்ந்தவர்களுக்கு இந்த நாள் சிறப்பாக அமையும்.

**மீனம்**: அவ்வப்போது சின்னச் சின்ன வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும் மிகவும் சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். வெளியிடங்களில் எதிர்ப்புகள் அதிகமாக இருக்கும். முக்கிய நபர்களால் பல பாதிப்புகள் ஏற்பட்டாலும், பணத்துக்குப் பற்றாக்குறை ஏற்படாது.

## நாளை ஆனி-15 ஞாயிற்றுக்கிழமை | 29.06.2014

திதி: துதியை பி.ப.05.06 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் காலை.09.03
சுபநேரம்: 08.56-10.26 வரை
இராகுகாலம்: 04.26-05.56 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### ஆன்மாவும் கடவுளும்

தனக்கு மேலான ஒரு சக்தியைப் பற்றி எண்ண மனிதன் பயத்தால் ஆரம்பித்தானோ அல்லது வெறும் ஆராய்ச்சி என்பதற்காக ஆரம்பித்தானோ, அதை அறிவது நமது நோக்கமல்ல. இவை விநோதமான சில வழிபாட்டு முறைகளை மனதில் உருவாக்கலாம். மனித குல வரலாற்றில் வழிபட ஒரு பொருளில்லாத காலம் ஒன்று இருந்ததே இல்லை. ஏன்? அழகிய காலை வேளை அல்லது இறந்த ஆவிகள் இவை எதுவும் ஆகட்டும், எது எமது காட்சிகளையும் கடந்து நம்மைப் போராடத் தூண்டுகிறது? இதற்காக நாம் வரலாற்றுக் காலங்களுக்கு முன்னே போக வேண்டியதில்லை.

ஏனெனில், இன்றைய நிலைதான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் இருந்திருக்கும். அதற்காக நாம் இங்கேயே திருப்திப்பட்டு நின்று விட வேண்டியதும் இல்லை, பெரிய பணக்காரனாகவும், பேராற்றல் மிக்கவனாகவும், வாழ்க்கையில் எந்த நிலையில் இருந்தாலும், திருப்தி என்பதை நாம் அடைய முடியவில்லை.

ஆசைக்கு அளவில்லை. ஆனால் அவற்றுள் நிறைவேறுவது மிகச் சிலதே. ஆசைகளுக்கு ஒரு முடிவேயில்லை. அவற்றை நிறைவேற்ற முயலும் போதுதான் பிரச்சினை எழுகிறது. ஆசைகள் சிலவே உள்ள பண்படாத மனங்களின் கதிகூட இது தான். இன்று விஞ்ஞானமும் கலைகளும் இவ்வளவு வளர்ந்து பெருகிய பின்னும் நமது ஆசைகள் நிறைவேற்றப்படவில்லை. எனினும் அதற்காக நாம் புதிய புதிய முறைகளை கையாளத்தான் செய்கிறோம்...

## குறி சொல்லி அசத்தும் நரிப்பெண்: அலைமோதும் பார்வையாளர்கள்



பாகிஸ்தானில் உயிரியல் பூங்கா ஒன்றில் நரிப்பெண் ஒருவர் எதிர்காலம் பற்றி குறி சொல்வது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள உயிரியல் பூங்காவில் உடலின் கீழ்ப்பகுதி நரியின் உருவத்திலும் மேல் பகுதி பெண் உருவிலும் மும்தாஸ் என்ற புனை பெயர் கொண்ட நரிப்பெண்ணொருவர் இருக்கிறார்.

பாதி நரி வேடமிடும் இவர் தினமும் சுமார் 12 மணித்தியாலம் அங்கு குவியும் பார்வையாளர்களுக்கு அவர்களது வருங்காலம் தொடர்பாக குறி சொல்கிறார். அவர் நகைச்சுவையுடன் பேசுவதால் எப்போதும் இவரைப் பார்க்க பார்வையாளர்கள் குவிந்த வண்ணம் இருக்கின்றனர்.

அவரிடம் பாடசாலைக் குழந்தைகள் தங்கள் பரீட்சை முடிவுகளையும், திருமணமாகாத பெண்களின் பெற்றோர்கள் தங்களது மகள்மாரின் மண வாழ்க்கை குறித்தும் கேட்டு தெரிந்து கொள்கின்றனர். மேலும் முதியோர்கள் தங்களது கடந்த காலத்தைப் பற்றிக் கேட்டாலும் ஆதி முதல் அந்தம்வரை மும்தாஸ் மிகச் சரியாக கூறுகின்றார். இதனால் கராச்சி உயிரியல் பூங்காவில் உள்ள மான், யானைகள் மற்றும் பிற விலங்குகளைக் காட்டிலும் பார்வையாளர்களை அவர் கவர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 3 | | | | | 9 |
| | 7 | | | | | | 4 | |
| 3 | | 2 | | | | 6 | 1 | |
| 6 | 1 | | 2 | | 3 | 8 | 5 | |
| 5 | | | 4 | | 8 | | | 1 |
| | 8 | 9 | 6 | | 1 | | 3 | 2 |
| | 6 | 5 | | | | 1 | | 4 |
| | 4 | | | | | | 7 | |
| 9 | | | | | 5 | | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 6 | 4 | 8 | 2 | 1 | 3 | 9 |
| 2 | 9 | 4 | 1 | 7 | 3 | 8 | 6 | 5 |
| 8 | 1 | 3 | 5 | 9 | 6 | 7 | 2 | 4 |
| 9 | 6 | 1 | 8 | 3 | 7 | 4 | 5 | 2 |
| 5 | 3 | 7 | 2 | 4 | 1 | 6 | 9 | 8 |
| 4 | 8 | 2 | 9 | 6 | 5 | 3 | 1 | 7 |
| 6 | 4 | 8 | 3 | 5 | 9 | 2 | 7 | 1 |
| 3 | 2 | 9 | 7 | 1 | 8 | 5 | 4 | 6 |
| 1 | 7 | 5 | 6 | 2 | 4 | 9 | 8 | 3 |

CMK

# 'பண்டைத் தமிழரின் அயலகத் தொடர்புகள்'

## நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜீன். 28

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் 'பண்டைத் தமிழரின் அயலகத் தொடர்புகள்' என்னும் தலைப்பில் கருத்துரையும் கலந்துரையாடலும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதான வீதி, இல 286 இல் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கருத்துரையை தமிழ் நாடு, செம்மொழித் தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தின் ஆய்வாளர் முனைவர் ஜெ.அரங்கராஜ் வழங்கவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும் என்றும் நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்துகொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

# பரீட்சைக்கு உதவும் கருத்தரங்கு

இந்த ஆண்டு க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவும் முகமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால்விநியோகிக்கப்பட்ட பரீட்சை வினாத்தாள்களும், அந்த வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஜூன்30தமிழ்,சிங்களம்,ஜூலை 01 கணக்கியல், இணைந்த கணிதம், ஜூலை 02 பொருளியல், ஜூலை 03 வணிகக் கல்வி, உயிரியல், ஜூலை 04 பௌதிகவியல், விவசாயம், ஜூலை 05 இரசாயனவியல் என்ற வகையில் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள பரீட்சைநோக்கில் இந்தப்பரீட்சை மிகப் பயன்மிக்க ஒன்றாகையால் மாணவர்கள் தங்கள் பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றுவதுடன், வலயக் கல்வி அலுவலகங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத்தரங்குகளிலும் தவறாது பங்குபற்றுமாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். வினாத் தாள்களுக்கான புள்ளி வழங்கும் திட்டமும் கருத்தரங்கின் போது ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படுமெனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (க)

# பழைய மாணவர் சங்கத்தின் 45 ஆவது ஆண்டுவிழா

தென்மராட்சி, ஜீன் 28

கைதடி நவீல்ட் செவிப்புலன் இழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 45 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாண கல்விப் பணிப்பாளர் க.இராஜேந்திரன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர்சு.கிருஷ்ணகுமார், யாழ்.மாவட்ட டயலொக் நிறுவன உரிமையாளர் இ.சிவகுகன், பாடசாலை அதிபர் வீ.எஸ்.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)




## மரண அறிவித்தல்

### இளையதம்பி தங்கராஜா



(முன்னாள் அதிபர்-முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், முள்ளியவளை, சின்னப்புதுக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தங்கராஜா (26.06.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சீதேவன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், வடிவாம்பிகை (கிளி)யின் அன்புக் கணவரும், Dr.முகுந்தன் (பாபு), கலைவாணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், Dr. சுதர்சினி, முருகுசெழியன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அட்சரன், நேத்திரன், ஆயகி,சாயகி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், பவளமணி, இராசையா, செல்லம்மா, நாகேந்திரம், அழகம்மா, நடராஜா மற்றும் தங்கதிரவியம், நாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி சண்முகம், நடராஜா (சிங்கப்பூர்), தியாகராஜா (மலேசியா), நாகராஜா (இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் - வவுனியா) மற்றும் தருமராஜா (இளைப்பாறிய உதவி அதிபர்- முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2014) சனிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 486,
ஹொரவபொத்தான வீதி,
சின்னப்புதுக்குளம்,
வவுனியா. (43363)(10)

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 024 222 1178 (மனைவி)
071 4406 373 (Dr.முகுந்தன்)
071 8940 623 (கலைவாணி)

## மரண அறிவித்தல்

### அண்ணாமலை குணரட்ணம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாமலை குணரட்ணம் 25.06.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை-சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயக்குமார், கிருஷ்ணகுமார் சிவநேசன், கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அரசரட்ணம், துரைரட்ணம், கனகரட்ணம் மற்றும் பூபாலன், பத்மாவதி, அப்பர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2014) சனிக்கிழமை மலேசியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(49399)(4.8.3)

அர்மன் வீதி, பண்டத்தரிப்பு.

தகவல்: க.சி.சுப்பிரமணியம் (மைத்துனர்)

## வைத்தியம்

நாட்பட்ட தலைவலி, கழுத்து, தோள், இடுப்பு, முதுகு, நாரிவலி, குத்து, நோ, முழங்கால், பாதம் வலி, Rheumatoid Arthritis, சிறுநீரககல், Prostate வலி, மூலம், மலச்சிக்கல், குழந்தை வேண்டுபவர்களின் கருமுட்டை வளர்ச்சி, கருப்பைச் சுவர் தடிப்பு, கருக்கட்டல் சம்பந்தமான அனைத்து சிகிச்சைகள். 077 730 1669

சித்த வைத்தியர்
Dr.R. Sivagurunathan
நல்லூரில் June 28,29,30 ஆகிய திகதிகளில்
காலை 9 முதல் 7 மணிவரை சந்திக்கலாம்.
சந்திப்பு இலவசம். (சி.1451) (45.3.6)

## மரண அறிவித்தல்

### அலோசியஸ் வின்சன்ற் மனோராஜ்அன்ரனி

(தரம் - 11 சென்ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோராஜ் அன்ரனி நேற்று முன்தினம் (26.06.2014) வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் அலோசியஸ் வின்சன்ற் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், மூதூர்) - பற்றிசியா ரட்ணராணி தம்பதியரின் அன்பு மகனும், டன்ஸ்ரன் ஜோன் அன்ரனி, ஜக்சன் ஜோன் அன்ரனி (தரம் - 7 சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்பணி றொபின்சன் யோசப், அருட்சகோதரி விமலினி ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க இரங்கல் ஆராதனை இன்று (28.06.2014) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித அந்தோனியார் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (49591) (12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 225 3079




## கண்ணீர் அஞ்சலி



யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தில் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றிய

### அமரர் மரியாம்பிள்ளை நிக்கிலஸ் கனகரட்ணம்

அவர்கள் 25.06.2014 புதன்கிழமையன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும்,
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(சி/14823) (10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
30
04
1939



மறைவு
29.
05
2014

### அமரர் குமாரசாமி சிவக்கொழுந்து

திதி : பூர்வபக்க பிரதமை

நிஜமான அம்மா மறைந்து மாதம் ஒன்று ஆனது
நீங்கள் இல்லாத எம் இல்லம்
பொலிவிழந்து போனது அம்மா! உங்களை நினைத்து தினம் தினம்
ஏங்கித் தவிக்கிறோம் அம்மா!
உங்களை நாம் சேரும் வரை உங்கள் நினைவுடன் வாழ்வோம் அம்மா

மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

என்றும் அம்மாவின் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்

# தேர்தல் திணைக்களத்தால் கோரப்பட்ட அலுவலர் விவரங்களைச் சமர்ப்பிக்கவும்

## யாழ்.உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் தேர்தல் கடமைகளில் ஈடுபடுகின்ற அனைத்து அலுவலர்களினதும் தகவல்களை யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து திணைக்களத் தலைவர்களும், பாடசாலை அதிபர்களும் உடனடியாக தேர்தல் ஆணையாளருக்கோ அல்லது மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கோ அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 30 மாதங்களுக்குள் 03 தேர்தல்களை நடத்த வேண்டிய சாத்தியம் இருப்பதால் தேர்தல் காலங்களில் திணைக்களங்களில் இருந்து உத்தியோகத்தர்களை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த தகுதியுடைய அலுவலர்களின் விவரங்களைச் சேகரித்து அவர்களின் சம்பளப் படிகளுக்கு ஏற்ப பதவிகளை ஒதுக்குவதில் போதிய கால அவகாசம் சில வேளைகளில் கிடைப்பதில்லை. இதனால் சகல உத்தியோகத்தர்களின் விவரங்களையும் தலைமைக் காரியாலயத்தில் வைத்திருப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் முடிவு செய்துள்ளார். அத்துடன் தேர்தல்களுக்கு முன் திணைக்களங் களில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் பதவி மாறிச் சென்றவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களில் மட்டும் மாற்றத்தைச் செய்து இந்த உத்தியோகத்தர்களைப் கடமைக்குப் பயன்படுத்த தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

சில அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்புவதில்லை. இதனால் ஜனாதிபதி செயலகத்தின் அனுமதியுடன் தேர்தல் திணைக்களத்தினால் சகல திணைக்களங்களுக்கும் இது குறித்து அறிவித்த போதிலும் கேட்கப்பட்ட தகவல்கள் ஜூன் மாதம் 16 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வில்லை என்பது தெரிய வருகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து திணைக்களத் தலைவர்களும், பாடசாலை அதிபர்களும் தேர்தல் ஆணையாளரினால் கோரப்பட்ட தகவல்களை உடன டியாக தேர்தல் ஆணையாளருக்கோ அல்லது மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கோஅனுப்பிவைக்குமாறு நினைவூட்டல் கடிதம் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் சுற்றறிக்கையும் விண்ணப்பப் படிவங்களும் கிடைக்காதவர்கள் இணையத் தளத்திலிருந்து (www.slelections.gov.lk) பதிவிறக்கம் செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## மஹா கும்பாபிஷேகம்

சுன்னாகம், ஜூன் 28
மல்லாகம், கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.05 மணி முதல் 10.20 மணி வரையான சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் சாளம்பையான் கும்பாபி ஷேக மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதம குருவாக அமர்ந்து ஸ்கந்த ஆராதனை சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (க)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **30.06.2013** வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் **11.08.2014** இலிருந்து காலை **8.30** மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உடுப்பிராய் |
| ஊர்காவற்றுறை | .... |
| நெல்லியடி | .... |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
**மக்கள் வங்கி,**
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி.14817) (45.6.3)

## தவறிவிட்டது

சூராவத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த ரவிக்காந்தன் லக்சன் என்பவருடைய தே.அ.அட்டை (961922097V) மருதனார் மடத்துக்கும், சுன்னாகத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
**துரைபேக்கறி, மயிலணி வீதி, சூராவத்தை, சுன்னாகம்.**
தொடர்பு: 077 809 0972, 021 224 0344/0378




## கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்

இடம் மாற்றுவதை முன்னிட்டு
15.06.2014 முதல் இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும் அனைத்து விதமான ஆடைகளையும் அதன் விலையில் இருந்து ½ வாசி விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393


## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி தர்சனா குணரத்தினம் அவர்களின் பாசமிகு சகோதரன்
**குணரத்தினம் சற்சொருபன்**
(முன்னாள் கணினி போதனாசிரியர்)
அவர்கள் 19.06.2014 அன்று காலமாகியதனால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
19ஆம் அணி விவசாயபீடம்
(49407) (10)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் கேள்வி அறிவித்தல் - 2014

கீழ்க் காணப்படும் வேலைகளிற்கு C9 இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| தொ. இல. | வேலையின் விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் (VAT, NBT நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | வட்டுக்கோட்டை கலட்டி வீதி புனரமைத்தல் | 15,110.00 | 1500.00 |
| 02 | அராலி பெரியதம்பிரான் ஒழுங்கை (ஐயனார் கோயில் வீதி) புனரமைத்தல் | 9,880.00 | 1000.00 |
| 03 | சுழிபுரம் உப அலுவலக கிணற்றுக்கான மூடி அமைத்தல் | 336.00 | 300.00 |

கேள்விப்படிவம் வழங்கல் :- 30.06.2014 தொடக்கம் 14.07.2014 பி.ப 03.00 மணிவரை.
கேள்விப்படிவம் ஏற்றல் :- 15.07.2014 பி.ப 01.00 மணிவரை.
கேள்வி திறத்தல் :- 15.07.2014 பி.ப 02.00 மணி.

1. தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக கேள்விகளை கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப் பத்திர பணத்துடன் மீளளிக்கப்படாத 12% பெறுமதி சேர் வரியும், 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் செலுத்தப்படல் வேண்டும்
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விகாரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்கவேண்டும்.
6. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **"தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடல் வேண்டும். மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை,
சுழிபுரம்.
28.06.2014

திருமதி நாகரஞ்சினி ஐங்கரன்,
தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேசபை,
சுழிபுரம்.
(சி.14816) (45.6.3)


## வீடு தேவை(வாடகைக்கு)

4 பேர் கொண்ட குடும்பத்திற்கு குடிதண்ணீர் வசதி உள்ள, அமைதியான சூழலில் வசதியான வீடு தேவை. மூளாய் சுழிபுரம், பண்ணாகம், வட்டுக்கோட்டை விரும்பத்தக்கது.
(49358) (12.3.6)
**தொடர்பு: 078 716 5755**

## மாபிள் வேலையாள் தேவை

எமது நிறுவனத்துக்கு மாபிள் வேலை நன்கு தெரிந்தவர் உடனடியாகத் தேவை.
Green Asia Builder
(49395) (45.3.6)
**077 906 3025**

## J.C.B (பைக்கோ) வாடகைக்கு



குறிப்பு :
போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (சுன்னாகம்)
077 984 7285 (பருத்தித்துறை)
**புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்**
(49380) (4.6.3)
207, K.K.S.வீதி, சுன்னாகம்.


## CALLING FOR TENDER

The chairman, Northern Central Hospital, 342, Palaly Road, Jaffna is hereby calling for tenders from registered contractors for modification of MRI unit. The closing date of the tender is 02.07.2014 at 10.00 a.m.The tender documents can be obtained at the office of the Northern Central Hospital, Jaffna with a non refundable deposit of Rs.1000/= up to 01.07.2014.

**Chairman,**
**Northern Central Hospital, Jaffna.**




அழகிய புத்தம்புதிய நவீன டிசைன்களில்
சாறி மற்றும் சல்வார் தெரிவுகளுக்கு

**சரவணா ரெக்ஸ்**
**SARAVANA TEX**



இல. 518,
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (சிவன் கோயில் அருகில்),

இல. 770,
கே.கே.எஸ் வீதி, (தட்டாதெரு சந்தி),
யாழ்ப்பாணம்.
(10.6.3)

# வெள்ளைக்கொடி பாணியில் மங்களவைப் பிடிக்கத் திட்டம்

## அரசு மீது ஐ.தே.க. சந்தேகம்

வெள்ளைக்கொடிவிவகாரத்தில் சரத் பொன்சேகாவை கைது செய்தது போன்று மங்கள சரமவீர எம்.பியையும் கைது செய்ய அரசு முயற்சிக்கின்றதா? என்று கேள்வி எழும்பிய ஐக்கியத் தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அஜித் பி. பெரேரா, மங்கள எம்.பி. வெளியிட்ட அரச இரகசியங்கள் எனக் கூறப்படும் கருத்துக்கள் எந்தச் சட்டத்தின் கீழ், எந்தப் பிரிவின் கீழ் பிழையானது என்பதையும் அரசு சுட்டிக்காட்ட வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மங்கள சமரவீர அரச இரகசியங்களை வெளியிட்டு விட்டார் என்றும் இதனால், நாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் இராணுவப்பேச்சாளர் தொடர்ந்தும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்து வருகின்றார்.

ஆனால், சமரவீர வெளியிட்ட கருத்துக்கள் ஒன்றும் இரகசியமல்ல. அவர் தெரிவித்தவை அனைத்தும் நாமும் அறிந்த விடயங்களே. அதேநேரத்தில் அரசு, அவர் வெளியிட்ட கருத்துக்கள் உண்மை என்றபடியாலேயே அவரை கைது செய்ய வேண்டும் என குறிப்பிட்டு வருகின்றது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

மங்கள சமரவீரவை கைது செய்வதாகக் கூறும் அரசு, அவர் வெளியிட்ட கருத்துகள் எந்தச் சட்டத்தின் கீழ் - எந்தப் பிரிவின் கீழ் பிழையானது என்பதையும் வெளிப்படையாக சுட்டிக்காட்ட வேண்டும்.

எம்மை பொறுத்தவரை வெள்ளைக்கொடி விவகாரத்தில் சரத் பொன்சேகாவை அரசு எவ்வாறு கைதுசெய்ததோ, அதேபோல் மங்களவையும் கைதுசெய்ய முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆனால், எம்மை பொறுத்தவரை அவர் வெளியிட்ட கருத்துக்கள் இரகசியமே இல்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

# உள்ளக விசாரணைப் பொறிமுறையை காத்திரமானதாக மாற்றியமைக்கவும்!

## ஆளுங்கட்சி எம்.பி.ரஜீவ விஜேசிங்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 28

ஐ.நாவின் அழுத்தங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அரசு காத்திரமுடையதாக மாற்றியமைக்க வேண்டும் என்றும், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் ஆளுங் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை லிபரல் கட்சியின் முக்கியஸ்தருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கை மீது முன்னெடுக்கப்படவுள்ள விசாரணை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"உள்நாட்டு விவகாரங்களில் ஐ.நா. தலையிடுவதை நான் விரும்பவில்லை. ஆயினும் அவ்வாறு ஐ.நா. தலையிடுவதற்கு காரணமாகவிருந்த பிரச்சினைகள் குறித்து அரசு ஆராய்ந்து அவற்றுக்குரிய தீர்வுகளை முன்வைக்க வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கு ஏதுவான வகையில் உள் நாட்டு விசாரணைப் பொறிமுறையை அரசு பலப்படுத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க, தேசிய செயற்றிட்டத்தை முதலில் முழுமையாக நிறைவேற்ற வேண்டும் எனவும் ஆலோசனை முன்வைத்தார்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அரசு முழுமையாக நிறைவேற்றினால் அது அழுத்தங்களிலிருந்து விடுபடுவதற்கு ஏதுவான காரணியாக அமையும். இதை பெரும்பாலான நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ற-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வலி. வடக்கு

மர்த்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள 5 நலன்புரி நிலையங்களிலும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரியவருகின்றது.

1990 ஆம் ஆண்டு வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் - நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். அவர்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்கள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ளன.

வலி.வடக்கில் உள்ள அவர்களது சொந்தக் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிப்பதற்கு இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதி ஒரு போதும் விடுவிக்கப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை அவர்களின் சொந்த நிலம் அல்லாத வேறு இடங்களில் குடியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் அரச அதிகாரிகளாலும், இராணுவத்தினராலும் வேகமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக வளலாயில் உள்ள பொதுமக்களின் காணிகளை சுவீகரித்து, அதில் வலி.வடக்கு மக்களை குடியமர்த்துவதற்கான மாதிரிக் கிராமம் அமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு மேலதிகமாக தற்போது கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்களைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நலன்புரி நிலையங்கள் உரும்பிராய் தெற்கில் நான்கும், உரும்பிராய் கிழக்கில் ஒன்றும் இயங்கி வருகின்றன. இந்த நலன்புரி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளுக்கு 13 பேர் உரிமையாளர்களாக உள்ள நிலையில், கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு இவர்கள் அழைக்கப்பட்டு காணிகளை சுவீகரிப்பதற்கு சம்மதம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அதில் 7 காணி உரிமையாளர்கள் மட்டும் வாய்மொழி மூலமான சம்மதத்தை வழங்கியுள்ளனர். அதையடுத்தே மேற்படி காணிகளை சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் கோப்பாய் பிரதேச செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### 18 ஆவது

நீதிபதிகளை நியமிக்க கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

அத்துடன் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்தே நீதிபதிகள் உச்சநீதிமன்றத்துக்கு எடுக்கப்படுகின்றனர். சட்டமா அதிபர் திணைக்களம் என்பது, அரசுக்கு சார்பாக செயற்படும் ஒரு திணைக்களம். அரசுக்காக வழக்குகளில் முன்னிலையாகும் திணைக்களம். அங்கிருப்பவர்கள் அரசுக்குச் சார்பாகவே தமது வாழ்நாளில் செயற்பட்டிருப்பார்கள்.

அங்கிருந்து நீதித்துறையின் நீதிபதிக்குரிய இடத்தில் ஒருவரை வைக்கும்போது, வழங்கப்படும் தீர்ப்புக்களில் சந்தேகம் ஏற்படும். அரசுக்கு, ஜனாதிபதிக்குச் சார்பாக தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றனவா? என்று எண்ணக்கூடும்"- என்று தெரிவித்தார்.

"இந்தப் போக்குக் காரணமாக நாட்டின் நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனரா?" - என்று அவரிடம் கேட்கப்பட்டபோது,

"ஆம், நிச்சயமாக நம்பிக்கையை மக்கள் இழந்திருக்கின்றார்கள். அதற்காக நான் நீதிபதிகளைக் குறை கூறவில்லை. வழக்குகளில் தீர்ப்புக்கள் வழங்கப்படுவதற்கு 7 அல்லது 8 ஆண்டுகள் இழுத்தடிக்கப்படுகின்றன. பெரும்பாலும் வழக்குகள் தவணைகள் கூறப்பட்டு ஒத்திவைக்கப்படுகின்றன.

நாம் இருந்த காலத்திலும் தாமதங்கள் இருந்தன. ஆனாலும் அவற்றை நாம் ஓரளவு நிவர்த்தி செய்தோம்."- என்று பதிலளித்தார்.

"நீதித்துறையின் இந்த நிலைமை சிறுபான்மைச் சமூகத்தை எவ்வாறு பாதிக்கின்றது?" - என்று அவரிடம் கேட்கப்பட்டபோது,

"நீதிமன்றங்களின் ஊடாக நீதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் தமது காணிகளைத் திருப்பித் தருமாறு கோரி வலிகாமம் வடக்கைச் சேர்ந்த 2 ஆயிரம் பேர் வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். அந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படாத காரணத்தினால் அவர்கள் நீதிமன்றத்தின் மீது நம்பிக்கையை இழந்துள்ளனர்."- என்று கூறினார்.

"அளுத்கம சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்குமா?" என்று அவரிடம் கேட்கப்பட்டபோது,

"அது தொடர்பில் எனக்குத் தெரியாது. இந்தத் தாக்குதல் முஸ்லிம்கள் மீது திட்டமிடப்பட்ட தாக்குதல். அதில் அரசு, பொலிஸார், நீதிமன்றங்கள் என்பவற்றின் அனுசரணையும் தாக்குதலுக்கு இருந்திருக்கக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது" - என்று தெரிவித்தார்.

அத்துடன், "நீதிமன்றங்களையோ நீதிபதிகளையோ விமர்சனம் செய்ய முடியாது. அவர்களைக் குறை கூறுவதும் தமது நோக்கமல்ல" என்று தெளிவுபடுத்திய முதலமைச்சர், 18ஆவது திருத்தச் சட்டம் வந்ததன் பின்னர் பல வழிகளிலும் நீதித்துறைக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை அறுதியாகக் குறிப்பிட்டார். (ற-5,18,101)

### முதியவரின்

சென்று விட்டார்.

குறித்த முதியவர் கடந்த சில மாதங்களாக குழப்பமான மனநிலையில் காணப்பட்டார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர். (ற-4)

### ஜெயக்குமாரியின்

நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும், அரசதரப்பு சட்டத்தரணி மன்றுக்கு வராததால் அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி பா.ஜெயக்குமாரியும் அவரது மகளான விபூசிகாவும் கிளிநொச்சியில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயற்சிக்கின்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட கஜீபன் என்பவருக்கு அவர்கள் வீட்டில் அடைக்கலம் கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இதன் பின்னர் விபூசிகா கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டு சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டார். தாயார் ஜெயக்குமாரி பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கைது செய்யப்படும்போது 13 வயதான சிறுமி விபூசிகா பூப்பெய்தி இரு வாரங்களே ஆகியிருந்தன.

இவர்கள் சார்பில் உயர் நீதிமன்றில் கடந்த மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கடந்த மாதம் 6 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நேற்று வரையில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம் வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது அரசதரப்பு சட்டத்தரணி மன்றுக்கு வரவில்லை, இதனையடுத்து வழக்கு அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-5)

### புலம்பெயர்ந்த

தமிழர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், மொரீசியஸின் முன்னாள் அமைச்சருமான ஆறுமுகம் பரசுராமன் தெரிவிக்கையில்,

சுமார் 60 நாடுகளில் பரந்து விரிந்து வாழும், தமிழர்களைப் பண்பாடு, கலாசாரத்தால் இணைக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம். இதையொட்டி இந்த மாநாடு மொரீசியஸின் மோகா நகரில் மகாத்மா காந்தி கல்வி நிறுவன வளாகத்தில், ஜூலை 23 முதல் 27 வரை நடை பெறவுள்ளது. இந்த மாநாட்டை பிரதமர் நவின் ரம்கூலம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

3 நாள்களும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தல், கருத்தரங்கம் உள்ளிட்டவை நடக்கவுள்ளன. 60 நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் இதற்கு வர விரும்பி பதிவு செய்துள்ளனர். தமிழகத்திலிருந்து மாநாட்டில் பங்கேற்போர் சென்னை சோழிங்கநல்லூரில் செயற் படும் ஆசியவியல் நிறுவன அலுவலகத்திலும் பதிவு செய் யலாம்.

தமிழர்கள் மொழியாலும், பண்பாட்டாலும், கலாசாரத்தாலும் ஒன்றுபட வேண்டுமென்ற நோக்கத்தில், தமிழ்க் கலாசாரப் பாதுகாப்பு மற்றும் அடையாளப்படுத்துதல் என்ற வகையில் மாநாடு நடைபெறுகிறது - என்றார். (கு)

### அடுத்த மாதத்தில்

சுக்கான அனுசரணைப் பணியை ஆரம்பிப்பதற்கு தென்னாபிரிக்காவின் விசேட தூதுவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

இதற்கமைய சிறில் ரமபோஷ, கடந்த மே மாத இறுதியில் இலங்கைக்கு வருவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஜூன் மாத இறுதியில் வருவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அடுத்த மாதம் முதல் வாரத்தின் இறுதிப் பகுதியில் அவர் இலங்கைக்கு வரவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (ற-5)

### சர்வதேசத்தின்

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

நேற்று அவர் வழங்கிய பிரத்தியேகமான செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்தச் செவ்வியில்,

"அரசு - கூட்டமைப்பு இரு தரப்புப் பேச்சில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எனக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் சம்பந்தமாக பேச்சுக் குழுவிலுள்ள அரச தரப்பினர் திருப்திகரமாக நடக்கும் வரையில் நாம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு பற்றமாட்டோம்" என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"அண்மையில் இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி சத்தியப் பிரமாணம் செய்து அடுத்தநாள் அவருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற முதல் பேச்சில் தமிழர்களுடைய பிரச்சினை சம்பந்தமாகப் பேசப்பட்டிருக்கின்றது. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு விரைவில் ஏதுமொரு கதவு திறக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அதனை அடைவதற்கு நாம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம்" என்று குறிப்பிட்ட அவர் "விரைவில் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்பதற்குரிய சந்தர்ப்பம் உள்ளது" என்றும் தெரிவித்தார்.

"இலங்கை அரசு பிடிவாதமாக இருக்காமல் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த ஐ.நா.வுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தியதுடன், "ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்கா, இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் இலங்கைத் தமிழருக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் எமக்கு உள்ளது" என்றும் தெரிவித்தார்.

"இலங்கை தொடர்பில் தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சி சம்பந்தமாக ஒரு தெளிவு எதிர்வரும் வாரங்களில் வெளிப்படும். அரசியலில் மாற்றங்கள் ஏற்படுகின்றபோது வடக்கு மாகாண சபையின் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் அங்கு நடக்கும் இராணுவ ஆக்கிரமிப்புகளுக்குத் தீர்வுகள் காணப்படும். எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கில் வெல்லவைத்த தமிழ் மக்கள் கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும்" என்று அவர் கோரியதுடன், "எல்லாவற்றையும் குழப்ப முயல்வதே அரசின் நோக்கம் "என்றும், இதற்கு நாம் துணைபோகக் கூடாது" என்றும் கூறினார்.

"கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் - முஸ்லிம்கள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க அந்த மாகாண முஸ்லிம் மக்கள் வழங்கிய ஆதரவை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தட்டிக்கழித்துவிட்டது. தற்போது முஸ்லிம்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுக்கொண்டு வருகின்ற நிலையில், தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை தொடரவேண்டும் என்றும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆழமாக சிந்தித்து முடிவொன்றை எடுக்கவேண்டும்"- என்றும் அவர் வலியுறுத்தினார். (ற-சி)

# முல்லரின் அபார கோலில் ஜேர்மனி வெற்றி
# தோல்வியுற்ற அமெரிக்காவும் முன்னேறியது



உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற முக்கிய ஆட்டத்தில், அமெரிக்காவை ஜேர் மனி 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஆனாலும், இரு அணிகளும் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

ஜேர்மனி - அமெரிக்க அணிகள் முன்னேற சமநிலை செய் தாலே போதுமானது. ஆனால் சமநிலைக்காக ஆட இரு அணி களும் முயற்சி செய்யவில்லை.

அமெரிக்கப் பயிற்சியாளர் கிளின்ஸ்மன் ஜேர்மனியைச் சேர்ந்தவர் தான். ஜேர்மனிப் பயிற்சியாளர் ஜோக்கிம் லூவு டன் இவருக்கு இருக்கும் நட்புறவு ஆட்டத்தைப் பேசி வைத் துக் கொண்டு சமநிலை செய்து விடுவார்கள் என்ற பேச்சுக்கே இடம் வகுத்தது.

அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி கோலை அடித் தார் தோமஸ் முல்லர். இந்தக் கோலுடன் இவரும் நெய்மர், மெஸ்ஸியுடன் தங்கக் காலணிப் போட்டியில் குதித்துள்ளார். ஆட்டத்தில் ஜேர்மனியே முழு ஆதிக்கம் செலுத்தியது. அமெ ரிக்கா முழுத் தடுப்பாட்டத்தில் இறங்கியது. மேலும் அமெரிக்க கோல் காப்பாளர் டிம் ஹவர்ட் கோல் விழாமல் பார்த்துக் கொண்டார்.

ஆனால், எவ்வளவு நேரம் தான் முல்லரை அடக்கி வைக்க முடியும். ஆட்டத்தின் 55ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு மூலை உதை வாய்ப்பு கிடைத்தது. துல்லியமாக அடிக்கப் பட்ட மூலை உதையை மெர்டிசாக்கர் தலையால் முட்ட அமெ ரிக்க கோல் காப்பாளர் ஹவர்ட் அதனைத் தடுத்தார். உடனே தோமஸ் முல்லர் அங்கிருந்து சரியாக அதனைக் கோலுக்குள் செலுத்தினார். ஜேர்மனி 1:0 முன்னிலை வகித்தது.

இடைவேளைக்கு முன்னால் ஜேர்மனி பல கோல்களை அடித்திருக்கவேண்டும். ஆனால் அமெரிக்கக் கோல் காப்பா ளர் ஹவர்ட் ஒவ்வொரு முறையும் சரியாகக் கணித்துக் காப் பாற்றினார்.

அமெரிக்காவுக்கும் வாய்ப்பு கிடைக்காமல் இல்லை. அமெ ரிக்க வீரர் மைக்கல் பிரட்லி அற்புதமான பரிமாற்றம் ஒன் றைக் கிரகம் சூசிக்கு அடிக்க அவர் இடதுபுறத்திலிருந்து பந்தை ஜேர்மன் கோல் நோக்கித் தூக்கித் அடிக்க கோல் கம்பத்தின் மேலே பட்டு பந்து வெளியேறியது.

உலகச் சாதனை நாயகன் மிரோஸ்லவ் குளோஸை ஜேர் மனி களமிறக்க அப்போதுதான் புரிந்தது ஜேர்மனி வெற் றிக்கு ஆடுகிறது சமநிலைக்கு ஆடவிலை என்பது. குளோஸ் ஒரு கோல் அடித்து பிரேஸில் ரொனால்டோவின் சாதனை யைக் கடந்திருப்பார். ஆனால் அவரது அந்த முயற்சி பயன ளிக்கவில்லை.

ஆட்டம் முடியும்வேளை அமெரிக்க வீரர் பெடோயா அபார மாகப் பந்தை வலது புறத்தில் எடுத்துச் சென்றார் நிச்சயம் இது கோலில் முடியும் என்று எதிர்பார்த்த தருணத்தில் ஜேர்மனி யின் பிலிப் லாம்ப் சறுக்கிக் கொண்டு வந்து அவரைத் தடுத் தார். பந்து வெளியே செல்ல அமெரிக்க அணிக்கு மூலை உதை வாய்ப்பு கிடைத்தது. சமன் செய்ய ஒரு கடைசி வாய்ப்பு. ஆனால் பிரட்லி அடித்த பந்தை டெம்ப்ஸே கோலாக மாற்றும் முயற்சி தோல்வியடைந்தது. ஜேர்மனி 1:0 என்று வெற்றி பெற்றது.

(த)



## கொரியாவை வீழ்த்தியது பெல்ஜியம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் நேற்று அதிகாலை ஆட்டத்தில் கொரியாவும் பெல்ஜியமும் மோதின.

25ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மிரால்லாஸ் அடித்த பந்தை யுன் லாவகமாக தடுத்தார். 30ஆவது நிமிடத்தில் கொரியாவின் கி அடித்த பந்தை கொர்டாய்ஸ் தடுத்தார். 30ஆவது நிமிடத்தில் கொரியாவின் ஹாங்குக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்ட; 36ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் மெர்ட்டனஸ் அடித்த பந்தை கொரியாவின் கிம் கோல் விழாம தடுத்தார். மீண்டும் 42ஆவது நிமிடத்தில் மெர்ட்டனஸ் அடித்த பந்தை கிம் கோல் விழாமல் அற்புதமாகத் டுத்தார்.

45ஆவது நிமிடத்தில் கொரியாவின் கிம் ிின்வுக்கின் காலில் எட்டி உதைத்ததற்காக சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. முதல் பாதி முடியும் போது இரு அணிகளும் ஒரு கோல் கூடப் போடவில்லை. இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய பின் 50ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் டெம்பெலெவுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. 54ஆவது நிமிடத்தில் கொரியாவின் லீ அடித்த பந்தை புடென் லாவகமாகத் தடுத்தார். 78ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் வெட்ரோங்கென் அருமையான கோல் அடித்தார். பின்னர் இறுதிவரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் 0:1 என்ற கோல் கணக்கில் பெல்ஜியம் அணி வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பெல்ஜியத்தின் தடுப்பாட்டக்காரரான வெட்ரோங்கென் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(த)

## அல்ஜீரியா சாதனை
## வெளியேறியது ரஷ்யா

ரஷ்யாவுக்கு எதிரான உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியை சமநிலை செய்த அல்ஜீரியா அணி, முதல் முறையாக இரண்டாவது சுற்றுக்கு முன்னேறி புதிய சாதனை படைத்தது.

'எச்' பிரிவில் நடந்த கடைசி சுற்று லீக் போட்டியில் அல்ஜீரியா, ரஷ்யா அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ரஷ்ய அணிக்கு, போட்டியின் 6ஆவது நிமிடத்தில் கோகோரின் முதல் கோல் அடித்தார். இதற்கு அல்ஜீரியா அணி வீரர்களால் முதல் பாதியில் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் பரபரப்பாக தொடங்கிய இரண்டாவது பாதியில் நம்பிக்கையுடன் போராடிய அல்ஜீரிய அணிக்கு இஸ்லாம் சலிமணி ஒரு கோல் அடித்துப் போட்டியை சமன் செய்தார். இதன் பின் கடைசிவரை போராடிய ரஷ்ய வீரர்களால் கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. இதையடுத்து போட்டி 1:1 சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் ஏற்கனவே 3 புள்ளி பெற்றிருந்த அல்ஜீரியா அணி, 1 புள்ளி கூடுதலாகப் பெற்று 4 புள்ளிகளு டன் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

(த)



## வென்றது டயமன்ஸ்



யாழ்ப்பாணம், ஜூன் 28
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இதில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-23)

# வட்டுக்கோட்டை காந்திஜி, மேரிஸ் அணிகள் ஆட்டங்களில் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 28
இளவாலை புனித ஹென்றிய ரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென் றிஸ் விளையாட்டுக்கழகத் துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரின் ஆட்டங்கள் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம் பெற்று வருகின்றன.
நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்ற ஆட் டங்களில் வெற்றி பெற்ற அணி களின் விவரங்கள் வருமாறு:-
முதலாவது போட்டியில் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதல் பாதி ஆட்டத்தில் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழக வீரன் சுரேந்திரன் 8ஆவது, 27 ஆவது நிமிடங்களில் தனக் குக் கிடைந்த வாய்ப்புகளைச் சரியான முறையில் பயன் படுத்தி, இரண்டு கோல்களை அடித்தார்.
ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது வட் டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற் றிருந்தது.
இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தமது அணிக் கான கோலைப் பெற கடு மையாக மோதிக்கொண்ட போதும் எதுவித கோல்களை யும் பெற முடியவில்லை.
ஆட்ட முடிவில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதுபோட்டியில்அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காந்திஜி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
ஆரம்பம் முதலே போட்டியில் காந்திஜி விளையாட்டுக்கழகத் தின் ஆதிக்கம் நிறைந்து இருந் தது.
முதல் பாதி ஆட்டத்தின் 3ஆவது நிமிடத்தில் காந்திஜி விளை யாட்டுக்கழக அணி வீரன் சதீசன் தனது அணிக்கான முதலாவது கோலைப் போட் டார். பதிலுக்கு தமது அணிக் கானகோலைப்பெற்றிடவேண் டும் என்ற எண்ணத்துடன் அராலி திருமகள் விளையாட் டுக்கழக அணி எதிர் அணி யின் கோல் பரப்பினை முற்று கையிட்டது. அது காந்திஜி விளையாட்டுக்கழக அணி யின் பின் கள வீரர்களால் தடுக்கப்பட்டது.
இதன்போது 20 ஆவது நிமி டத்தில் காந்திஜி விளையாட் டுக்கழக அணி வீரன் மயூரன் தனக்கு கிடைந்த சந்தர்ப்பத் தைச் சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக் கான 2 ஆவது கோலைப் போட்டார்.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம் பமானபோது அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணியி னர் கோல் பெறுவதற்காகக் கடுமையாக போராடினர்.
இரண்டாம் பாதி ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் காந்திஜி விளையாட்டுக்கழக அணியின் லோகராஜா தனது அணிக் கான 3 ஆவது கோலைப் போட்டார்.
ஆட்ட நேர முடிவில் காந்திஜி விளையாட்டுக்கழக அணி யினர் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மூன்றாவது ஆட்டத்தில் நாவாந் துறை சென்.மேரிஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
முதற்பாதி ஆட்டம் ஆரம்பித்து 9ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெனற் தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டார்.
13ஆவது நிமிடத்தில் நிதர் சனும் அன்ரன் சாள்ஸும் அடுத்தடுத்துக் கோலை அடிக்க முதல் பாதி ஆட்டத்தில் சென்.மேரிஸ் விளையாட் டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது பொற்பதி விளையாட்டுக்கழக அணி தமது அணிக்கான கோலைப் பெற்றிட வேண்டும் என்ற எண் ணத்துடன் தமது ஆட்டத்தை வேகப்படுத்தியது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் விஸ்வரூபம் கொண்ட சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெனற் 40ஆவது, 44ஆவது, 48ஆவது நிமிடங் களில் அடுத்தடுத்து 3 கோலை அடித்தார்.
பதிலுக்குப் பொற்பதி விளை யாட்டுக்கழக அணியினர் தமது அணிக்கான கோலைப் பெற எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட னர். சென்.தோமஸ் விளை யாட்டுக்கழக அணியின் பின் கள வீரர்களால் அது தடுக்கப் பட்டது.
இதன்போது ஆட்டத்தின் 54 ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜேம்ஸ்மில்லா தனது அணிக்காக மேலும் ஓர் கோலை அடிக்க ஆட்ட நேர முடிவில் சென்.மேரிஸ் விளை யாட்டுக்கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## கிளிநொச்சி ஐக்கியம், றோயல் உதைபந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 28
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப் படும் பிரிவு- II இற்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட் டித் தொடரின் ஆட்டங்களில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழகம், கிளிநொச்சி ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியவைவெற்றிபெற்றுள்ளன.
கடந்த வாரம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத் தில் முதலில் இடம்பெற்ற ஆட் டத்தில் முல்லைத்தீவு உதய சூரியன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளி நொச்சி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் கிளிநொச்சி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூநகரி ஐக்கிய விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## நீக்கிலஸ், றோயல், ஐக்கியம் வென்றன அசத்தல் ஆட்டத்தால்

றொப்பாஸ் நிறுவனத்தின் அனு சரணையுடன் சவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழ கம், மகாத்மா சனசமூக நிலை யம் என்பன யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந் தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட் டங்கள் மகாத்மா விளையாட் டுக்கழக மைதானத்தில் மின் னொளியில் இடம்பெற்று வரு கின்றன.
கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங் கள் வருமாறு:-
நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட் டுக் கழக 'பி' அணிக் கும் யூனியன் விளை யாட்டுக் கழக அணிக் கும் இடையிலான ஆட் டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளை யாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது. ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணிக்கும் வட்டுக்கோட்டை விளையாட் டுக்கழக அணிக்கும் இடையி லான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக் கில் வெற்றி பெற்றது.
அரியாலை ஐக்கிய விளையாட் டுக்கழக அணிக்கும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையி லான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வி காண்பதற்கா கச் சமநிலை தவிர்ப்பு உதை கள் வழங் கப்பட்டன.
இதில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## வலைப்பந்தாட்டம் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 28
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 26 ஆவது தேசிய மட்ட விளையாட்டுப்போட் டிகளில் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை நாளை ஞாயிற்றுக்கிழமை களுத்துறை மாவட்டத்தில் இடம் பெறவுள்ளன.
மேற்படி போட்டியில் பங்கு பற்றுவதற்காக யாழ்.மாவட்ட அணியினர் நேற்று வெள்ளிக் கிழமை களுத்துறைக்குப் பய ணம் ஆகினர். (23)


### விண்ணப்ப முடிவுத் திகதி மாற்றம்

முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2014/2015
புதிய பிரிவு ஆரம்பம்
மேற்படி விடயம் தொடர்பாக நேற்றைய பத்திரிகை விளம் பரத்தில் குறிப்பிட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியை 30.07.2014 எனக் கொள்ளவும்.
மேலதி தகவல்களுக்கு:
021 221 7092 தொடர்பு கொள்ளவும்.
(f/14826) (10)

### வீடு விற்பனைக்கு

இல.27.23 துரையப்பா லேன் ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணத்தில் (சுண் டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அரு கில்) 1¼ பரப்புக் காணியில் 4 அறை களுடன் கூடிய புதிய வீடு விற் பனைக்கு உண்டு.
தொடர்பு:
072 1717 855
(49416) (10)

### விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய டாஸ் ஒன் (Dash on) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
(49417) (10) தொடர்பு: 077 479 1740

### வீடு வாடகைக்கு

நகர மத்தியில் (சிறம்பியடி) வங்கி மற்றும் அரசாங்க உத்தியோகத்திலுள்ள மூவர் கொண்ட இளம் தம்பதியினருக்கு வசதியான தனியான சிறு வீடு தளபாட வசதியுடன் வீட்டுக்காரரின் வள வுடன் சேர்ந்த காணியில் வாடகைக்குள்ளது.
மேலும் வீட்டுக்காரருடன் சேர்ந்த வீட்டில் இரண்டு அறைகள் வங்கி மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு வாடகைக்குண்டு.
(49409) (10) தொடர்பு: 077 516 0291

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 02.06.2014 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது அன்பு தெய்வம்!



அமரர் இந்திராவதி வசந்தகுமார்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 29.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 01.07.2014 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இல.37, இராம நாதன் வீதி, "சரஸ்வதி மண்ட பத்தில்" (ராஜா கிறீம் கவுஸ்) நடைபெறும் மதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த துயரச் செய்திகேட்டு எமது இல்லத்துக்கு நேரில் வருகை தந்தும், தந்திகள், தொலைபேசி, தொலைநகல் மூலமும் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உள்நாட்டு, வெளிநாட்டு, அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் நேரில் வருகைதந்து இந்த அழைப்பை வழங்க முடியாததையிட்டு மனம் வருந்துகின் றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமகிருஸ்ணா பாடசாலை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்,
ப.வசந்தகுமார்
(தவிசாளர், நல்லூர் பிரதேச சபை)
(49415)(10)

### வீடு வாடகைக்கு

நல்லூர் செட்டித் தெரு 75/9 இல் அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு.
(49413) (10) தொடர்பு: 075 0700 185

### கடை வாடகைக்கு

230, கண்டி வீதி, சாவகச்சேரியில் 3 மாடி கட் டடத் தொகுதி வாடகைக்கு உண்டு வங்கி, நிதி நிறுவனங்களுக்கு உகந்தது. அமைவி டம், சாவ கச்சேரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக.
(49405) (10)
தொடர்பு: 077 318 8016

### மரண அறிவித்தல்

27.06.2014 பக்கம் 24இல் பிரசுரமாகிய சுந்தரம் குணராஜா என்பவருடைய மரண அறிவித்தலில் சுதாகரன் (மருமகன்) என்பதை சேர்த்து வாசிக்கவும்.
தவறுக்கு மனிக்கவும்.
(49411) (10)

### One Day Training Programme

Isometric Drawings in Auto CAD
Commence on:29-06-2014 Sunday
Lecturer By:K.N.Mugunthan(D/A)
Cert.in Auto CAD(2D-3D) Cert.in Advance 3D Modeling
University of Peradeniya University of Moratuwa
Architectural CAD Centre
Contact No:0718617972

### ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்

SKANDA WALK
01.07.2014 செவ்வாய் 7.30 மணிக்கு சுன்னாகம் நாகம்ஸ் தியேட் டரிலிருந்து பாடசாலை வரை.
அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்கவும். ஸ்கந்தா சமூகம்.
(f/14825) (10)

# வலிகாமம் கல்வி வலயம் தொடர்ந்தும் முதலிடத்தில்

வலி.வடக்கு, ஜூன் 28
வட மாகாண கல்வித் திணைக் களத்தினால் வலயப் பாட சாலை அணிகளுக்கு இடையே யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப் பட்டு வரும் தடகளப் போட்டி களில் மூன்றாம் நாளான புதன்கிழமை வரையான புள்ளிகள் அடிப்படையில் வலி காமம் கல்வி வலயம் 248 புள்ளிகளைப் பெற்று முதலி டத்தில் உள்ளது.

புதன்கிழமை வரை நடை பெற்ற போட்டிகளின் அடிப்படை யில் வலயங்களின் புள்ளிகள் வருமாறு:-

வலிகாமம் கல்வி வலயம்-248 புள்ளிகள், யாழ்ப்பா ணம் கல்வி வலயம்-234 புள்ளிகள், மன்னார் கல்வி வலயம்-153 புள்ளிகள், முல் லைத்தீவு கல்வி வலயம்-108 புள்ளிகள், வவுனியா தெற்கு கல்வி வலயம்-89 புள்ளிகள், வடமராட்சி கல்வி வலயம்-83 புள்ளிகள், தென்மராட்சிக் கல்வி வலயம்-59 புள்ளிகள், வவுனியா வடக்கு கல்வி வல யம்-54 புள்ளிகள், கிளி நொச்சி கல்வி வலயம்-48 புள்ளிகள், துணுக்காய் கல்வி வலயம்-36 புள்ளிகள், மடு கல்வி வலயம்-30 புள்ளி கள், தீவகம் கல்வி வலயம்-03 புள்ளிகள். (த-86)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றன. பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் தனது திறமையை வெளிப்படுத்தும் வீராங்கனை ஒருவர். (த-20)

## தேசிய மட்டக் கிரிக்கெட் இன்றும் நாளையும் கொழும்பில்

யாழ்ப்பாணம், ஜூன் 28
விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தேசிய மட்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமையும் நளை ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு விளையாட்டு அமைச்சு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்காக வடமாகாண அணி யினர் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்புக்குச் சென்றுள்ளனர். (த-23)

# கிண்ணத்தை வென்றது மன்னார் கில்லறி அணி

> மன்னார் கில்லறி விளை யாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

யாழ்ப்பாணம், ஜூன் 28
மூன்றாம்பிட்டி புனித அந் தோனியார் ஆலயத்தின் திரு விழாவை முன்னிட்டு மூன் றாம்பிட்டி சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத் திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட் டத்தில் மன்னார் சாவற்கட்டு கில்லறி விளயாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மூன்றாம்பிட்டி சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக ைமதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் சாவற்கட்டு கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் மன்னார் கில்லறி விளை யாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற் றுச் சம்பியனானது.

சிறந்த வீரனாக கில்லறி விளை யாட்டுக்கழகத்தைச் சேர்ந்த குட்டி தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக கில்லறி விளையாட்டுக்கழகத் தைச் சேர்ந்த கரன் தெரிவு செய்யப்பட்டார்.

சிறந்த அணியாக இலுப்பைக் கடவை அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் விளையாட் டுக்கழகம் தெரிவு செய்யப் பட்டது.

வளர்ந்து வரும் வீரருக்கான விருதை விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அலெக்ஸ் பெற்றுக் கொண்டார். (த-23)



## வென்றது சென்.சேவியர்

யாழ்ப்பாணம், ஜூன் 28
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத் தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்று வருகின் றன.

புதன்கிழமை இடம்பெற்ற ஆட் டத்தில் சென்.சேவியர் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளை யாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்.சேவி யர் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## அரியாலையில் இன்று தாச்சிப் போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28
அரியாலை சனசமூக நிலை யத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத் தப்படும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டி இன்று சனிக் கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத் தில் ஆரம்பமாகின்றது.

மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 6.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் மயிலிட்டி கண்ணகி விளை யாட்டுக் கழக அணியைஎதிர்த்து நவாலி தென்றல் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.20 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் உதயசூரி யன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 28
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப் படும் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு முல்லைத்தீவு உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம்பெறவுள்ளது. இதில் முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 28
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப் படும் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட பெண்களுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 28
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப் படும் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கிளி நொச்சி உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 28
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின் றன.

இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 28
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழ கம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞான முருகன் விளையாட்டுக்கழக 'பி'அணி மோதவுள்ளது. (த-23)

# ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 28
இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரியின் 107 ஆவது அண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட் டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத் தும் 11 பேர் பங்குபற்றும் வில கல் முறையிலான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம் பெற்று வருகின்றன.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங் கள் வருமாறு:-

ஞானகலா விளையாட்டுக்கழக அணிக்கும் சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக் கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோல் களைப் பெற்றமையால் ஆட் டம் சமநிலையில் முடிவடைந் தது.

வெற்றி தோல்வியை நிர்ணயிப் பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் ஞானகலா விளையாட் டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது.

விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் யங்ஹென் றிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணி யினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியை நிர்ணயிப் பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் யங்ஹென்றிஸ் விளை யாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது.

றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் சென். பீற் றர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட் டத்தில் றேஞ்சர்ஸ் விளை யாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணிக்கும் சென். நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில்உடுப்பிட்டியுத்விளை யாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது. (த-23)

# ஆண்களில் ஜஸ்மினன், பெண்களில் நிதர்சனா 2014 ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீரர்கள்



மாகாணச் சம்பியனான யாழ்.கல்வி வலய அணிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் ஒலிம்பிக் வீரர் எதிர் வீரசிங்கம் வெற்றிக் கேடயத்தை வழங்கிக் கௌரவித்தார். (த-20)

யாழ்ப்பாணம், ஜூன் 28
வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 7ஆவது தடகளப் போட்டிகளின்போது சிறந்த தடகள வீரர்கள், வீரங்கனைகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள் பிரிவில் 2014 ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீரனாக யாழ்.கல்வி வலயத்தை சேர்ந்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் வி.யஸ்மினன் தெரிவானார்.

பெண்கள் பிரிவில் 2014 ஆம் ஆண்டின் சிறந்த தடகள வீராங்கனையாக முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த வித்தியானந்தாக் கல்லூரி மாணவி ஜே.நிதர்சனா தெரிவானார்.

15வயது ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அருணோதயக் கல்லூரி மாணவன்.எம்.கஜவரன் 662 புள்ளியைப் பெற்றுத் தெரிவானார். அதே ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவன் கே.டிலக்சன் 672 புள்ளியைப் பெற்றுத் தெரிவானார்.

17 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.மத்திய கல்லூரி மாணவன் பி.நிருஜன் 677 புள்ளியைப் பெற்றுத் தெரிவானார். அதே ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஹாட்லிக் கல்லூரி மாணவன் வை.அபிதரன் 749 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார்.

19 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.மத்திய கல்லூரி மாணவன் டி.ஜோய் ஆகாஷ் 696 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார். அதே ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலய மாணவன் எஸ்.வேனிலன் மார்க் 886 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார்.

21 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக முல்லைத்தீவு கல்வி வலயத்தை சேர்ந்த புதுகுடியிருப்பு மத்திய கல்லூரி மாணவன் எஸ்.விதுஷன் 784 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார். அதே ஆண்கள் பிரிவில் சிறந்த தடகள வீரனாக யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் வி.யஸ்மினன் 892 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார்.

15 வயது பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி ஏ.அபினயா 599 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார். அதே பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேந்த இராமநாதபுரம் அ.த.க.பாடசாலை மாணவி பி.பவித்திரா 753 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார்.

17 வயது பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த விசுவமடு மகா வித்தியாலய மாணவி பி.தனுஜா 700 புள்ளிகளைப் பெற்று தெரிவானார். அதே பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி எஸ்.ஆரணி 770 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார்.

19 வயதுப் பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த இளவாலை கன்னியர் மட மகா வித்தியாலய மாணவி ஏ.அனற் 700 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார். அதே பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த வித்தியானந்தாக் கல்லூரி மாணவி ஜே.நிதர்சனா 819 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார்.

21வயதுப் பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாக கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி கே.சமிதா 666 புள்ளிகளைப் பெற்று தெரிவானார். அதே பெண்கள் பிரிவில் சிறந்த தடகள வீராங்கனையாகத் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி ஆர்.அகல்யா 730 புள்ளிகளைப் பெற்றுத் தெரிவானார். (த-23)

## யாழ்.கல்வி வலயம் மாகாணச் சம்பியன்

யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை இடம்பெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 7ஆவது தடகளப் போட்டியில் யாழ்.கல்வி வலயம் 1175 புள்ளிகளைப் பெற்று சம்பியனானது.

கடந்த 5 தினங்களாக நடைபெற்று வந்த இந்தப் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தன. இதில் வலிகாமம் கல்வி வலயம் 800 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், வடமராட்சிக் கல்வி வலயம் 550 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன.

மன்னார் கல்வி வலயம் 321 புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்தையும், முல்லைத்தீவுக் கல்வி வலயம் 273 புள்ளிகளைப் பெற்று 5 ஆம் இடத்தையும், வவுனியா தெற்கு கல்வி வலயம் 263 புள்ளிகளைப் பெற்று 6ஆம் இடத்தையும், கிளிநொச்சி கல்வி வலயம் 219 புள்ளிகளைப் பெற்று 7ஆம் இடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயம் 176 புள்ளிகளைப் பெற்று 8ஆம் இடத்தையும், தென்மராட்சிக் கல்வி வலயம் 159 புள்ளிகளைப் பெற்று 9ஆம் இடத்தையும், தீவகக் கல்வி வலயம் 73 புள்ளிகளைப் பெற்று 10ஆம், இடத்தையும், மடு கல்வி வலயம் 62 புள்ளிகளைப் பெற்று 11ஆவது இடத்தையும், துணுக்காய் கல்வி வலயம் 59 புள்ளிகளைப் பெற்று 12ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. (த-23)




வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் கடந்த ஐந்து தினங்களாக யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வந்தன. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்துக் கல்வி வலயங்களில் இருந்தும் வீர, வீராங்கனைகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டு தமது திறமைகளை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்தி வெற்றிகளைக் குவித்தனர். நேற்று இடம்பெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டி கடும் சவால் மிகுந்ததாக அமைந்தது. போட்டியாளர்கள் அனைவரும் தமது உச்சக்கட்டத் திறமையை வெளிப்படுத்தியிருந்தனர். இந்தப் போட்டியில் இலக்கை எட்ட வேகமாகப் பறக்கும் வீரர்கள் இவர்கள். (த-20)


**மாபெரும் மலிவு விற்பனை**
அனைத்து நூல்களுக்கும் 20% விலைக்கழிவு வழங்கப்படுகிறது.
**இறுதிச் சந்தர்ப்பத்தையும் தவற விடாதீர்கள் இன்னும் ஒரு சில நாள்கள் மட்டுமே!**
**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**கருத்தரங்கு**
**A/L - 2014**
**ECONOMICS**
ஆசிரியர் :
**வீ.பரமேஸ்வரன்**
B.BA (Hons.), MA (Econ)
St.Joseph's College, Colombo - 10
இடம் : வீரசிங்கம் மண்டபம்-யாழ்ப்பாணம்
காலம் : July 6 Sunday (6/7/2014)
8.00 மணி முதல் 5.00 மணி வரை
கட்டணம் : 500 ரூபா
குறிப்பு : அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்தல் வேண்டும்
அனுமதிகளை பெற்றுக்கொள்ள
K-AIMS
147-2/2 K.K.S.Road
(Top of HSBC Bank, Jaffna)
Gana - T.P: 772485731
V.சாபீஸ்வரன்
T.P: 774536951
776701601

FALC FRENCH LANGUAGE CENTRE
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
021 320 2973
0779 789 456

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Aat (srilanka)
Foundation,intermediate,final
Qualification:- GCE O/L 6 PASSES Or GCE A/L 2PASES
MEDIUM - TAMIL & ENGLISH
further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept,
464, Hospital Road, Jaffna
021 222 3382


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.